JL
Tom 211, N36
N36.1.5-7.
162274

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

தாது ௵ ஆடி ௴
JULY. 1936

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

**41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதருஸ்.**

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—(

# பொருளடக்கம்


1. பாஷாபிவிருத்தி முறைகள் ... ... 125
   —எஸ். ஜெகன்னாதன்
2. நமது ஆரம்பக் கல்வியின் போக்கு ... ... 136
   —S. T. இராமானுஜ அய்யங்கார்
3. ஆரம்பக் கல்வியில் ஏற்படும் "நஷ்டமும் தேக்கமும்" ... 139
   —T. V. வெங்கட்ராமன் B.A., L.T.
4. நல்லொழுக்கம் ... .... ... 144
   —C. G. Ramachandra Rao
5. மிதமான நோக்கமும் அதிக சித்தியும் ... ... 145
6. கல்விச் செய்தியும் குறிப்பும் ... ... 149
7. பத்திராதிபர் குறிப்பு ... ... ... 151
8. ரக்ஷிணைப்படம் ... ... ...


## கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷால்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்

# பாலர் கல்வி

தொகுதி 1] 1936௵ ஜூலைமீ [பகுதி 5


## பாஷாபிவிருத்தி முறைகள்


எஸ். ஜெகன்னாதன்.


1. குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்
   மழலைச்சொல் கேளா தவர்.

2. செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
   செல்வத்து ளெல்லாந் தலை.

3. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்
   வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்....

நமக்கு வேண்டிய முறைகள் எல்லாம் மேலே காட்டிய சூத்திரங்களிலே அமைத்துள்ளன. பேச்சும் பகுத்தறிவுமே நம்மையும் மிருகத்தையும் பிரித்து மானிட ஜன்மத்தைப் பெறுதற்குரிய ஜன்மங்களில் மிகவும் மேலானதாகக் கருதும்படி செய்விக்கின்றன. சின்னஞ் சிறு குழந்தையின் பேச்சு நமக்கு அளவில்லாத ஆனந்தத்தையும் ஞானத்தையும் விளைவிக்கிறது. குழந்தையின் தேக மன வளர்ச்சியைக் கவனித்து வரும் நாம் குழந்தை பேசும் அடியிற்கண்ட சொற்களைக் கவனித்தால் அவை எப்பருவத்தில் அப்பியாசம் செய்யப்பட்டு வருகின்றன என்பதை நாம் ஊகிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| அம்மா | வித்தை | எக்கு | ஒப்போப்ட்டா |
| அப்பா | ஆப்பூ | இறை | ஆத்து |
| அம்மு | தோதோ | தண்ணி | விச்சி |
| தாதா | ஆச்சு | வென்னி | தேஙா |
| வாவா | போச்சு | எலை | பாப்பி |
| அத்தை | இக்கா | சட்டை | இன்னூண்ணு |
| பாட்டி | வான்னு | ஆப்பே | இன்னும் |
| அண்ணு | தாச்சு | ஆட்டேட்டி | இல்லே |

162274

T 2, 1 136



| | | | |
|---|---|---|---|
| ஆய | போ | உப்பு | அப்பிச்சி |
| ஆனே | பட்டு | தோ தோ வா | இதோ |
| பாபா | சக்கே | தா | |
| மாமா | இக்து | நா | |

குழந்தை நாம் பேசுவதைக் கேட்கிறது. சப்தங்களைப் பலதரம் கேட்டு முதல்தரம் ஒன்றைத் திரும்பச் சொல்லும்பொழுதுதான் நமக்கு அளவில்லாத சந்தோஷம் உண்டாகிறது. "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" என்பது போலப் புதிதாக ஒருதரம் சொன்னதைப் பலதரம் சொல்லித் தானும் சந்தோஷப்படுகிறது. இப்பொழுது இவை ஞாபகத்தில் வைக்கப்படுகின்றன. மறுபடி சமயம் வந்த காலத்தில், உதாரணமாக ஒரு நாயைப் பார்த்தவுடன் "தோ தோ" என்று சொல்லுகிறது. "அம்புலி மானே வா வா" என்று சொன்னவுடனே தனது கைகளையும் ஆகாயத்தில் காண்பித்துச் சந்திரனைக் கூப்பிடுகிறது. இம்மாதிரி ஆத்மசக்தி அபிவிருத்தியடைகிறது. ஓர் ஆச்சரியத்தை விளைவிக்கிறது. எல்லாம் ஈசுவர சிருஷ்டியின் விநோதம் என்று சொல்லி நாம் சமாதானப் படுத்திக்கொள்ளுகிறோம். இம்மாதிரி ஆத்மசக்தி அதிகரித்து வருகிறதைக் கவனிக்க உபாத்தியாயராகிய நாம் ஆத்மசக்தியை அபிவிருத்தி செய்ய அக்குழந்தை நமக்குச் சில முறைகளைச் சொல்லிக் கொடுக்கிறதாகவே யான் எண்ணிவருகிறேன். குழந்தையே குருவிற்குக் குரு ஆகிறது என்றே சொல்லவும் சொல்லலாம்.

### குழந்தையின் பாஷையை அபிவிருத்தி செய்ய சில வழிகள்

1. கதை சொல்லுதல்
2. பாட்டு சொல்லுதல்
3. படம் பார்த்தல்
4. இயற்கை விநோதங்களைப் பார்த்தல்
5. வெளியே அழைத்துச் செல்லுதல்
6. விளையாடுதல்
7. உறவினர்கள் குழைந்தைகளுடன் சம்பாஷித்தல்
8. வீட்டுப் பண்டம், வீட்டு விசேஷம், உற்சவம், பண்டிகை, பொம்மைக் கொலு, கலியாணம் இவற்றைப்பற்றிப் பேசுதல்.

இம்மூலமாக குழந்தைகளின் பாஷை வளருவதை நாம் காணலாம் இதற்கேற்ற சாதனங்கள் தமிழ்நாட்டில் பல உள்ளன. குழந்தை அழுதால் பாட்டி குழந்தையை எடுத்துக் கொண்டுவந்து, "தோ தோ பார், காக்கா பார்" என்று சொல்லி வெளியே அழைத்து வந்துவிடுகிறாள். முக்கியமாக பேச்சு வளர்வதற் கேற்றபடி செவிச் செல்வத்தைக் கொடுத்து வருகிறாள். அவற்றைக் கேட்கிற குழந்தை நாப்பழக்கத்தினால் அப்பேச்சை அப்பியாசம் பண்ணி, சமயம் வாய்த்த காலத்தில் அவைகளைப் பிரயோகம் பண்ணுகிறது. இம்மாதிரியே 2 வயது குழந்தைகளின் வார்த்தை 180 வரையிலும், 5 வயதுக் குழந்தைகளின் வார்த்தைகள் 540 வரையிலும் இருப்பதாக யான் அறியலானேன்.



இவை ஊருக்கு ஊர், குடும்பத்திற்குக் குடும்பம் மாறுபடுவது இயல்பு ஆகும். இருக்கிற இடம், சுற்றிலுமுள்ள விசேஷம், கேட்பதற்கும் சொல்லுவதற்கும் உள்ள அவகாசம், அநுபவம் இவைகளை ஒட்டிப் பேச்சு வளர்ந்து வருகிறது. இவ்வாறு கணக்கெடுப்பது உபாத்தியாயருக்கு மிகவும் உபயோகமானது. "கலைமகள் சித்திரப்படங்கள்" என்ற பத்து படங்கள் மயிலாப்பூர்க் கலைமகள் கம்பெனியாரால் ஆறு அணுவிற்குக் கொடுக்கப்படுகின்றன. அவை கதை சொல்லுதலுக்கும், சம்பாஷணைக்கும் உபயோகப்படும்.

### பாலர் புத்தக ஆராய்ச்சியும், பாலர் பாஷையும்

ஏனெனில் தற்காலத்தில் வெகுவாய் வெளிவந்துள்ள பாலர் புத்தகங்களைக் கவனிக்க அடியிற்கண்ட விஷயங்கள் வெளிவருகின்றன.

| | |
|---|---|
| 5 வயதுக் குழந்தைகளுக்குத் தெரியவருகின்ற வார்த்தைகள் | 540 |
| ஒரு டஜன் பாலர் புத்தகங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் | 1800 |

சுமார் 34 பாலர் புத்தகங்களில் ஸெகண்டரி கிரேட் உபாத்தியாயர்கள் கணக்கெடுத்த விஷயங்கள்.

| | |
|---|---|
| தங்களுக்கே தெரியாத வார்த்தைகள்<br>குழந்தைகளுக்கு அர்த்தம் விளங்கக் கூடாத வார்த்தைகள்<br>படத்திற்கும் பதத்திற்கும் பொருத்தமில்லாத வார்த்தைகள் | 800 |

அரிச்சுவடி புஸ்தகத்திற்கும் அரும் பதவுரை அகராதி எழுதும்படியான காலம் வந்துவிடுமோ என்று திகைக்க நேரிடுகிறது.

மேலும் தமிழ் பாஷையிலுள்ள 247 எழுத்துக்களில் சுமார் 150 எழுத்துக்களே பாலர் சொற்களில் திரும்பத் திரும்ப வந்துள்ளன. சில 90, 100 தடவைகளும், சில மிகக் குறைந்த தடவைகளுமே வந்துள்ளன. பாலர் வகுப்புப் பாஷைப் பாடத்தைப் பற்றின விஷயங்களைப்பற்றி உபாத்தியாயர்கள் லாங்க்மன்ஸ் க்ரீன் அண்டு கம்பெனியாரால் வெளியிடப்பட்டுள்ள முதல் வகுப்பு கிண்டர் கார்ட்டன் வாசக புத்தகத்தில் காணலாம்.

### ஆரம்பப் பள்ளிக்கூட பாஷாபிவிருத்தி முறைகளைப் பற்றின ஆராய்ச்சி அவசியம்

நமது நாட்டில் எத்தனையோ தமிழ் வித்துவான்கள் அளவுகடந்த ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். தமிழ்நாட்டிற்கே அவர்கள் ஒப்பற்ற ஆபரணங்களாக விளங்குகிறார்கள். அவர்கள் இருப்பது நமது பாக்கியமே. ஆயினும் அவர்களது ஆராய்ச்சியின் இரசத்தைக் கல்வியிற் சிறந்த சிலரே பருகுகின்றனர். இவர்களது சங்கியையோ எம்மாத்திரம்? படிப்பில்லாத பல்லாயிரம் பாமர ஜனங்கள் இருக்கிறார்களே. அவர்கள் எப்படித் தமிழ்ச் சுவையின் இன்பத்தை அநுபவிப்பது! தினசரி ஆரம்பப் பள்ளிக்கூடத்

திற்கு வந்து படித்துவருகிற பத்துப் பன்னிரண்டு வயதுள்ள பாலர்கள் இவற்றை எப்படி நாளடைவில் அனுபவிப்பது? இதுபோன்ற விஷயங்களில் ஆராய்ச்சி அவசியமெனப் புலப்படுகிறது. இவர்களில் ஒரு பகுதியினராவது இன்ப ரசத்தைப் பானம் பண்ணவேண்டாமா? தற்சமயம் பெரும்பாலராயுள்ள வித்துவான்களும் சரி, ஆங்கிலம் படித்த நிபுணர்களும் சரி, தமிழ்நாட்டில் பிறந்துள்ள தமிழ் மக்களுக்குத் தாய்பாஷையாகிற தமிழ் பாஷையைக் கற்றுக்கொடுக்கவும், அதனை வளர்க்கவும், அதில் ஆசை யுண்டு பண்ணவும் தக்கபடி முறைகளைக் கண்டறிவதில் ஆராய்ச்சி செய்கிறவர்களும் இருக்கிறார்கள் என்று சொல்ல முடிவதற்கில்லை. அவர்கள் எங்கேனும் இருப்பார்கள் என்று நினைத்துக்கொள்வோம்.

ஆராய்ச்சிக்கு முதன்மையாக வேண்டியது ஆராய்ச்சி செய்வதில் ஓர் உற்சாகம், ஆராய்ச்சி செய்யும் வழிகளைக் கண்டறியப் பாடுபடுதலும் சிரத்தையும் மிக்க அவசியம். குழந்தையின் கல்வியைக் குறித்து ஆராய்ச்சி செய்ய குழந்தைகளே இன்றியமையாத சாதனங்கள் ஆவார்கள். எவ்விதப் புஸ்தக மிருப்பினும் ஆராய்ச்சிக்கேற்ற விஷயங்கள் அக் குழந்தைகளுக்குச் சரியானவா என்று குழந்தைகளிடமிருந்தே நேரில் கண்டறிதல் அத்தியாவசியமாகும். ஆகவே ஆராய்ச்சி நிபுணர்கள் குழந்தைகளுக்கு ஏற்ற உபாத்தியாயராகவும் இருக்கவேண்டுமென்பது புலப்படுகிறது. மேலும் அவர் ஓயாமல் பார்க்கிறதும், கேட்கிறதும், படிக்கிறதும், குறிப்புவைக்கிறதும், குறிப்புக்களைச் சேர்ப்பதும், பிரிப்பதும், கணக்குகள் வைத்துக்கொள்வதும், இம்மாதிரி விஷயங்களில் சதாகாலம் கவனம் செலுத்துகிறவராயிருக்கவேண்டும்.

தற்காலத்தில் இதற்கேற்ற அவகாசம், சிரத்தை, அவா சிலருக்கே தான் இருந்துவருகின்றன. மூன்றுமாத காலங்களில் ஐந்து ஆறு புஸ்தகங்கள் ஒரு வரிசைக்கிரமமாக வெளிவந்துவிடுகின்றன. ஒரே ஒரு ஆசிரியர் வருஷத்திற்கு ஒரு வரிசைக்கிரமமான வாசக பாடங்களைக் கொண்டுவரக் கூடிய திறமையுள்ளவர்களாகவு மிருக்கிறார்கள். ஆயினும் முன்சொன்ன மூன்றுமாத காலத்திலோ, பின்சொன்ன ஒவ்வொரு வருஷத்திலோ பாஷைப் பாட சம்பந்தமான எந்தவித ஆராய்ச்சியை அனுசரித்துப் புஸ்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்று சொல்லுவதற்கு வெளிப்படையாக ஒன்றும் தெரியவில்லை. இருப்பினும் இந்த தொழிலில் ஓயாமல் உழைப்பவருக்குச் சிற்சில கருத்துகள் தோன்றிவருகின்றன. அவைகளில் சிலவற்றை இங்கு சுருக்கமாகச் சொல்லுவோம்.

## 1. பத்துப் பன்னிரண்டு வயதுக் குழந்தைகளின் வார்த்தைகளைக் கணக்குச் செய்தல்

ஐந்தாவது வகுப்புப் படிக்கிற குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் நாற்பது பக்கங்களடங்கிய ஒரு நோட்டுப் புஸ்தகம் கொடுத்து அதை வார்த்தைகள் எழுதுவதற் கேற்றபடி விரிக்கச் சொல்லிக்கொடுத்து எவ்வித



வார்த்தைகளை எழுதவேண்டுமென்பதற்கு அடியிற்கண்ட குறிப்புகளையும் எழுதிக் கொடுக்க நேரிட்டது.

பெயர்ச் சொல்
செய்கையைக் காட்டும் சொல்
குண விசேஷத்தைக் காட்டும் சொல்

} இவற்றை எழுதவும், அடியிற்கண்ட விஷயங்களை யோசித்து அவைகள் சம்பந்தமான வார்த்தைகளை எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
| வீடு | உறவினர் | ஹிஸ்டரி | வேடிக்கை |
| பாகம் | தொழிலாளர் | பூகோளம் | விளையாட்டு |
| அலங்காரம் | ஆயுதம் | கதை | உத்தியோகம் |
| சமையல் | பூஜை | ஸிவிக்ஸ் | கூத்து |
| சாமான் | கலியாணம் | நேசர் | பாட்டு |
| நகை | நாள் | கணக்கு | சினிமா |
| பாத்திரம் | மாதம் | டிராயிங் | நோய் |
| உடுப்பு | பள்ளிக்கூடம் | கைவேலை | பிச்சைக்காரர் |
| காய்கறி | வயல் | டிரில் | தின்பண்டம் |
| மரம் | தபால் | பிரயாணம் | சாமான் |
| ஆகாரம் | ரயில் | யாத்திரை | மருந்து |
| தெரு | முனிஸிபாலிடி | கால்நடை | குளத்தங்கரை |
| மிருகம் | ஆகாசம் | பேச்சு | ஆற்றங்கரை |
| பட்சி | பகல் | புஸ்தகப் படிப்பு | |
| ஊர்வன | இரவு | கேட்டது | |
| தேகம் | தன்னைப்பற்றி | பத்திரிகை. | |

ஒவ்வொரு பக்கத்தையும் இரண்டாகப் பிரித்துக்கொண்டு வார்த்தையை எழுதிவரவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | 1 | கெ கே | 14 | நீ | 27 | ஒ | 39 |
| ஆ | 4 | கை...கௌ | 15 | ப | 28 | ட | 40 |
| இ | 6 | ச | 16 | பா,பி,பீ | 30 | | |
| ஈ, உ } | 8 | சா...சூ | 18 | பு | 31 | | |
| | | செ | 19 | ம, மா | 32 | | |
| ஊ, எ } | 9 | சே...சௌ | 20 | மி | 33 | | |
| | | த | 21 | ய,ர,ல | 34 | | |
| ஏ ... ஔ } | 10 | தா...தூ | 23 | வ | 35 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 11 | தெ | 24 | வா, வி | 36 |
| | | ந, நா | 25 | வீ...வௌ | 37 |
| கா ... கூ | 13 | நி | 26 | ஜ, வ, ஷ | 38 |

மேற்கண்டவாறு ஏற்பாடுகள் செய்து சுமார் 6 வாரம் தங்களுக்குத் தெரிந்த வார்த்தைகளை எழுதிவந்ததில் சில விஷயங்கள் வெளியாயின. முக்கியமாக குழந்தைகளுக்குச் சகஜமான வார்த்தைகள் எந்த விஷயத்தைக் குறித்துப் பல வார்த்தைகள் சீக்கிரமாக ஞாபகம் வருகின்றன. ஒவ்வொருவனிடமுள்ள வார்த்தையின் சங்கியை எவ்வளவு? இவைபோன்ற விஷயங்கள் ஆகும். எனது வகுப்புக் குழந்தைகள் எழுதிவந்த வார்த்தைகளின் சங்கியை பின்வருமாறு.

| நெ. | சங்கியை | வயது | நெ. | சங்கியை | வயது |
|---|---|---|---|---|---|
| 1 | 1800 | 10 | 9 | 1000 | 10 |
| 2 | 1500 | 9 | 10 | 850 | 9 |
| 3 | 1400 | 10 | 11 | 850 | 11 |
| 4 | 1250 | 10 | 12 | 800 | 11 |
| 5 | 1150 | 10 | 13 | 800 | 11 |
| 6 | 1100 | 9 | 14 | 800 | |
| 7 | 1000 | 11 | 15 | 1215 | கீழ் வகுப்புக் (9) |
| 8 | 1000 | 10 | 16 | 930 | குழந்தைகள் (9) |

இவைகளை வரிசைப்படுத்திப் பார்த்ததில் மொத்தம் கிட்டத்தட்ட 4000 வார்த்தைகள் கிடைத்தன. ஏனெனில் சிலர் எழுதின வார்த்தைகளை மற்றும் சிலர் எழுதவில்லை. சுலபமான சில வார்த்தைகளை சில பிள்ளைகள் எழுதவில்லை. குழந்தைகள் வார்த்தைகளுக்குத் தக்க ஓர் அகாராதி ஏற்படுத்த முயற்சி செய்கிறவர்கள் குழந்தைகள் பேசுகிற வார்த்தைகளையே கணக்கெடுக்கவேண்டும்.

## ஒரே அர்த்தத்தைத் தரக்கூடிய சொற்களைக் கணக்கெடுத்தல்.


இரண்டாவதாக ஒரே அர்த்தத்தைத் தரக்கூடிய வேறு பதங்களைப் பொறுக்குவதில் கவனம் செலுத்தப்பட்டது. அதிலும் குழந்தைகள் தங்கள் திறமைகளைச் செம்மையாய்க் காட்டினர் என்றே சொல்லலாம். தமிழ் பாஷையில் இம்மாதிரி பல சொற்கள் இருப்பதை நேயர்கள் அறிந்திருக்கலாம்.

உதாரணம்: யானை, கரி, குஞ்சரம், வேழம், கஜம் . . .
குதிரை, பரி, அசுவம், துரகம் . . .

இவைகளைச் சேகரிக்க அடியிற்கண்ட முறை எளிதில் பலன் தரும். பாடம் கற்பித்துக்கொடுக்கையில் புதுப் பதங்களைக் கற்றுக்கொடுத்தல், அவற்றை வரிசைக்கிரமமாக எழுதி வைத்துக்கொள்ளுதல், உபாத்தியாயரே இவற்றைச் சித்திரங்களோடு அமைத்துக் காட்டுதல், இவைகளைச் சுவரில் தொங்கவிடக்கூடியபடி அமைத்தல் முதலியனவாகும்.




படத்துடன் விளக்குதல். உதாரணம்.





| | | |
|---|---|---|
| யானை | | |
| கரி | குதிரை | |
| குஞ்சரம் | பரி | பசு |
| வேழம் | துரகம் | கோ |
| கஜம் | அசுவம் | ஆ. |


| | | |
|---|---|---|
| காடு | | |
| வனம் | | |
| அரணியம் | நெருப்பு | பூ |
| கானகம் | அக்கினி | புஷ்பம் |
| அடவி | தீ | மலர் |

யான் இம்மாதிரி வார்த்தைகளைச் சேகரித்ததிலும் பல குழந்தைகள் இம்மாதிரி சேகரித்ததிலும் அடியிற்கண்ட புள்ளி விவரங்கள் தெளிவாயின.

| நெ. | வார்த்தைகள். | அதே வார்த்தை தரக்கூடிய மொத்த வார்த்தைகள். | நெ. | வார்த்தைகள். | அதே வார்த்தை தரக்கூடிய மொத்த வார்த்தைகள். |
|---|---|---|---|---|---|
| 1 | 400 | 1200 | 9 | 54 | 194 |
| 2 | 85 | 507 | 10 | 32 | 128 |
| 3 | 128 | 428 | 11 | 23 | 75 |
| 4 | 64 | 256 | 12 | 29 | 91 |
| 5 | 75 | 256 | 13 | 43 | 158 |
| 6 | 62 | 246 | 14 | 58 | 217 |
| 7 | 62 | 220 | 15 | 69 | 230 |
| 8 | 42 | 212 | 16 | (2to15) 257 | 1280 |

இம்மாதிரி வார்த்தைகளைச் சேகரிப்பதில் பிள்ளைகள் அதிக உற்சாகம் காட்டிவந்தார்கள். மேலும் யான் எழுதிய புஸ்தகங்களைப் பலதரம் பார்த்து அவற்றை ஞாபகம் வைத்துக்கொள்ளவும் முயற்சி செய்தனர். மேற்காட்டிய இரண்டு வித ஏற்பாடுகளிலும் சில குழந்தைகள் அதிக விசேஷ சிரத்தையும் ஊக்கமும் காட்டி வந்தது நிஜமாகவே சந்தோஷத்தைக் கொடுத்துவந்தது. மேன்மேலும் சித்திரம் வரைதலிலும் சிலர் தங்கள் முழுத் திறமையைக் காட்டிவந்தனர்.

## உபாத்தியாயர் படிப்பதைக் குழந்தைகள் கேட்டலும் விடுகவிகள் கட்டுதலும்.

நமது நாட்டில் வெகுகால முதற்கொண்டு தற்காலம் வரை பொது ஜனங்களிடையே பொழுது போக்குக்காக உபயோகப்படுத்தப்பட்டுவரும் புஸ்தகங்கள் சில உள்ளன. அவை பின்வருமாறு.

| | |
|---|---|
| விக்கிரமாதித்தன் கதை | நல்லதங்காள் சரித்திரம் |
| பன்னிரண்டு மந்திரி கதை | அல்லியரசாணி மாலை |
| கதைகள் பாடல்கள் | பஞ்சபாண்டவர் வனவாசம் |
| தேசிங்கு ராஜன் கதை | ஏணி ஏற்றம் |
| சிறுத்தொண்டன் கதை | கோவலன் கதை |

பிள்ளைகள், ஸ்திரீகள், கிழவர்கள் இவற்றைப் படித்து அனுபவித்து வருகிறார்கள். கதைப் பாடல்கள் என்பவைகள் வெகு திறமையாகவும், அழகாகவும் கேட்கக் கேட்க உற்சாகம் உண்டுபண்ணத்தக்கவாறும் எழுதப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் யான் இதைப் படித்துவருகிறதைப் பார்த்ததுண்டு. ஆகவே யானே இவற்றைப் படித்துப் பார்த்தேன். பல வருஷங்களாகச் சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் குழந்தைகளுக்கும் இவற்றைப் படித்துக் காட்டுவதுண்டு. குழந்தைகள் இவற்றைக் கேட்டுச் சந்தோஷிக்கிறார்கள் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

### அர்ச்சுனன் தபசு (பஞ்சபாண்டவர் வனவாசம்)

உதாரணம்

ஏழுபதடி கம்பமதில் ஏழிள நீரை வைத்தான்
ஏழிள நீர்மேலே ஏழு விளாம்பழம் வைத்தான்
ஏழுவிளாம் பழத்தின்மேல் எலுமிச்சங் கனிவைத்தான்
எலுமிச்சங் கனிமேலே ஏழுகொட்டைப் பாக்கு வைத்தான்
ஏழுகொட்டைப் பாக்குமீதில் ஏழு குண்டுமணி வைத்தான்
ஏழு குண்டுமணிமேலே கடுகுகளும் ஏழு வைத்தான்
ஏழு கடுகதன்மேலே செப்பூசி ஏழு வைத்தான்
ஏழு செப்பூசிகளின்மேல் செவ்வலரி ஏழு வைத்தான்
ஏழு செவ்வலரியின்மேல் ஏறினான் தேர்விஜயன்



ஒருகாலைத் தானூன்றி ஒருகால் முழங்காலில் வைத்தால்
கண்ணிரண்டு மூடியே கர்த்தனைத் தியானஞ் செய்தான்.

### (பட்சிகள் சமுத்திரராஜனுடன் சண்டைக்கு வருதல்)

காக்கை யொருவரிசை, கழுகோ ஒருவரிசை
அன்ன மொருவரிசை, ஆழ்வா ரொருவரிசை
பருந்தும் ஒரு வரிசை, பச்சைக்கிளி யொருவரிசை
மயில்கள் ஒருவரிசை, வல்லூறும் ஒருவரிசை
காடை யொருவரிசை, கௌதாரி யொருவரிசை
புல்புல் ஒருவரிசை, புறாக்கள் ஒருவரிசை
உள்ளா னொருவரிசை, ஊர்க்குருவி யொருவரிசை
நாரை யொருவரிசை, நாகணவா யொருவரிசை
கொக்கு ஒருவரிசை, கோட்டா னொருவரிசை
அந்தச் சமயத்தில் அனேகவித பக்ஷியெல்லாம்
அந்தந்தப் புறங்களிலே அணியணியாய்ச் சேர்ந்தனவே.


### (பிட்டுக்கு மண் சுமந்தது)

உதிர்ந்த பிட்டைத்தின்று ஒருகூடை மண்சுமந்து
போடுவார் ஒருதட்டு, பிட்டுஞ் சரியாகும்
மறுபடியும் தான்வருவார் வாணிச்சி அண்டையிலே
பிட்டெடுத்துத் தான்கொடுப்பாள் போரான ஒட்டருக்குப்
பிட்டுதின்று போவாராம் போடுவார் கட்டுமண்ணு
பிட்டுகளைத் தின்கிறதும் போகிறதும் வருவதுமாய்
ஒட்டன் திரிவதிலே உதிர்ந்த பிட்டும் சரியாச்சு.

விடுகவிகள்

விடுகவிகளைப் பார்த்துக் குழந்தைகள் மகிழ்ச்சி அடைகிறதை யான் கண்டதுண்டு. யானே அனுபவித்ததுண்டு. இவற்றில் நாம் சிரத்தை செலுத்துவது அவசியம்.

உதாரணம் அது என்ன?




1. கொத்துக் கொத்தாய்க் கொடியிலே காய்க்கும்,
கொடி முந்திரியு மல்ல,
சின்னஞ் சிறியதா யிருக்கும் குன்றுமணி யல்ல,
காய்ந்த சரக்கு ஆனாலும் கார மதிகமுண்டு
கொடியிலே பிறந்து கடையிலே வந்து நிற்கும்
மேல்நாட்டாரை மயக்கி இழுத்த
மாத்திரை இதுவே.



2. பல நிற சேலை கட்டியிருப்பாள்,
மோலாடை போட்டிருப்பாள்
தலைசிறுத்து உடல்பெருத்து
மணிபோன்றிருப்பாள், ஆனால் ஆடமாட்டாள்
கறிக்கு உதவுவாள் கனிக்கு உதவாள்
விருந்திற்கும் மருந்திற்கும் உதவுவாள்.

சகுனம் பார்த்தல்

3. கேட்கலாம் பார்க்கக்கூடாது, பார்க்கலாம் கேட்கக்கூடாது, பார்க்கலாம் கேட்கலாம், பார்க்கவும் கூடாது, கேட்கவும் கூடாது.



இவை போன்ற விடுகவிகளைச் சித்திரங்களுடன் எழுதி வகுப்புச் சுவரில் தொங்கவிடுவது நலம். அல்லது இவைகளைச் சிறு சிறு நோட்டுப் புஸ்தகங்களில் எழுதிக் குழந்தைகள் உல்லாசமாகப் படிக்கும் பொருட்டுக் கொடுத்து உதவுவது மேன்மையாக விருக்கும். 'கலைமகள்' என்ற பத்திரிகையில் இம்மாதிரி விடுகவிகள் சித்திரங்களுடன் கூடி வெளிவந்துள்ளன.


பாட்டுகளுக்குப் படமெழுதிப் பார்த்தல்

கம்பராமாயணத்திலுள்ள பாட்டுகளைக் "கம்ப சித்திரங்கள்" என்று சொல்லுவது வழக்கம். பாட்டு என்பதே ஒரு இன்பத்தைத் தரத் தக்கது. பாட்டு செவிக்கு இன்பம். சித்திரம் கண்ணிற்கு இன்பம். ஒரு சமயம் ஒரு பாட்டைப் பாடிவிட்டு அதைப் பாடிய வித்துவான் "இப்பாட்டில் படமல்லவோ எழுதிப் பார்க்கவேண்டும் என்றார்" மனத்திலே அனுபவிக்கிற யான் கண்ணாலே பார்த்து அனுபவித்தால் இன்னும் எவ்வளவு உருசியாய் இருக்கும் என்று பொருட்படும்படி சொன்னார், ஆகவே வித்துவான்களே இப்படிச் சொல்லி இன்பரசத்தை நமக்குக் கொடுக்கிறார்கள். முழுப் பாட்டையும் பாடிக் கேட்டு, பலதரம் கேட்டு, அதன் சுவை அனுபவித்தல் அவசியம். பாட்டுகளிலுள்ள பதங்கள் பொறுக்கி எழுதப்பட்டு முத்துக் கோர்த்தாற்போல் ஒரு அழகுடன் கோர்க்கப்பட்டிருக்கின்றன. வார்த்தைகளைப் புஷ்பத்திற்கும், அவைகளால் உண்டான பாட்டை ஒரு புஷ்ப ஹாரத்திற்கும் ஒப்பிடலாம். எம்மாதிரிப் பாட்டுகளை அடியிற் கண்டபிரகாரம் படமூலமாக விளக்கிக்காட்டிப் பாட்டின் கருத்தை நன்கு விளக்கக்கூடும் என்று யாம் கண்டறிதல் அவசியம்.



இவ்வாறு சித்திர மூலமாக விளக்கப்படுகிற பாட்டுகளை வகுப்புச் சுவர்களைச் சிங்காரித்தல் அவசியமென நினைக்கிறேன். பாஷையின் சுவை அப்பொழுது எளிதில் புலப்படும்.








தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க்கிருக்க நிழலாகாதே.



தெள்ளிய ஆலின்
சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச்
சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும்
அண்ணல் யானை





அணிதேர் புரவி ஆட்பெரும்
படையொடு
மன்னர்க்கிருக்க நிழலா
கும்மே.

ஆராய்ச்சியைத் தொடர்ந்து செல்வது அவசியம்

குழந்தைகள் படிப்பதில் எவ்விதந் தப்பிதங்களைச் செய்கிறார்கள், எந்தத் தொனிகளை எச்சரிக்கக் கஷ்டம் ஏற்படுகிறது, அத்தொனிகளைப் பன்முறை உச்சரிக்க எம்முறைகளை அனுஷ்டிக்கலாம், உச்சரிப்புப் பிழை என்பதுபோல் எழுத்துப் பிழைகள் எவை பன்முறை தென்படுகின்றன. அப்பிழைகளைப் போக்கடிக்கத்தக்க பயிற்சிகள் எவை, அவைகளை வகுப்பிற்குத் தக்கபிரகாரம் எப்படி வரிசைப்பட ஒழுங்குபடுத்துவது, சொற்பிழைகள் எவை பெரும்பாலும் காணப்படுகின்றன, அவற்றை எப்படி நீக்குவது, சொற்களைப் பலவாறு உபயோகப்படுத்தும்படி என்ன பயிற்சிகள் கொடுக்கக்கூடும் என்பனபோன்ற விஷயங்களை ஆராய்ந்து பார்த்தல் அவசியம் ஆகும். இவைகளைப்பற்றி மற்றும் ஒருமுறை சிந்திப்போமாக.

# நமது ஆரம்பக் கல்வியின் போக்கு.

S. T. இராமானுஜ அய்யங்கார்

1

புதிய இந்தியாவின் பிறப்புக்காலத்தில் "பாலர் கல்வி" என்ற மாதாந்தப் பத்திரிகை தென் இந்திய உபாத்தியாயர் சங்க ஆதரவில் உதயமாவது மிகவும் பொருத்தமாகும். நமது நாட்டில் கல்வியின் நிலை மிகவும் குழப்பமாகவே இருந்து வருகிறது. சிறப்பாக ஆரம்பக் கல்வி மிகமிகக் குறைவாகவே இருக்கின்றது. "பாலர் கல்வி" தமிழ் நாட்டின் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டுத் தமிழன்னை தாண்டவமாட முயலும் என்பதில் ஐயமில்லை. தொன்று தொட்டு "கல்வி சிறந்த தமிழ் நாட்டில், நல்ல பல்விதமாயின சாத்திரத்தின் மணம் பாரெங்கும் வீசும்" படி செய்வது தமிழாசிரியர்களின் கடமை; ஏனெனில் அஃது வஞ்சமற்று தொழில் புரிந்துகொண்டு வாழுமாந்தராகிய ஆசிரியரின் குல தெய்வத்தின் கட்டளையாகும்.

2

ஆங்கிலேயர் வருகைக்கு முன் நாடெங்கும் பள்ளிக் கூடங்களும் கலாசாலைகளும் இருந்து வந்தன. ஆரம்பக் கல்விச் சாலைகள் பாடசாலைகளென்றும், மக்தாம்களென்றும் அழைக்கப்பட்டு வந்தன. இவைகளில் தேச பாஷை, கடைக் கணக்கு, மதம் முதலியவைகள் போதிக்கப்பட்டு வந்தன. இப்பள்ளிகளில் தற்போது உள்ளது போல் வகுப்புகள் கிடையா. ஒவ்வொரு குழந்தையும் தனித் தனியே அதற்குத் தகுதியான முறையில் பாடம் கற்பிக்கப்பட்டு வந்தது. சில பள்ளிகளில் சட்டாம் பிள்ளைகளும் பாடம் கற்பித்து வந்தனர். அநேகமாக இக்கல்விச்சாலைகள் கோயில்கள், மசூதிகள் இரண்டுக்கும் சம்பந்தம் பட்டவையாகவே இருந்தன. படிப்பு இலவசமாகவே யிருந்தது. ஒவ்வொரு கல்விச்சாலைக்கும் போதுமான மூலதனம் தனவந்தர்களால் அளிக்கப்பட்டு வந்தது.

3

ஆங்கிலேயர் நமது நாட்டில் பிரவேசித்த பிறகு, நமது கல்வி திட்டம் நாளடைவில் மாறுபாடடைந்து வந்திருக்கின்றது. மேற்குத் திசையாளரில் முக்கியமாக கிறிஸ்தவ மதக்காவலர்களே இந்தியாவில் ஆங்கிலப்படிப்பு இயக்கத்தைப் புகுத்தலாயினர். தமிழ் நாட்டில் 1687ல் சென்னையில் நகர பரிபாலன சபை கல்வி விஷயத்தில் சிரத்தை யெடுத்துக் கொண்டது. 1787ல் இந்திய ஆசிரியர்களைத் தயாரிக்கப் பெல் என்பவர் ஓர் பள்ளியை நடத்தி வந்தார். 1792ல் சார்ல்ஸ் கிராண்ட் என்பவரின் தூண்டுதலால் இந்தியாவில் ஆங்கிலப்படிப்புக்குப் பண உதவி அளிக்க ஏற்பாடாயிற்று. 1813ல் கிழக்கு இந்தியச் சட்டத்தில், சட்ட சம்மதமாக இந்தியப் படிப்பு வளர்ச்சிக்கு, நாட்டின் வருமானத்தில் ஒரு லக்ஷம் ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டது. இவ்விதத்திலிருந்து, ஆங்கிலக்கல்வி இயக்கம் ஓங்க ஆரம்பித்தது. 1835ல் மெகாலே ஆங்கிலக்கல்வி இயக்கத்தை வேரூன்றும்படி செய்தார். 1872ல், பள்ளிகளுக்குப் பண உதவி, அவைகள் செய்யும் வேலையைப் பொறுத்து, அளிக்கப்பட்டது. 1872ல், ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள், ஆரம்பக் கல்வியின் போக்கை, கவனிக்க ஆரம்பித்தன. 1884-ல், கல்விக்குப் பண உதவி அளிக்கப்பட்டதே ஒழிய, பள்ளிகள் குறைக்கப்பட்டன. 1901ல், கல்வி இலா பரிசைக்ஷ செய்து, உதவிப்பணம், அதன் உத்தியோகஸ்தர்களின் சிபார்சு மீது, கொடுக்கப் பட்டது. 1911ல் பள்ளிகளின் யோக்கியதை, சிறப்பு இவைகளுக்காக உதவிப்பணம் அளிக்கப்பட்டது. 1912ல் காலஞ்சென்ற ஜியார்ஜ் மன்னர், டில்லி தர்பாரில் கல்வியில் தனக்கு இருந்த ஆர்வத்தை வெளியிட்டு பிறருக்கும் ஊக்கத்தை ஊட்டினார். 1913ல், மத்திய இந்திய சர்க்கார், மாகாண சர்க்கார்களுக்கு ஓர் அறிக்கை மூலம் அதை விளம்பரம் செய்தது.

1919ல் புதிய அரசியல் வந்ததின் பலனாகக் கல்வி இலாக்கா இந்திய மந்திரி வசம் வந்தது. இரட்டை ஆட்சி என்று சொல்லப்படும் காலமாகிய 1919-36-ல் இந்தியக் கல்வி மந்திரிகள் செய்திருப்பது ஆரம்பக் கல்விச் சட்டங்கள் இயற்றியதும், ஜில்லாக் கல்வி சபைகள் ஏற்படுத்தியதுமே யாகும். பண உதவி மேன்மேலும் அதிகரித்து வருவதுபோல் கல்வி வரியும், சம்பளங்களும் அதிகமாய்க் கொண்டு வருகின்றன. பள்ளிக்கூட நபர் விருத்தியே ஒழிய, படிப்பாளிகளின் தொகை வலுக்க இல்லை. பாடங்கள் ஆர்பாட்டமாக நடக்கின்றனவே ஒழிய பிள்ளைகள் விருத்தியாக வில்லை. படிப்பு வியர்த்தமாயும், தேக்க முற்ற நிலையிலும் இருந்து வருகிறது. இதை நிவர்திப்பதற்கு மாகாணமெங்கும் சர்ச்சை நடந்து வருகிறது.—சர்ச்சையில் ஒரு வகுப்பினர் கட்டாயத்தினாலேயே கல்வி பரவவேண்டுமென்று சொல்கின்றார்கள். மற்றொரு வகுப்பினர் கட்டாயப் படிப்புக்கு முன் குறைகளை நீக்கி, இருக்கும் பள்ளிகளை ஒழுங்குபடுத்திப், பின்னர் புதிய கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டுமென்று வாதாடுகிறார்கள். இவ்விரண்டாம் கோஷ்டியினரின் கிரந்த கர்த்தா காலம்சென்ற கல்வி இலாகா அதிகாரி சாம்பியன் அவர்கள். முதல் வகுப்பினரின் பிதா காலஞ் சென்ற கோபால கிருஷ்ண கோகலே அவர்கள்.

4

ஆங்கிலம் படிப்பின் வளர்ச்சியின் பலனாகச் சென்னை மாகாணத்தில் சுமார் 53995 ஆரம்பக் கல்விக் கூடங்கள் இருக்கின்றன. 107162 ஆரம்ப ஆசிரியர்களில் 12506 பெண் ஆசிரியர்களும், 94656 ஆண் ஆசிரியர்களும் இருக்கின்றனர். நூற்றுக்கு சராசரி ஐந்து பிள்ளைகளே பள்ளிகளில்

படிக்கின்றனர்; படிக்கும் பிள்ளைகளிலும் நூற்றுக்கு 81 பேர் படிப்பை மறந்து விடுகின்றனர்.

படிப்புதிட்டமோ தேசத்தின், பிரதேசத்தின் தேவைகளை ஒட்டி அமைக்கப்படவில்லை. அதைத் திருத்தி அமைக்க ஆசிரியர்களுக்கு அந்தஸ்து, அதிகாரம், அங்கீகாரம், ஆதரவு ஒன்றும் இல்லை. ஆரம்பக் கல்வி ஒரு நாதன் கீழ் இல்லாமல், ஆசிரிய-மானேஜர், ஸ்தலஸ்தாபனங்கள், கல்வி இலாகா, கல்விச்சபை ஆக நான்கு அதிகாரிகள் வசம் அகப்பட்டுக் கொண்டு நிலையற்ற நிலையில் இருந்து வருகிறது.

5

உலக மெல்லாம் ஜனசமூக முன்னேற்றத்திற்குக் கல்வியே பெரிய சஞ்ஜீவி என்று அறிந்து அதைப்போற்றி வளர்த்து வருகின்றது. வாழ்வு, சமூக உணர்ச்சி, அரசியல் நிலைத்தல் எல்லாவற்றிற்கும் கல்வி இன்றியமையாதது. கல்வி எல்லோருக்கும் சொந்தமான பொது உடமை-இதை எல்லோரும் அடைய ஆசிரியர்கள் தான் செய்ய முடியும். ஞான கங்கை, நாதமோ டெப்பொழுதும் "பாலர் கல்வி"யின் இதழ்களினை பொழிந்திட வேண்டும்.

"வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியிலாத தொரூரைத்
தீயினுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்."

என்று தமிழ் நாட்டுக்கவி சிரேஷ்டர் பாரதியார் இலட்சியத்தை நாம் பூர்த்தி செய்வோமாக.

# ஆரம்பக் கல்வியில் ஏற்படும் "நஷ்டமும் தேக்கமும்"

T. V. வெங்கட்ராமன் B.A.L.T.
கல்வி இலாகா டேபுடி இன்ஸ்பெக்டர், திண்டிவனம்

## ஆரம்ப ஆசிரியர்கள் செய்யக்கூடிய தென்ன?

ஆரம்பக்கல்வியைப்பற்றி இப்போது வெகு தீவிரமாய் அதிகாரிகளும் ஜனத்தலைவர்களும் கவனித்து வருகிறார்கள். இப்போது ஏற்படுகிற நஷ்டம், தேக்கம், இவைகளைத் தவிர்க்கவோ, அல்லது குறைக்கவோ, யோசனை செய்வதோடு, கல்வி வசதியை அதிகரிக்கக் கையாள வேண்டிய முறைகளையும் பரிசீலனை செய்து வருகிறார்கள். ஆனால், அத்துறையிலேயே உழைத்துவரும் ஆரம்ப ஆசிரியர்கள் நாளது வரையில் இவைகளைப் பற்றி சிந்தனைசெய்து, தங்களுடைய அனுபவங்களை ஒட்டி யோசனைகள் கூறியதாகக் காணோம். ஆகவே இவைகளைப்பற்றி ஒரு சிறு ஆராய்ச்சியும், ஆசிரியர்கள் செய்யக்கூடிய தென்ன வென்பதையும், விளக்கிக் கூறுவது தான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முதலில் நஷ்டம் என்பது என்ன?

ஆரம்பப் பாடசாலையில் முதல் வகுப்பில் சேரும் பிள்ளைகள் மேல் வகுப்பாகிய நான்காவது வகுப்பு முடிவதற்குள் நின்றுவிடுவது நஷ்டமென்று சுருக்கமாய்ச் சொல்லலாம். பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளில் சுமார் முதல் வகுப்பிலுளர். சிறுபான்மையோர் தான் தொடர்ச்சியாய் நான்காவது வகுப்பு பாதி, முடித்து நிற்கிறார்கள். பெரும்பான்மையோர் சுமார் 2 வருஷங்களுக்குள் நின்று விடுகின்றனர். சுமாரான எழுத்துப் பயிற்சி ஏற்படக் குறைந்தது நான்காவது வகுப்பாவது முடியப் படிக்கவேண்டும். ஆனால் வெகு சிலரே அப்பிரயோஜனம் பெறுகின்றனர். ஆனால் 2 வருஷங்களில் நின்று விடுகிறவர்களுக்காக இவ்வளவு பாடசாலைகளும், உபாத்தியாயர்களும் வேண்டுமா? இதைத்தான் நஷ்டம் என்று சொல்லப்படுகிறது.

தேக்கம் :—ஒரே வகுப்பில் ஒரு வருஷத்திற்கதிகமாய் பிள்ளைகள் தங்கி இருப்பது தேக்கம் என்று சொல்லப்படும். ஒரு வகுப்பிற்கு ஏற்ற பாட திட்டப்படி, சாதாரணமாய் மாணாக்கர்கள் ஒரு வருஷத்தில் அப்பாடங்களில் தேர்ச்சி பெறலாம். அப்படியில்லாதபோனால் தேக்கம் ஏற்படுகிறது.

இப்போது இவைகளின் காரணங்களைப்பற்றி ஆராய்வோம். முதலில் நஷ்டத்தை எடுத்துக்கொள்வோம்.

(1) பெற்றோர்களின் ஏழ்மையும், அவர்கள் கல்வியின் அவசியத்தை உணராததும், முக்கியமான காரணம் என்னலாம்.

(2) ஏழ்மையைத் தவிர்க்க ஆசிரியர்களால் இயலாது. ஆனால் கல்வியின் அவசியத்தை உணரும்படி பிரசாரம் செய்வது அவர்களால் இயன்றதே. அவ்வாறு போதுமானபடி செய்வதில்லை என்பதும், பாடசாலைக்கு வரும் பிள்ளைகளைக் கவனித்து, அவர்கள் காலத்தை வீண் போக்காமல் பாடங்கள் அநேகமாய் நடத்தப்படுவதில்லை என்பதும் விசனிக்கத்தக்கவை. வயிறுகாய பாடசாலைக்கு வந்தும், அந்நேரத்தில் பாடங்களைக் கற்பிக்கப் படாவிட்டால், பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும், பாடசாலையின் நன் மதிப்பு குறைவதோடு, வெறுப்பு மேற்படுகிறது. பாடசாலை நேரத்தை புனிதமாய்க் கருதி, அதின் பூரண பிரயோஜனத்தைப் பிள்ளைகள் அடையும்படி செய்து மற்ற நேரங்களில் அவர்கள் ஜீவிய அலுவல்களைக் கவனிக்கவும், தங்கள் வயிற்றுக் கஞ்சிக்குச் சம்பாதிக்க அவகாசமும் கொடுக்கும் வரையில் இந்த நஷ்டம் வெகுவாய்க் குறைய எதிர் பார்க்கலாகாது. பாடசாலை நேரத்தின் பூரண பிரயோஜனம் பிள்ளைகள் அடைய வேண்டுமாயின் உபாத்தியாயர் போதனை முறைகளைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டிய தவசியம். இதைப்பற்றி சற்று விஸ்தாரமாக பிறகு ஆராய்வோம்.

இனி தேக்கத்தை எடுத்துக்கொள்வோம். இதற்கு முக்கியமான காரணங்களாவன :—

(1) பாடசாலைக்கு வயது வராதவர்களைச் சேர்ப்பது.

(2) பெற்றோர்கள் ஒழுங்காய்ப் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி, அவர்களுக்கு வேண்டிய கற்பலகை, புஸ்தகம் முதலியவை வாங்கிக் கொடாமை.

(3) உபாத்தியாயர்கள் கையாளும் போதனை முறைகள்.

(4) ஒரு உபாத்தியாயர் பல வகுப்புகளுக்கு போதிப்பது.

மேற் கண்டவைகளில் 1 வது காரணம் கட்டாயமாய் உபாத்தியாயர்கள் தவிர்க்கக்கூடியது.

இரண்டாவது காரணம் ஒருவாறு பிரசாரத்தால் குறைக்கலாம்.

மூன்றாவது காரணம் முற்றிலும் உபாத்தியாயர் கவனிக்கவேண்டியது போதனைமுறை சரியானதாயிருப்பின் 4வது காரணத்தைப் பொருட்படுத்த வேண்டாம். ஆகவே உபாத்தியாயர்களால் நிவர்த்திக்க முடியாத காரணங்களை அவர்கள் நீக்கவேண்டுமென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் தவிர்க்கக்கூடிய காரணங்களை அவர்கள் கட்டாயம் நீக்க எல்லோரும் எதிர் பார்க்கிறார்கள். அது அவர்கள் தேச மக்கட்கு செய்யவேண்டிய கடமையாகும். அது செய்தாலொழிய, ஆரம்பக் கல்வியை விஸ்தாரப்படுத்த எடுத்துக்கொள்ளும் முயற்சி எல்லாம், வெளிப்போக்கை அடைக்காமல், ஒரு தொட்டியில் தண்ணீரை நிறப்ப முயற்சிப்பது போன்றதாகும். ஆகவே போதனை முறையைப்பற்றி விஸ்தாரமாக ஆராய்வோம்.

## போதனை முறைகள்

இதுகாறும் நாம் கையாண்டுவரும் போதனைமுறை கீழ்க்கண்ட இரண்டு கொள்கைகளை ஆதாரமாகவும் அடிப்படையாகவும் கொண்டுள்ளன



(1) எல்லாப் பிள்ளைகளும் ஒரே திறமையும், புத்தியும் உள்ளவர்கள்.

(2) எல்லாப் பிள்ளைகளும் ஒரே காலத்தில் ஒரு விஷயத்தைக் கற்கக் கூடியவர்கள்.

இவ்விரண்டு கொள்கைகளையும் சற்று ஆராய்ந்து பார்த்தால் சுபாவத்திற்கும் அனுபவத்திற்கும் முற்றிலும் பொருந்ாதவைகளெனப் புலப்படும். இருந்தும், ஆராய்ச்சி விசேஷமாக முற்றிய இக்காலத்தில் இன்னும் நாம் இக் கொள்கைகளைக் கொண்ட முறையையே கையாண்டு வருகிறோம். ஒரே புத்தியும், திறமையும் கூடிய பிள்ளைகள் கூட ஒரே விஷயத்தை, ஒரே காலத்தில் கற்க முடியவில்லை. கற்பதென்பது அவ்விஷயத்தில் அவர்களுக்குண்டாகும் ஊக்கத்தையும் (Interest) முயற்சியையும் (Initiative) பொருத்தது. இவைகள் இரண்டையும் நாம் திரட்டாமல் ஒரு விஷயத்தையும் கற்பிக்க முடியாது. இவ்விரண்டின் தன்மையை அனுசரித்துப் பிள்ளைகள் துரிதமாயும், மந்தமாயும், கற்கிறார்கள். ஆயினும் நாம் என்ன செய்து வருகிறோம்? துரிதமாய்ச் செல்லுவோனை நிறுத்திப் பிடித்துச் சும்மா இருத்தி வைக்கிறோம்; மந்தமாய்ப் போகிறவனை ஒன்று வீணே விரட்டவாவது செய்கிறோம், அல்லது முட்டாள் என்று சும்மா விட்டுவிடுகிறோம்.

இத்துடன்கூட, பிள்ளைகள் ஒழுங்கீனமாய் ஆஜராவதாலுண்டாகும் சிக்கல்களை நாம் கவனிப்பதே இல்லை.

இது முறையா? தர்மமா?

நம்முடைய போதனை முறையைத் தனிப்படி அவர் அவர்களின் புத்தித் திறமையைக் கொண்டு, தனியே கற்கும்படி நாம் திருத்தியமைத்துக் கொண்டால், அநேகமாய் ஆரம்பப் பாடசாலைகளைப்பற்றிய இன்னல்கள் பல குறையும், மறைந்தும்விடும். ஒழுங்கீனமாய் ஆஜராவதை நாம் எவ்வளவு முயன்றாலும் தடுக்க முடியாது. ஆயினும் அப்பிள்ளைகள் பாடசாலைக்கு வரும்போதெல்லாம், அவரவர்கள் விட்ட பாடத்திலிருந்து, மற்றவர்கள் தேர்ச்சியை அனுசரிக்காது நாம் கற்கும் படிப்பின் முறை இடங்கொடுக்குமாயின் எவ்வளவு பிரயோஜனமாகும்?

மேலும் ஒரு உபாத்தியாயர் பல வகுப்புகளை நடத்தும்படியான பாடசாலையை நாம் ஒருகாலத்திலும் நிறுத்த முடியாது. அப் பாடசாலைகளில் பிரயோஜனகரமான வேலை நடைபெறவேண்டுமாயின் உபாத்தியாயர் இத் 'தனிமுறையை'க் கையாளவேண்டும். கால அட்டவணையில் நான்கு வகுப்புகளுக்குப் பாடம் அமைக்கலாமே தவிர, அத் திட்டப்படி நான்கு வகுப்புகளுக்கு ஒருவர் பாடம் நடத்துவது அசாத்தியமான காரியமாகும். வெகுவாய்த் தேக்கத்திற்குக் காரணம் இப் பொருத்தமற்றதும், அசாத்தியமானதுமான முறையாகும். திறமையுள்ளவர்களை மேன்மேலும் கற்கும்படியும் விடுவதில்லை; மந்தமானவர்களுக்குப் போதுமான அவகாசமும் கொடுப்பதில்லை. ஆகவே தீக்ஷணபுத்தி யுள்ளவனுக்கும், மந்தபுத்தி யுள்ளவனுக்கும், உபயோகமில்லாத இம்முறையை நாம் திருத்திக்கொள்ளவேண்டும்.

முன்பே நான் குறிப்பிட்டவாறு பெரும்பான்மையான பிள்ளைகள் சுமார் இரண்டுவருஷந்தான் பாடசாலையி லிருக்கிறார்கள். ஆயினும் நாம் கையாளும் முறையைத் திருத்தி யமைத்துக்கொண்டால், இவ்விரண்டு வருஷங்களில் கூடச் சுமாரான பிரயோஜனம் அவர்கள் பெருமாறு செய்யலாம். ஆரம்பப் பாடசாலைகளில் நம்முடைய முக்கிய நோக்கம் எழுத்துப் பயிற்சி யல்லவா? நாம் கையாண்டுவரும் முறையிலுள்ள குறைகளால், நான்கு வருஷத்தில் கூட நாம் போதுமான பயிற்சி செய்ய முடியவில்லை.

ஆரம்ப வகுப்பில் தாய் மொழி படிக்கக் கற்பிக்கும் முறையை ஆராய்வோம்.

பொருள் முதலா, அதைக்குறிக்கும் மொழி முதலா, அல்லது (நாம் கையாளும் முறைப்படி) மொழியின் பகுதிகளாகிய தனி ஒலிகள் அல்லது சப்தங்களைக் குறிக்கும் எழுத்துக்கள் முதலா? என்ற கேள்வி நாம் எப்போதாகிலும் நம்மைக் கேட்டுக் கொண்டிருப்போமாயின் நாம் இப்போது 'அ' 'ஆனா' 'ஆ' வென்று பிள்ளைகளை ஓலமிடச் சொல்லுவதை வெகு காலத்திற்கு முன்பே நிறுத்தி இருப்போம். அவர்கள் ஊக்கத்தைக்குன்ற அடிக்காமல், வெகு சீக்கிரம் அவர்கள் படிக்கவும், கற்பித்திருப்போம். வியாகரண அறிஞர்கள் ஆராய்ந்து, தாய் மொழிக்குள்ள எழுத்துக்களை நிர்ணயித்திருக்கும், கிரமத்தில், எல்லா எழுத்துக்களையும் கற்றபின்தான் எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்பிக்கிறோம். பெரும்பான்மையான பிள்ளைகளோ சுமார் இரண்டு வருஷகாலந்தான் பாடசாலையில் தங்கி இருக்க முடிகிறது. நாம் கையாளும் முறையில் அவர்கள் கற்றது விசேஷமே! அதிருப்திக்கி இடமே இல்லை! குழந்தைகளுக்கு முற்றிலும் பொருந்தாத முறையில் அவர்களை நாம் வதைத்து வருகிறோம். கல்வியின் நோக்கம் அறிவு, அதை மறந்து விடுகிறோம். ஒரு பொருளைக் குறிக்கும் வார்த்தை அதன் சுவரூபம் எப்படிக் குறிக்கிறோம் என்று போதிப்பதைவிட்டு, அவ்வார்த்தையில் அடங்கியுள்ள தனி எழுத்துக்களைப் பிரித்து, மறுபடி ஒன்று சேர்த்துக் கடைசியில் அது எப்பொருளைக் குறிக்கிற தென்பதையும், இவ்வளவு முயற்சியும் அப்பொருளறிவிற்காக என்பதையும் மறந்துவிட்டுப்போதித்து வருகிறோம்!

சாதாரணமாய் வழக்கத்தில் எத்தனை வார்த்தைகள் வழங்கி வருகின்றன? அவைகளைப் படிக்கவும், எழுதவும் தெரிந்தால் போதாதா? அப்படி எழுதப் படிக்க, மொழியில் உள்ள எல்லா எழுத்துக்களையும், எழுத்து முறையில் கற்க வேண்டுமா?

வார்த்தைகளை அவை குறிக்கும் பொருளை அறிந்து பழக்கும்படி போதித்தால் விசேஷமல்லவா? நம்முடைய மொழியில், ஓர் எழுத்துக்கு ஒரே உச்சரிப்புத்தான் உண்டு. ஆகையால் பிள்ளைகள் பதங்கள் படிக்கும்போது, எழுத்துக்களையும் கற்கிறார்கள் என்பது அனுபவசித்தம். படிப்பதைக் காட்டிலும், எழுதுவது அதிகப் பிரயாசமான காரியம்.

எல்லாக் குழந்தைகளுக்கும் இவ்விரண்டிலும் திறமை ஒத்திருக்காது. ஆகையால் நாம் எழுதுவதின்மேல் வெகுவாய் ஆரம்பத்தில் கவனம்



செலுத்துவது பொருந்தாது. வார்த்தைகளின் உருவத்தை அவர்கள் உற்று நோக்க ஒரு சந்தர்ப்பம் கொடுக்க மாத்திரம், எழுதுவதை உபயோகிக்க வேண்டும். சொல்வதெழுதல் ஆரம்பத்தில் கொடுப்பது சரியல்ல. ஒரு வார்த்தையைப் பார்த்தவுடன் படிக்கவும், அதன் பொருளை அறியவும் தெரிந்தால் போதும்.

இம்முறையைத் தழுவிப் புஸ்தகங்கள் இல்லையே எனலாம். தேவைக்குத் தக்கபடி புஸ்தகங்கள் எழுதப்படுகின்றன. முறையைச் சீர்திருத்தி அனுஷ்டிப்பின், அம் முறைப்படி மறுதினமே புஸ்தகங்கள் வெளிவரும். ஆரம்ப வகுப்புகளில் படிக்கும் விருப்பத்தையும், ஊக்கத்தையும், பெருக்கக் கூடியவைகள். கதைகள், முக்கியமாய்ப் பிள்ளைகளுக்குத் தெரிந்த பிராணிகளைப் பற்றிய கதைகள் அவர் உள்ளங் கவர்கின்றன. மேல் வகுப்புகளில் சரித்திர சம்பந்தமான கதைகள் வெகுவாய் ஏற்றதாயிருக்கும். போதுமான படிக்கும் தேர்ச்சி செய்தபிறகு, எந்தப் பாடங்களையும் அவர்களாகவே கற்கும்படி அமைப்பது சாத்தியம். ஆகவே குறுகிய காலத்தில் இத் தேர்ச்சியுண்டாகுமாறு போதனா முறையைச் சீர்திருத்தவேண்டிய அத்தியாவசியம்.

எண் வேலை.

ஆரம்ப வகுப்புகளில் எண் போதிக்கப்படும் முறையும் சீர்திருத்தப் படவேண்டும். எண்களின் சொரூபம் பிள்ளைகளின் மனதில் நன்றாய்ப் பதிய, வஸ்துக்களைக் கொண்டு போதிக்கவேண்டும். எண்கள் எல்லாம் ஒன்றின் கூட்டங்களே என்ற தத்துவத்தை ஆரம்பத்திலேயே பிள்ளைகள் மனத்தில் தெளிவாய்ப் பதியவைத்தல் வேண்டும். பிள்ளைகள் கற்கும் சக்திக்கு ஏற்றவாறு, துரிதமான பிள்ளைகள் அதிகக் கணக்குகள் செய்ய வசதியும், மந்தமானவர்களுக்குப் போதுமான அவகாசமும் கொடுக்க முறை இடந்தர வேண்டும். பிள்ளைகள் அனுபவத்திற்கும், அறிவிற்கும் உட்பட்ட எண்களும், கணக்குகளும்தான் கொடுக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் எண் அறிவு விருத்தியடையும். அவர்கள் விளையாட்டுகளிலிருந்தும், வாழ்க்கையிலிருந்தும் கணக்குகள் அமைத்தல் அவசியம்.

தனிப்படி அவரவர்கள் தங்கள் பாடங்களை ஊக்கத்தோடு செய்யும்போது, கவனக்குறைவு ஏற்படாது. பாடசாலையில் இப்போதுள்ள கூச்சலும், சத்தமும், வெகுவாய்க் குறைந்து விடும். பிள்ளைகள் ஊக்கத்தோடு மௌனமாய் கற்பார்கள். உபாத்தியாயர்கள் வீணே தொண்டை வறண்டு போகக் கத்த வேண்டுவதில்லை. இம்முறையைப் பற்றி இன்னும் விஸ்தாரமாக எழுத இக் கட்டுரை இடந்தராது. இம்முறை கையாளப்படுவதை நேரில் பார்த்தால்தான் விளங்கும். மதுரை ஜில்லாவில் முக்கியமாய்க் 'கள்ளர்' பாடசாலைகளில் இது அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. சந்தர்ப்பம் கிடைக்கும்போது நண்டர்கள் நேரில் பார்த்தால், இப்போதனா முறைப் பாடசாலைகளின் பிரயோஜனத்தை எவ்வளவு அதிகரித்திருக்கிற தென்பது விளங்கும்.

# “ நல்லொழுக்கம் ”

(நொண்டிச்சிந்து)

Ry C. G. Ramachandra Rao,

*(The Brahmin Extension Higher Elementary School, Coimbatore.)*

சூரியன் உதிக்கு முன்னே—எழுந்து
ஒழுங்காய்ப் பாடங்கள் படிக்கவேண்டும்.

முழுகித் தினமும் நீங்கள்--நன்றாய்த்
தோய்த்த ஆடைகளை அணியவேண்டும்.

உள்ள உணவையுண்டு—குறித்த
நேரத்தில் பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

தெருவில் ஆடுதலும்—நின்று
வேடிக்கை சண்டைகள் நோக்கிடலும்

கூடவே கூடாது—அதனால்
உங்க ளுடையெல்லாம் அழுக்காமே

பாடமும் மறந்திடுமே—பள்ளி
ஆரம்ப நேரமும் தவறிடுமே.

பாடத்தில் மனம் செலுத்தி—உடனே
பள்ளியைச் சேருதல் நலமாமே.

ஆசிரியர் சொல்லுவதை—அங்குத்
தாழ்மையுடன் கவனித்துக் கேட்கவேண்டும்.

வீட்டிற்குத் திரும்புகையில்—பாட
விஷயங்களை நாம் எண்ண வேண்டும்.

மாலையில் சிறிது நேரம்—மகிழ்ந்து
நன்றாக விளையாடி ஓட வேண்டும்.

இரவிலோ தீபத்தின்முன்னே—அமர்ந்து
கருத்தாய்ப் பாடங்கள் படிக்கவேண்டும்.

புசித்துத் தூங்கவேண்டும்—இருளில்
மனப்படி அலைவதை நீக்கவேண்டும்.

இவைதான் நற்போதனை—நீங்கள்
இதுபோல் இனிமேல் நடக்கவேண்டும்.

# மிதமான நோக்கமும் அதிக சித்தியும்*

மற்ற கட்டுரைகளில் சொன்னதுபோல் இதிலும் நாம் சொல்லப்போவது என்னுடைய சொந்த அபிப்ராயங்களை பகுத்தறிவுடன் படிப்பவர்கள் ஆலோசிக்கு வேண்டுமென்ற எண்ணத்துடன் எழுதுகிறேன். அச்சில் எழுதியிருக்க ஒவ்வொன்றும் வேதவாக்கு என்று எண்ணுபவர்கள் இதைப் படிக்காமல் இருப்பது நலமே.

மனோதத்துவசாஸ்திர புஸ்தகங்களில் எந்தக் காரியத்திலும் லக்ஷ்யம் அல்லது நோக்கம் என்னவென்று தெரியாவிட்டால் அபிவிர்த்தி ஏற்படாது என்று கண்டிருக்கிறது. ஆரம்பக் கல்வியின் நோக்கமென்னவென்று கேட்டால் பல புஸ்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட நிரூபணங்கள் பல சொல்லப் படலாம். ஆனால் அவைகள் எல்லாம் மேல் நாட்டாரால் உண்டாக்கப் பட்டவைகளானதால் மேல்நாடுகளுக்கு ஏற்றவையாக இருக்கலாம். அதன் பொருட்டு அவை நமது தற்கால இந்தியதேசத்திற்கும் பொருந்தியவையாகுமா? இங்கிலாந்தின் தற்கால நிலைமை நமது தேசத்தின் நிலைமையைவிட மாறுபட்டது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் ஆங்கில தேசத்து ஆரம்பக்கல்வி லக்ஷ்யத்தை மேற்கொள்வதில் இருதேசங்களின் நிலைமையிலுள்ள அளவற்ற வித்தியாசத்தைச் செய்வனே மறந்துவிட்டார் போலும்.

ஒரு பக்கத்தில் ஒரு செல்வம் வாய்ந்த ஜனத்தொகை மிகுந்த ஒரு சிறியஇடத்தில் படித்த பெற்றோர்களும் நல்ல உபகரணங்கள் பொருந்திய பள்ளிக்கூடங்களையும் உயர்ந்த யோக்யதையுடன் கூடிய நல்ல சம்பளங்கள்பெறும் ஆசிரியர்களும், மற்றொருபக்கத்தில் ஒரு விஸ்தரித்த இலாகாவில் அறிவில்லாதவர்களான ஏழ்மை மக்களையும் உபகரணங்கள் குறைந்த பள்ளிக்கூடங்களும் (இவைகளில் அநேக பள்ளிக்கூடங்களில் புஸ்தகங்கள் கூடக் கிடையாது. சிலவற்றில் பென்சல்கள் கூட இல்லை), குறைந்த சம்பளம் பெறும், ஒப்பிட்டுப் பார்க்கில் யோக்யதை குறைந்த ஆசிரியர்களையும் பார்க்கிறோம். ஆயினும் நமது ஆரம்ப பாடசாலைகளில் எல்லாம் இங்கிலாந்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் என்ன பாடதிட்டங்கள் உண்டோ அவைகளையே அனுசரிக்கிறோம். இது போதாது என்று கல்வி சாஸ்திரிகளில் ஒரு சார்பார் நமது ஆரம்பக் கல்விக்கு விவசாய நோக்கம் வேண்டுமென்றும் மற்றொரு சார்பார் தொழில் நோக்கம் வேண்டுமென்றும் இன்னும் சிலர் தாய்பாஷையும் கூட எழுதப் படிக்கத் தெரியாத பாலர்களுக்கு ஹிந்திபாஷையில் தேர்ச்சி உண்டாக்கவேண்டுமென்றும் இன்னும் இதுபோல் பலவாறாகக் கிளர்ச்சி

* ஆர். எம். ஸாஹூர் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதிய ‘Aim Low and Go Higher’ என்னும் கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

செய்கிறார்கள்! இவைகளை யெல்லாம் போதிக்கும் ஆசியர்கள் யார்? அரை வயிற்றுக்குக் கூடச் சாப்பாட்டிற்கில்லாத, ஏதாவது ஒரு விஷயத்தில் அறை குறை ஞானம் பொருந்தியவர்களே. அநேக வருஷங்களுக்கு முன்பு இளம் பிள்ளைகளுக்குப் போதிக்க அற்ப ஞானம் போதும் என்று எண்ணுவது ஒரு பெரிய தவறு என்று ஹக்ஸ்லி (Huxley) பிரபு சொல்லியிருக்கிறார். ஆயினும் நோக்கம் என்னும் பதத்திற்கே, ஆசிரியர்களாகிய நாம் அப்பதத்தைக் கேட்டமாத்திரத்தில் வாய்மூடிப் பயந்து அதை ஏற்றுக் கொள்ளும் அவ்வளவு கௌரவம் ஏற்பட்டு விட்டாற்போலிருக்கிறது!

இவைகளினால் உண்டாகும் பயன்கள் என்ன? இதைப் படிப்பவர்கள் ஓர் ஆரம்ப பள்ளிக்கூடத்திற்குள் சென்று அங்கு நடப்பதைக் கவனிக்கவும். வெகு தூரத்திலுள்ள குக்கிராமத்துசேரியிலுள்ள உபகரணங்கள் அற்ற மிகச் சிறிய பள்ளிக் கூடத்திலும் பாஷை, கணிதம், சரித்திரம், பூகோளம் பிரகிருதிவித்தை (Nature Study) சுகாதார விளக்கம் முதலிய பாடங்களில் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் இருப்பது காணலாம். தவிர, இந்தப் பாடங்கள் எப்பொழுது நடப்பதென்பதைக் குறிக்கும் ஒரு கால அட்டவணையும் தொங்கவிட்டிருப்பதையும் கவனிக்கலாம். ஆனால் அங்குப் படிக்கும் பாலர்கள் நிஜமாக எவ்வளவுதான் கற்றுக் கொள்கிறார்கள். ஒன்றாவது வகுப்பில் சேரும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளில் ஒரு சிலரே ஐந்தாவது வகுப்பிற்குத் தேர்ச்சி பெறுகிறார்கள் என்பது புள்ளி விவரமாகத் தெரியவருகிறது. இந்தச் சிலரும் ஒரு கற்றறிவு இல்லாதவர்களைப் படிப்பாளிகளாக்க வேண்டிய அளவு கல்வி பெறுகிறார்களா என்பது மிகவும் சந்தேகம்.

ஒரு சமயம் அநேக விஷயங்களைப் போதிக்கும் லக்ஷ்யம் இருப்பதனால் படிப்பாளிகளாக்க வேண்டிய அவ்வளவு கல்வி கூடப் போதிக்கத் தவறுகிறோமோ? ஒருகால் நமது லக்ஷ்பத்தை குறைத்துக் கொண்டால் இப்பொழுது பெறுவதைவிட அதிகப்பலன் அடையலாமோ? இது உண்மையாயிருந்தால் கல்வி அறிவாளர்களாக்க வேண்டிய முக்கிய அம்சங்களையே செவ்வனே கற்றுக்கொடுக்க நம்மாலியன்றவரை முயலவேண்டாமா?

மானிடர்கள் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் அளவற்றது. ஒருவன் தன் வாழ்நாள் பூராவும் கல்வியில் செலவழித்தபோதிலும் அவைகளில் ஒரு அணுக்கூட செவ்வனே தெரிந்துகொள்ள முடியாது. ஓர் ஆரம்பப் பள்ளிக் கூடத்தில் பாலர்களுக்குத் தற்காலத்திலும் பிற்காலத்திலும் உபயோகப்படும்படியான கல்வி போதிப்பதற்கு 4-5 வருஷகாலம் ஒரு மிகவும் சிறியகாலமே. தொழில் முறைக்கு உபயோகப்படும்படியான கல்வி போதிக்கவேண்டுமென்பது உயர்தரக் கல்வியின் நோக்கமாயிருந்தபோதிலும் ஆரம்பக் கல்விக்கு அந்நோக்கம் கொள்வது மிகவும் தவறானது. இந்த 4 அல்லது 5 வருஷகாலம் எழுதவும் படிக்கவும் சுலபமான கணக்குகள் போடச் செவ்வனே கற்றுக்கொள்வதற்கே போதாது. நமது தேசம் ராஜீய ஸ்வதந்திரத்தின்பொருட்டு விரைவாக அடைந்திருக்கும் முன்னேற்றத்தையும்



இன்னும் சீக்கிரத்தில் அடையப்போகும் முன்னேற்றத்தையும் நோக்குங்கால் படிப்பாளராக இல்லாத வாக்காளர்களை (illiterate electorate) படிப்பாளிகளாக்கவேண்டுவது மிகவும் அவசியமானது கல்வி அபிவிர்த்திக்காகச் செலவிடக்கூடிய தனம் மிகக் கொஞ்சமே. ஆனதுபற்றி ஆரம்பக் கல்வியின் லக்ஷ்யத்தை டாம்பீகமில்லாமல் நமது சக்திக்குத் தகுந்தவாறு மிதமாக வரையறுக்க வேண்டுமென்பது அவசியமாகும். முக்கியமாக நமது நோக்கம் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் வரும் பிள்ளைகள் அனைவரும் அறிவுடன் படிக்கவும் தெளிவாக எழுதவும் தேர்ச்சியடையவேண்டும். (எக்கூட்டத்திலும் எழுதப்படிக்கக்கூடத் தெரிந்துகொள்ளக்கூடாத சிலர் இருப்பர்) இந்த நோக்கம் அல்லது லக்ஷ்யத்தால் நாம் சித்திபெற்றால் பிறகு அவகாசமும் திரவியமும் கிடைக்குமானால் மேல்நோக்கும் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளலாம். இன்னும் சிலகாலம்வரை அதாவது நல்ல தேர்ச்சியுடைய ஆசிரியர்கள் கிடைக்கும்வரையும் கட்டாய இலவசப் படிப்புத் திட்டம் அமுலுக்கு வரும் அளவும், இதுவே நமது தேச ஆரம்பக் கல்வியின் கொள்கையாக இருக்கவேண்டும். 'உபயோகமான' பாடங்கள் அனேகம் இணைக்கப்பட்ட கஷ்டமான பாட திட்டத்தை விட்டுவிடவேண்டும். எவனொருவன் புத்தியுடன் படிக்கிறானோ அவன் தனக்கு வேண்டும்பொழுது விஷயங்களைப்பற்றி தெரிந்துக்கொள்வான். அதுதான் தகுந்த முறை. பிற்காலத்தில் உபயோகமாக இருக்கும் என்று எண்ணி, இன்று பாலர்களுக்கு அநேக விஷயங்களைப்பற்றிப் போதிப்பது மறுநாள் பிரயாணம் செய்ய இருப்பவன் பிரயாணகாலத்தில் உட்கார்ந்து சாப்பிட நேரமிருக்காது என்று இன்றைய தினமே ஆறுவேளைச் சாப்பாட்டையும் சேர்த்துச் சாப்பிட முயல்வது போலாகும்.

நான் மேலே சொல்வது ஏதாவது புதிதாயிருந்தால் அநேக ஆரம்பப் பள்ளிக்கூடங்களும், ஆசிரியர்களும் செய்யும் தவறுதல்களை எளிதாகத் தெரிந்துகொள்ளலாம். ஆரம்பக் கல்விச் சட்டத்தைத் தயாரித்த முன்னோக்கும் பிரபுக்கள் இம்மாதிரித் தவறுதல்கள் ஏற்படக்கூடும் என்பதை அறிந்திருக்கவேண்டும். அச்சட்டத்தின் முதல் பக்கத்திலேயே அவர்கள் ஒரு எச்சரிக்கை இட்டிருக்கிறார்கள்.

ஆரம்பக் கல்வியென்பது தாய்பாஷையில் படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் சித்திரம் வரைவதிலும் பிரகிருதி வித்தையும் (Nature study) தேகப்பயிற்சியும் பெண்களுக்குத் தையல் வேலையும் இவைகளில் போதனை செய்வதேயென்றும் ஆயினும் சுகாதார விளக்கம், முதல் உதவி, பூகோளம், சரித்திரம், துரைத்தன விளக்கம், ஆங்கிலம் அல்லது வேறொரு பாஷை, கைவேலை என்பவைகளைப்பற்றியும் போதிக்கலாம் என்றும் ஆரம்பக் கல்வி திட்டத்தில் 3வது செக்ஷன் 5வது பிரிவில் கண்டிருக்கிறது.

இதிலிருந்து ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் போதிக்கக்கூடிய விஷயங்களை இந்தச் சட்டம் இரண்டுவகையாகப் பிரித்திருக்கிறது என்பது தெரியும். ஒரு வகையானது கண்டிப்பாகப் போதிக்கவேண்டிய விஷயங்கள். மற்

றொன்று, விரும்பினால் போதிக்கப்படலாம் என்ற விஷயங்கள். ஏன் இந்த வித்தியாசம்?

போதுமான ஊதியம் இல்லாதவன் முதலில் முக்கியமான உடுப்புகளையே வாங்குவான். பிறகு செலவழிக்கப் பணம் இருந்தால் காலர் டை முதலியன வாங்க முன்வருவான். எழுதப் படிக்கச் சரிவரக் கற்றுக்கொடுத்த பின்னே சரித்திரம் பூகோளம் முதலியவைகளைப் போதிக்க முயலவேண்டும். நமது ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் சரிவர இல்லாதது நம்மால் இயலக்கூடாததைச் செய்ய முயற்சிப்பதே காரணம் என்பது எனது அபிப்பிராயம். டம்பமான லக்ஷ்யத்தை மேற்கொண்டதால்தான் நமது பள்ளிக்கூடங்களால் செய்து முடிப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. நமது லக்ஷ்யம் அல்லது நோக்கம் கொஞ்சம் மிதமானதாக இருந்தால் நாம் செய்து முடிக்கக்கூடியது அதிகமாக இருக்கலாம். ஆகவே பாலர்கள் எல்லாருக்கும் அவசியமாகத் தெரியவேண்டியவைகளைப் போதிக்க ஏற்பாடு செய்வதில் நமது கவனத்தைச் செலுத்தவேண்டும். அவை எவை? தற்கால நிலையைக் கவனிக்குங்கால் பாலர்களுக்குச் செவ்வனே படிப்பதில் தேர்ச்சி உண்டாக்குவோமானால் மற்ற விஷயங்களைப் போதிக்கத் தவறினாலும் தீங்கு ஒன்றும் வாராது. தாய்ப்பாஷையில் எழுதியிருப்பதைச் செவ்வனே படிக்கும் சக்திகூட நமது ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்கு இல்லை.

நாம் போதித்துவிட்டதால் மாணவர்கள் கற்றுக்கொண்டுவிட்டார்கள் என்று நினைக்கிறோம். போதுமான விஷயங்கள் இல்லாத பாடபுத்தகத்தைப் பலதடவைகள் திருப்பித் திருப்பிப் போதனை செய்ததனால் பிள்ளைகளுக்கு நன்றாகப் படிக்கும் சக்தி ஏற்பட்டுவிட்டது என்று எண்ணுகிறோம். ஆனால் சிலநாள் கழித்து அவர்கள் படிக்கத் தெரியாமல் இருந்தால் கற்றுக்கொண்டவைகளை மறந்துவிட்டார்கள் என்று சொல்லுகிறோம். இதற்கு 'படிப்பாளரில்லாமல் திரும்பவும் மாறிவிடுவது' (Relapsing into illiteracy) என்று பெயரிட்டு வழங்குகிறோம். இருக்கும் கஷ்டங்கள் போதாது என்று இன்னுமொரு புதிய தொந்திரவை ஏற்றுக்கொள்ளுகிறோம். படிப்பாளராகமலே எப்படித் திரும்பவும் படிப்பாளரில்லாமல் எப்படி மாறிவிடுவது? ஆகவே, நாம் மிதமான லக்ஷ்யம் வைத்து அந்த லக்ஷ்யத்தில் சித்திபெற்றால் பிறகு மேல்நோக்கலாம் என்பதே ஆரம்ப ஆசிரியர்களுக்கு என்னுடைய யோசனை.

# கல்விச் செய்தியும் குறிப்பும்

பன்ருட்டி.

இவ்வூர் ஆரம்ப ஆசிரியர் சங்கமானது வழக்கம்போலப் போர்டு ஹைஸ்கூல் கட்டிடத்தில் தமிழ்ப் பண்டிதர் பக்கிரிசாமி நாயனார் தலைமையில் 11-7-36 மாலை 2-மணி முதல் 4-மணி வரையில் நடைபெற்றது. சங்கக் காரியதரிசி முன் நடந்த கூட்டத்தின் ரிபோர்ட்டு வாசித்த பிறகு, பன்ருட்டி ஸ்ரீமான் ரங்கனாதம் பிள்ளை அவர்கள் ஒரு மாதிரிப் பாடம் கற்பித்துக்காண்பித்தார். 'பக்தி' என்னும் விஷயத்தைப் பற்றி ஸ்ரீமான் முத்தையர் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். தலைவரின் பிரசங்கத்தின்பின் கூட்டம் கலைந்தது.

சென்னை.

பென்னாத்தூர் சுப்ரமணியன் உயர்தர ஆரம்பப்பாடசாலையின், ஸ்தாபன தினம் (Founders Day) சென்ற 26-7-36 அன்று வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டது. ஸர். எம். வெங்கட சுப்பராவ், சென்னை ஹைகோர்ட் பிரதம ஜட்ஜ் தலைமை வஹித்தார். ஸ்ரீமதி வெங்கட சுப்பராவ், பிள்ளைகளுக்குப் பரிசு வழங்கினார்கள். ஸ்ரீமான் நாகராஜ ராவ், தலைமை ஆசிரியர் சென்ற வருஷத்திய ரிபோர்ட்டைப் படித்தார். பிறகு பரிசுகள் வழங்கப்பட்டன. ஸ்ரீமான் T. M. கிருஷ்ணசாமி அய்யர். வெங்கட சுப்பராவ் தம்பதிகளுக்கு வந்தனம் அளித்தார். அச்சமயத்தில் தலைவர் அப்பள்ளிக்கூடத்தின் கட்டடத்திற்காக ரூ. 100 நன்கொடை அளித்தார்.

சென்னைக் கார்பொரேஷன் முகமதிய ஆசிரியர்ச் சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் 19-7-36-ல் சேப்பாக்கத்தில் நடந்தது. அவ்வமயம் கார்பொரேஷன் மேயர் கனம் அப்துல் ஹமீத்கான் தலைமை வஹித்தார். தலைமைப் பிரசங்கத்தால் ஆரம்பக்கல்வி விஷயமாகக் கவர்ன்மெண்டில் ஒரு சரியான திட்டம் இல்லாததினால் அதன்பால் செலவிடும் பணம் பயனில்லாமல் போய் விடுவதென்றும், எல்லா இடங்களிலும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் 8-வது வகுப்புவரை இருக்கவேண்டுமென்றும், அதுவரைக் கட்டாய இலவசப்படிப்பு அவசியமென்றும் கூறினார்.

சென்னைக் கார்பொரேஷன் வடக்கு ரேஞ்சு ஆசிரியச் சங்கத்தின் கூட்டம் ஒன்று 11-7-36-ல், சாலைவிநாயகர் கோவில்தெருவிலுள்ள பாடசாலையில்

நடந்தது. ஸ்ரீமான் R. ஜனார்தனம் நாயுடு அவர்கள் 'இங்கிலாந்தில் ஆரம்பப்பாடசாலையில் கற்பிக்கும் முறை' என்னும் விஷயத்தைப் பற்றி மிகத் தெளிவாக ஒரு பிரசங்கம் செய்தார். அச்சமயம் ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியார் அக்கிராசனம் வகித்தார்.

### செங்கல்பட்டு.

செங்கல்பட்டு ஆரம்ப ஆசிரியர்ச்சங்கம் 11-7-36-ல் செங்கல்பட்டிக் கோகலே ஹாலில் கூடிற்று, ஸ்ரீமான் P. K. சேஷாத்ரி அய்யங்கார் தலைமை வஹித்தார். ஸ்ரீமான் G. V. ஜோப் பேசுகையில் ஆசிரியர்கள் ஊக்கத்துடனும், சந்தோஷத்துடனும் தங்கள் வேலையைச்செய்ய வேண்டும் என்று சொன்னார். ஸ்ரீமான் சுப்ரமணிய அய்யர், கிராமங்களில் ஆசிரியர்கள் ஒரு பிரதான ஸ்தானம்பெற்று வருவதாகவும், கிராமச் சீர்திருத்தவேலைக்கு ஆசிரியர்களே ஏற்றவர்கள் என்று உரைத்தார்.

### தேசூர்.

வாலாஜா தாலூக்கா ஆரம்ப ஆசிரியர்ச் சங்கம் தேசூரில் 22-7-36-ல் நடைபெற்றது. Rev. M. G. Kuolt அக்கிராசனம் வஹித்தார். ஸ்ரீமான்கள் M. S. சுந்தரேச்வர அய்யரும், S. சீனிவாச அய்யரும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

### சித்தூர்.

பலமனர்க் கல்வி கூட்டமும் பொருட் காக்ஷியும் 18-7-36-ல் நடைபெற்றது. ஸ்ரீமான் M. லக்ஷ்மி நாராயண ராவ், ஜில்லா கல்வி அதிகாரி தலைமை வஹித்தார். தலைவர், ஆசிரியர்கள் தங்கள் குறைவான சம்பளத்தை நினைத்து மனவருத்தம் கூடாதென்றும், ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் அன்புடனும் தமது தொழிலைப் புரியவேண்டுமென்றும், அதனால் தான் தேச முன்னேற்ற மடையும் என்றும் சொன்னார். ஸ்ரீமான்கள் K. L. நரசிம்மமூர்த்தி ஜில்லாபோர்டு கல்வி அதிகாரி, ஆசிரியர்களுக்குப் பயிற்ச்சியின் அவசியத்தைப்பற்றி கூறினார். T. N. ராமகிருஷ்ண ரெட்டியார் ஜில்லா போர்டு தலைவர், பொருட் காக்ஷியைத் திறந்து வைத்தார்.

## பத்திராதிபர் குறிப்பு

### தேசத்தின் மூலதனம் :—

குழந்தைகளை அடைவது பெரிய பாக்கியமென்று கொள்வது நம் நாடு. அடைந்த பாக்கியத்தைச் சரியானபடி போற்றாத நாடும் நம் நாடே. அறியாமையாலும், ஏழைத்தனத்தாலும், குழந்தைகள் நேரான வழியில் வளர்க்கப்படவில்லையென்று நாம் பலதடவை நினைக்கிறோம். சலிகைக் காட்டி வளர்ப்பது சரியான முறையென்றும் தப்பான கொள்கைப் படித்தவரிடத்தும் காணலாம். குழந்தைகளைப் பழக்குவது கடினமென்றும் அநேகம் வீடுகளில் குழந்தைகள் கவனிக்கப்படவில்லையென்றும் லண்டன் டைம்ஸ் (London Times) வித்தியானுபந்தத்தில் (Educational Supplement) ஒரு நிருபர் எடுத்துக் காட்டி சிசு பாடசாலைகளைப் போற்றுதல் அவசியமென்று வற்புறுத்துகிறார். குழந்தைகள் தேசத்தின் மூலதனமென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அதன் உண்மையை தலைவர்களும் பெரியோர்களும் முற்றும் அறிந்துள்ளார்களென்று அவர்களுடைய செய்கையிலிருந்து சொல்லுவதற்கில்லை. பொது மேடைகளில் சிசு போஷணைகள் அவசியமெனக் கூறிவிட்டு, பிற்பாடு பணமில்லையென்று கையை விரித்துவிடுகிறார்கள். தேசத்தின் மூலதனத்தைப் போற்றிப் பாதுகாப்பதில் மேல்நாட்டில் ஊக்கம் அதிகம். பணமுடையிருப்பினும் மூலதனத்தைப் போற்றுவது முதற்கடமையென்றும், தற்சமயம் அசட்டையாயிருப்பின் பிற்காலம் பெரிய நஷ்ட மேற்படுமென்றும், மேல்நாட்டில் பொறுப்புவகிக்கும் தலைவர்கள் நன்கறிந்திருக்கிறார்கள்.

ஆரம்பப் பாடசாலையிலுள்ள குழந்தைகளை இத்தாலியில் கவனிக்கும் முறையைப்பற்றி மேற்கூறிய அநுபந்தத்தின் வேறு மலரொன்றில் காணலாம். நகரப் பள்ளிக்கூடங்களிலுள்ள குழந்தைகள் இருட்டறைகளிலும் நற்காற்றுப் பழக்கமில்லாத இடங்களிலும் தங்கிக் கஷ்டப்படுவது யாவரு மறிந்த விஷயம். உல்லாசப் பிரயாணமாக ஊரையும், பெற்றோரையும் விட்டுச் சிலநாள் வெளியே செல்வது போதாதென்பது இத்தாலியிலுள்ள தலைவர்களின் எண்ணம். சுகாதாரத்திற்கு வேண்டிய சூரிய வெளிச்சமும், நற்காற்றும், தேகப்பயிற்சி சாதனங்களும் எல்லாப் பிள்ளைகளுக்கும் அவசியம். இதை உத்தேசித்து இத்தாலியிலுள்ள உபாத்தியாயர்கள் உபாயமொன்று செய்திருக்கிறார். ஊருக்குச் சற்று தூரத்தில் பெரிய மைதானத்தைத் தேடி அங்கு தினந்தோறும் சில மாதங்களில் பள்ளிக்கூடப் பிள்ளைகளெல்லோரையும் கூட்டிக்கொண்டு காலை முதல் மாலைவரை தங்கி இரவில் குழந்தைகளை வீடுகளில் சேர்க்கிறார்கள். சுகாதார அதிகாரிகளின் உதவியுடன் செடிகளோடு கூடின சரியான மைதானத்தைத் தயார்செய்து நல்ல சுத்தமான தண்ணீரையும் ஏற்பாடு செய்துகொள்ளுகிறார்கள். நீந்தவும், விளையாடவும், பாடவும் சூரியவெளிச்சத்தை அனுபவிக்கவும் சௌகரியங்களுண்டு. கதைகள் சொல்வதும் பாடங்கள் படிப்பதும் தினசரி திட்டத்தி லடங்கியுளது. ரொட்டி, பால், பழம் முதலிய உணவும் மைதானத்

...ரிப்... ...600 0...

தில் அளிக்கப்படும். ஏழைக் குழந்தைகளுக்கு இனமாகவும், மற்றவர்களுக்கு சொற்பத் தொகையிலும் நல்லுணவு கொடுக்கிறார்கள். உபாத்தியாயர்களுடன் பிள்ளைகள் உல்லாசமாகப் பலநாள் மேற்கூறியபடி வசிப்பதால் பிள்ளைகளின் வளர்ச்சி மிகவும் செவ்வையா யிருப்பதாகத் தெரிகிறதாம். பிள்ளைகளை காலையில் ஒருங்கு சேர்த்து பாடிக்கொண்டே மைதானத்தை யடைவது குழந்தைகளுக்கு உத்ஸாகத்தை யுண்டுபண்ணுகிறதாம். ஸ்தலஸ்தாபனங்களும், ரெயில், டிராம் அதிகாரிகளும் வேண்டிய சௌகரியங்களைச் செய்துவருகிறார்கள். இவை செய்திருக்கிறோம்! மேலே செய்ய வேண்டியதென்ன! என்று தம்மைத் தாமே அதிகாரிகளும் உபாத்தியாயர்களும் கேட்டுக்கொள்வதாலேயே குழந்தைகளாகிய மூலதனம் வலுவடைகிறது. ஊக்கமும் பொறுப்புமிருப்பின் பலனை யடையலாம்.

பொருளுதவி :—

இப்போது கொடுத்துவருகிற அதிகப் பொருளுதவி இனிமேல் குறையக்கூடுமென்று மானேஜ்மெண்டாருக்கு ஒரு எச்சரிக்கை வந்திருக்கிறது. சீர்திருத்தம் ஏற்படும்போது பொருளுதவி குறையலாமெனக் கேட்பது கவலைக்கிடமாகும். சில வருஷங்களாக ஜில்லாக் கல்வி நிர்வாக சபைகள் (District Educational Councils) புகார் செய்து வருவது எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். பணமுடை யேற்பட்ட படியால் உதவி தொகையைக் குறைத்து விட்டோமென்று அதிகாரிகள் சொல்லவே நிர்வாக சபைகள் பள்ளிக்கூடங்களிற்குச் சேரவேண்டிய தொகையைக் குறைக்கின்றன. இது காரணமாக உபாத்தியாயர்கள் கஷ்டப்படுகிறார்கள். சமீபத்தில் சென்னையில் ஜில்லா கல்வி நிர்வாக சபையில் பொருளுதவியைப்பற்றி ஆலோசனை செய்தார்கள். இப்போதுள்ள பள்ளிக்கூடங்களுக்கே பொருளுதவி போதாதென்றும் புதிதாக ஏற்படும் பள்ளிக்கூடங்களுக்கு என்ன உதவி செய்ய முடியுமென்றும் யோசனை செய்ததாகத் தெரியவருகிறது. புதிய பள்ளிக்கூடங்களுக்கு உதவி கிடையாதென்று சொல்வது நியாயமல்லவென்றே நாம் கருதுகிறோம். சபையார் புதிய பள்ளிக்கூடத்தை அங்கீகரித்திருக்கிறார்கள். அவசியமில்லாவிடில், புதிய பள்ளிக்கூடத்தை அங்கீகரித்திருக்கமாட்டார்கள். சர்க்காரிடமிருந்து பொருளுதவி எதிர்பாராமலே பள்ளிக்கூடத்தை நிர்வாகஞ் செய்யக்கூடிய மானேஜ்மெண்டு நம் மாகாணத்தில்லையென்றே சொல்லலாம். பொருளுதவி சற்று குறைந்தாலும் அநேக டீசர் மானேஜர் பள்ளிக்கூடங்களில் அதிக கஷ்டமுண்டாகும். பொருளுதவி குறைந்தாலும் பள்ளிக்கூடம் சரியான நிலையிலேயே யிருக்குமென்று அதிகாரிகளும் தலைவர்களும் நினைப்பது தவறாகும். வசதிகள் குறைவதால் பிள்ளைகளின் படிப்பும் மெச்சத்தக்கதாயிராது. பொருளுதவித் திட்டத்தை தாராளமாக நிர்ணயம் செய்து அதைக் குறைக்காது காலத்திற்கேற்றபடி அதிகப்படுத்துதல் அவசியமாகும். இல்லாவிடில் ஜில்லா சபைகள் சரியானவை யல்லவென்றும், அவசியமாய் வேண்டியதைச் செய்யச் சக்தியற்றதென்றும் மேனேஜர்கள் நினைக்கக்கூடும்.


ஸ்ரீ

# போதனு முறை பயிலும் ஆசிரிய மாணவருக்கு

## உரிய நூல்கள்

விலை சரசம். மொத்தமாக வாங்கினுல் இன்னும் சகாயம்!

போதனுமுறைப் பேராசிரியர்களும் பரிட்சாதிகாரிகளும் கலந்து எழுதிய நூல்கள். சர்க்காரின் பாடதிட்டத்தைத் தழுவியவை.

**1. பூகோளம்** 1—0—0

பூகோள சாஸ்திரம் முழுமையும் சுருங்கச் சொல்லும்; விளங்க வைக்கும். கற்க மிகவும் சுலபம்.

**2. சமூக நூல்** 0—8—0

ஸோஷியாலஜி எனும் நவீன சாஸ்திரத்தை நன்கு உரைக்கும். இனிய எளிய தமிழ் நடை.

**3. இந்துதேச சரித்திரம்** 1—4—0

ஒரே புத்தகத்தில், சரித்திரம் முழுதும் காணலாம். இலகுவில், சகல விஷயங்களையும் அறியலாம்.

**4. சுய கணித போதினி** 1—4—0

நவீன முறையில் அமைந்தது. கணித பாடம் முட்டாக இராமல் உருசியாகக் காணும். தாமே எளிதில் கற்கலாம்.

**5. பாடக் குறிப்பும் குணதோஷ விவரமும்** 0—5—0

பாடக் குறிப்பு எழுதும் வகையும் குணதோஷ விவரங்களும் எளிதில் துலங்கும். இதுவே ஒரு வருஷத்திற்கு வரும்.

**6. வினு விடை நூல்** 0—6—0

புதுமாதிரியான துண்டு வினுக்கள். விடைகளும் உள. சரித்திரம், கணிதம், பூகோளம், சமூக நூல், இயற்கைப் பாடம் ஆகிய ஐந்திலும் பரீட்சையில் தேறப் பயன்படும்.

ஆறு புத்தகங்களும் மொத்த விலை ரூ 4—11—0. ஒரே தடவையில் ஆறும் சேர்ந்து வாங்கினுல் ரூபாய் ஒன்று தள்ளித் தருவோம். தபால் செலவு 11 அணு ஆகும். முன் பணம் அனுப்புதல் வேண்டும்.

## இதர பிரசுரங்கள்

துரைத்தனத்தார் அங்கீகரித்தவை

| வாசகங்கள் | | ரூ. | அ. | ப. | உப வாசங்கள் | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|
| மங்கள வாசகம் | (1) | 0 | 2 | 6 | பால ராமாயணம் | 0 | 5 | 0 |
| ,, | (2) | 0 | 3 | 0 | பால பாரதம் | 0 | 8 | 0 |
| ,, | (3) | 0 | 4 | 0 | பால ஸ்காந்தம் | 0 | 8 | 0 |
| ,, | (4) | 0 | 5 | 0 | பால பாகவதம் | 0 | 4 | 0 |
| ,, | (5) | 0 | 6 | 0 | பால கருடன் | 0 | 4 | 0 |
| செ[illegible]ழ் மஞ்சரி மலர் | 1 | 0 | 7 | 0 | பால வாமனன் | 0 | 4 | 0 |
| ,, ,, ,, | 2 | 0 | 9 | 0 | பால கலாமஞ்சரி | 0 | 4 | 0 |
| ,, ,, ,, | 3 | 0 | 10 | 0 | பாண்டவன் தூதன் | 0 | 6 | 0 |
| ,, ,, ,, | 4 | 0 | 12 | 0 | | | | |

**ஜயம் கம்பனியார்,**

நுங்கம்பாக்கம் :: :: சென்னை.

ஸ்தாபிக்கப்பட்டது 1888.] [டெலிபோன்: 3693

# ஸி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்,

பப்ளிஷர்ஸ்:

27, சின்னதம்பித் தெரு, சென்னை.

ரு. அ. பை.

**குடும்ப சாஸ்திரம் (DOMESTIC ECONOMY)** 1—0—0

—T. A. ராஜரத்தினம் பிள்ளை எழுதியது.

**நூதனமுறைக் கணிதம் I—V**

—T. R. வைத்தியநாத அய்யர் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| முதற் வகுப்பு<br>இரண்டாம் வகுப்பு<br>மூன்றும் வகுப்பு | 0—5—0 | நான்காம் வகுப்பு | 0-6-0 |
| | | ஐந்தாம் வகுப்பு | 0-8-0 |

**இளைஞர் இலக்கணம் I—V**

—வட ஆற்காடு ஜில்லா லோயர் பாடசாலை மேற்பார்வையாளரா யிருந்த D. சௌந்தரராஜுலு நாயுடு எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் | 0-3-0 | மூன்றும் புத்தகம் | 0-6-0 |
| இரண்டாம் புத்தகம் | 0-5-0 | நான்காம் புத்தகம் | 0-8-0 |

**தமிழ் நூற் களஞ்சியம் I—II**

—S. பட்டுசோமி ஓதுவார் எழுதியது.

| | |
|---|---|
| முதற் புத்தகம் (நான்காம் பாரத்திற்குரியது) | 0-10-0 |
| இரண்டாம் புத்தகம் (ஐந்தாம் பாரத்திற்குரியது) | 0-14-0 |

**பால வாசகம் (BALA VACHAKAM) I—V**

—திருச்சிராப்பள்ளி ஸெண்ட் ஜோஸப் கலாசாலை தமிழாசிரியர் S. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| முதற் வகுப்பு | 0-2-6 | | |
| இரண்டாம் வகுப்பு | 0-3-0 | நான்காம் வகுப்பு | 0-4-6 |
| மூன்றும் வகுப்பு | 0-3-6 | ஐந்தாம் வகுப்பு | 0-6-0 |

கேட்லாக் வேண்டுவோர் மேற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

# இரக்ஷணைப் படம்—2



ரஸ்தாவில் செல்லும் வண்டிகளைப் பின்பற்றி ஓடுவது அபாயம் தரக்கூடிய பழக்கம். வண்டி திரும்பும் பொழுதும், வண்டி நிற்கும்பொழுதும் அல்லது வேகம் அதிகரிக்கும்பொழுதும், அதைப் பிடித்துக் கொண்டு ஓடுபவர்கள் கீழேவிழ ஏதுவாகும். இதனால் காயம்படுவது மாத்திரமில்லாமல் உயிருக்கே சேதம் நேரிடலாம்; ரஸ்தாவில் செல்லும் மற்ற வண்டிகள் விழுந்தவர் மேல் ஏறிவிடலாம்.

## எலிமெண்டரிப் பாடசாலை முதல் 5 வகுப்புகளுக்கான புத்தகங்களின் விவரம்

### 1-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—1 | 0 | $2\frac{1}{2}$ |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |

### 2-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—2 | 0 | 3 |
| இயற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 | 3 |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |
| கிண்டர் கார்டன் தினசரிக் கணக்கு 2-ம் புத்தகம் | 0 | $3\frac{1}{2}$ |

### 3-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—3 | 0 | 4 |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |
| இயற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 | 3 |
| சிறுமணிக் கதைகள்—S. S. அருணகிரி நாதர் | 0 | 5 |
| தினசரிக் கணக்கு (முதற் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 4 |

### 4-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—4 | 0 | $4\frac{1}{2}$ |
| லிவிக்ஸ் (முதற் புத்தகம்) S. சுப்பிரணிய அய்யர் | 0 | 5 |
| இயற்கை அற்புதங்கள் (2-ம் புத்தகம்) | 0 | 4 |
| தினசரிக் கணக்கு (2-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 5 |
| இந்து தேசச் சரித்திரக் கதைகள் முதல் பாகம் | 0 | $4\frac{1}{2}$ |
| New Era English Readers First Primer—Edited by H. Champion | 0 | 5 |

### 5-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—5 | 0 | 6 |
| இயற்கை அற்புதங்கள் (3-ஆம் புத்தகம்) | 0 | 5 |
| கம்பர் அல்லது கவியரசர்—A. N. கன்னையா | 0 | 5 |
| லிவிக்ஸ் (2-ஆம் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 | 6 |
| இந்து தேச சரித்திரம் V. ஜெயராம அய்யர், B.A., L.T. | 0 | 5 |
| தினசரிக் கணக்கு (3-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 5 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை | 0 | 4 |
| New Era English Readers Second Primer—Edited by H. Champion | 0 | 6 |
| New Era Story Books, Book I By C. Gordon | 0 | 3 |

பி. ஜி. பால் அண்டு கம்பெனி, புத்தக வியாபாரிகள்,
12, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை.

A GUIDE TO

## ELEMENTARY SCHOOL TEACHERS

By Mrs. R. S. SWARNAMBAL, M.A., L.T.
with a foreword by D. S. REDDI, M.A, (*Oxon.*)

**English Edn.]** **178-pp. with 45 Illustrations** **[Price Re. 1**

This guide gives exhaustive practical suggestions and hints which will help teachers to draw up time-tables and syllabuses, and impart instruction on satisfactory useful lines and thus improve the general efficiency of all Elementary Schools of the Presidency. *(Descriptive illustrated Booklet free)*

**G. SRINIVASACHARI & SONS,**
EDUCATIONAL PUBLISHERS,
**Narasingapuram Street —— Mount Road, Madras.**

*N.B.*—**Tamil Edition—in the Press**

Regd. No. M. 5473


# தென் இந்திய ஆசிரியர்

# ஐக்கிய காப்பு நிதி

## ஆசிரியர்களுடையதே

## பின் காலத்திற்கு ஒரு மூலதனம்

ஆசிரியர்களுக்குள்

ஐக்கியமும் பெருகும்

எட்டு வருஷங்களுக்கு முன் தென் இந்திய
ஆசிரியர் சங்க ஐக்கிய காப்பு நிதி
ஸ்தாபிக்கப்பட்டு
செழித் தோங்கி வளர்ந்து வருகிறது.
உடனே சேருங்கள்

— மற்ற விவரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதலாம். —

41, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

M. K. Ramamurti,
கௌரவ காரியதரிசி.


Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)


தாது ஸு ஆவணி மீ
AUGUST, 1936

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதருஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

# பொருளடக்கம்

1. தினசரி நடவடிக்கைகளும் ஆரம்பப் பள்ளிக்கூடக் கணக்கும் ... ... 155
—எஸ். ஜெகன்னாதன்
2. கதா மூலம் ... ... 167
—அ. ஸ்ரீநிவாஸ வரதன்
3. கதைப் பாட்டு ... ... 170
—R. வெங்கடாச்சாரி
4. ஜீவகாருண்யம் ... ... 171
—வித்துவான் K. P. வெங்கடகிருஷ்ணமாசார்யர்
5. ஆரம்ப வாசக புஸ்தகங்களும், ஆசிரியர்களும் ... 173
—T. V. வெங்கட்ராமன் B.A., L.T.
6. திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கம், ஆரம்பக் கல்வி ... 175
S. T. இராமானுஜ அய்யங்கார்
7. கல்விச் செய்தியும் குறிப்பும் ... ... 178
8. பத்திராதிபர் குறிப்புகள் ... ... 180
9. ரக்ஷணைப் படம் ... ...

## கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. டைடல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

# பாலர் கல்வி

தொகுதி 1] 1936௵ ஆகஸ்டு௴ [பகுதி 6


OCT 1936

## தினசரி நடவடிக்கைகளும் ஆரம்பப் பள்ளிக்கூடக் கணக்கும்

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை

*( All rights reserved )*

சென்ற இதழில் பாலர் வகுப்புக் கணக்குகளைக் கற்றுக் கொடுக்க எப்படி விளையாட்டுக்களும் உபகரணங்களும் அவசியம் எனப் படித்தோம். அதற்கு முன் இதழில் ஒரே ஒரு "பிராஜெக்டை" மூன்றாவது நான்காவது ஐந்தாவது வகுப்புக்களில் குழந்தைகளின் வயது அனுபவம் இவைகளுக் கேற்றவாறு எவ்வாறு பகிர்ந்து கற்றுக்கொடுக்கலாம் என்றும் அறிந்தோம். தற்கால கணிதபோதனை இனிவரும் உலகவாழ்க்கைக்கு ஏற்றதாய் இருக்க வேண்டுமென்பதே எல்லோருடைய கொள்கையாய் இருக்கின்றது. அதற் கேற்றவாறு நாமும் அதுவிஷயத்தைப்பற்றிப் பரிசீலனை செய்வது அவசியம். நான் முந்தி ஒருதடவை சுருக்கமாகக் குறிப்பிட்ட 16 தினசரி சந்தர்ப்பங்களை எப்படிக் கணித பாடத்தில் வகுப்பிற்குத் தகுந்தவாறும் கணித ஞானத்தை அபிவிருத்தி செய்யத்தக்கவாறும் கணிதத்தில் போதுமான மனப்பயிற்சி அளிக்கத்தக்கவாறும் எடுத்துக்கொள்ளலாம் என்றும் இங்குத் தெரிவிக்கின்றேன்.

பிராஜெக்ட் 1. ஆகாரம்

வகுப்பு 3

| | |
|---|---|
| மிட்டாய் வாங்குதல் | நாணயக் கணக்கு |
| அரிசி மூட்டை | பெருக்கல், வகுத்தல் |
| சோடாக் கடை | நாணயக் கணக்கு |
| பக்ஷணக் கடை | நாணயக் கணக்கு |
| வெற்றிலை | நூறுக் கணக்கு |

வகுப்பு 4

| | |
|---|---|
| காய்கறிக் கடை<br>காபி ஹோட்டல்<br>மாதச் சாப்பாடு<br>மளிகைக் கடை | நாணயக் கணக்கு |
| பழக்கடை | பின்னம், டஜன், நூற்றுக்கணக்காக பழம் வாங்குதல் |
| சாதம் சமைத்தல்<br>சுண்டல் சுண்டுதல்<br>அவல் இடித்தல்<br>நெல் குத்துதல்<br>மூட்டை பிரித்துக்கட்டுதல்<br>மாவு அரைத்தல் | முகத்தல் அளவைக் கணக்குகள்<br>படி 2 ஆழாக்கு |
| வெண்ணெய் காய்ச்சுதல்<br>புளி கொட்டை வாங்குதல் | வீசை, பலம் அல்லது தூக்குக் கணக்குகள் |
| மிட்டாய், ரொட்டி | பவுண்டு நிறை |
| இலை, தொன்னை | நூறுக் கணக்கு, பின்னக் கணக்கு |

வகுப்பு 5

| | |
|---|---|
| விறகு வியாபாரம் | லாப நஷ்டம் |
| மாதாந்தரத் தயிர்க் கணக்கு<br>,, பால் கணக்கு | |

பிராஜெக்ட் 2. உடுப்பு, நகை

வகுப்பு 3

| | |
|---|---|
| நாடா வாங்குதல் | நாணயக் கணக்கு |
| நீளத் துணியைத் துண்டு போடுதல் | முழம், கெஜம் கணக்கு<br>வகுத்தல், பெருக்கல் |

வகுப்பு 4

| | |
|---|---|
| தையற்கடை<br>ஜவுளிக்கடை | கெஜக் கணக்கு<br>நாணயக் கணக்கு |
| பவுன் விலை | நாணயக் கணக்கும், பின்னமும் |
| வண்ணான் கூலி | பின்னக் கணக்கு |
| நகை வியாபாரம்<br>ஜவுளிக்கடை | கமிஷன், தரகு முதலியன |



பிராஜெக்ட் 3. பண்ட பாத்திரம்.

வகுப்பு 3

| | |
|---|---|
| பொங்கல் பானை<br>கார்த்திகை அகல்<br>கலியாணப் பாலிகை | சுலபமான நாணயக் கணக்குகள்<br>பெருக்கல் |

வகுப்பு 4

| | |
|---|---|
| இருப்புப் பாத்திரம் | நாணயக் கணக்கு |
| பித்தளைப் பாத்திரம் | நிறுத்தலளவை |
| ஜாடி | முகத்தலளவை (பவுண்டு) |
| பீங்கான் பாத்திரம்<br>ஈயம் பூசுதல் | நாணயக் கணக்கு |

பிராஜெக்ட் 4. சுகாதாரம்.

வகுப்பு 3.

| | |
|---|---|
| ஆஸ்பத்திரி<br>அம்மைகுத்துதல் | கூட்டல் கழித்தல். |

வகுப்பு 4.

| | |
|---|---|
| மருந்துக் கடை | நாணயம் |
| சோப்பு வியாபாரம், | டஜன், குரோஸ், |
| கட்டில் பின்னுதல்<br>கொடிக் கயிறு | முழம், கெஜம், சாண் மார்பு. |

வகுப்பு 5.

| | |
|---|---|
| மழை அளவு<br>தினசரி உஷ்ணம்<br>தேக உஷ்ணம் | தசாம்ச பின்னம். |
| இங்கிலீஷ் மருந்து | அவுன்ஸ் அளவு. |

பிராஜெக்ட் 5. வருஷாந்திரச் சம்பவங்கள்

வகுப்பு 3.

| | |
|---|---|
| இராஜாக்களுக்கு மரியாதை குண்டு | கழித்தல். |

வகுப்பு 4.

| | |
|---|---|
| ஜூப்ளி கொண்டாட்டம் | வருஷம். |
| கலியாணம் வெளிச்சம்<br>கிராமபோன்<br>சில்லறை | நாணயக் கணக்கு. |

| | |
|---|---|
| தக்ஷிணை | |
| வாசனை சாமான்கள் | நிறுத்தல் அளவு, பின்னம். |

வகுப்பு 5.

| | |
|---|---|
| கலியாணச் செலவு | நாணயம். |
| கலியாணப் பந்தல் | இடவேலை. |
| பந்தல் கீத்து | |
| கிரகண நேரம் | கால அளவை. (மணி நிமிஷம்) |

பிராஜெக்ட் 6. மாதாந்திரப் பண்டிகை

| | |
|---|---|
| பொம்மைக் கொலு. | ஐதை நாணயக் கணக்கு. |
| நவராத்திரிச் சொப்பு. | |
| குழந்தைகளின் விளையாட்டுச் சாமான்கள் | ,, |
| தீபாவளி டபாஸ் கடை | |
| தமிழ்ப் பஞ்சாங்கம் | தமிழ் இலக்கம். |
| அரச பிரதக்ஷணம் | |

வகுப்பு 5.

| | |
|---|---|
| பஞ்சாங்கம் படித்தல் | நாழிகை. |
| ராகுகாலம் | கால அளவை. |
| முகூர்த்த காலம் | |
| தோரணம் கட்டுதல் | நீட்டலளவை |
| அகஸ் பகல்பொழுது | நாழிகை விநாடி |

7. பிராஜெக்ட் 7. குழந்தைகளின் படிப்பும், பள்ளிக்கூடமும்.
வகுப்பு 3.

| | |
|---|---|
| வகுப்பிலுள்ள பிள்ளைகள் | |
| பள்ளிக்கூடப் பிள்ளைகள் | கூட்டல், கழித்தல் |
| புஸ்தகம் பக்கம் | |
| பிள்ளைகளின் பரீக்ஷை மார்க்கு | |
| பிள்ளைகள் விளையாட்டு | நீட்டல் அளவை. |
| பள்ளிக்கூட ஆஜர் | சதுரங்கம் |
| படச்சட்டம் | நீட்டல் அளவை. கூட்டல் கழித்தல். |
| பிள்ளைகளின் உயரம் | |
| தலை பின்னும் நாடா | நாணயக் கணக்கு, காலணா, அரையணா |
| விளையாடும் பலூன் | |



வகுப்பு 4.

| | |
|---|---|
| பிள்ளைகளின் சம்பளம் | முழுமை, அரை. |
| புஸ்தகம் வாங்குதல் | நாணயம். |
| பரிசு பெறுதல் | |
| பந்தயம். | நேரம், தூரம். |
| பள்ளிக்கூட நேரம் | நேரம். |
| விளையாட்டுக் கருவி | நாணயம். |
| பிள்ளைகளின் நிழல் | நேரம்- நீளம். |

வகுப்பு 5.

| | |
|---|---|
| பள்ளிக்கூடப் பந்தயம் | நிமிஷம், செக்கண்ட் |
| புஸ்தகக்கடை | நாணயக்கணக்கு கமிஷன் |
| மூத்தவன் இளையவன் | வருஷம், மாதம், நாள். |
| பிள்ளைகளின் நிறை | பவுண்டு. |
| | சராசரி, உயரம், நிறை. |

பிராஜெக்ட் 8. கோயில் உற்சவங்கள்.

வகுப்பு 3.

| | |
|---|---|
| சர்க்கரை மிட்டாய் | |
| பொரி உருண்டை | நாணயம் |
| தேசப்படம் பார்த்தல் | |
| கோபுர உயரம் | எண்களைப் படித்தல், கழித்தல் |
| தீவட்டி | |
| விமானம் | பெருக்கல். |
| தேர்வடம் இழுக்கும் ஆட்கள். | |

வகுப்பு 4.

பட்டாணிக்கடலைக்கடை

| | |
|---|---|
| கடலை பொரித்தல் | A. முகத்தல் அளவை, படி, ஆழாக்கு |
| நெல் பொரி | |
| பட்டாணி | B. நாணயக் கணக்கு |
| அவல் | |
| ரங்க ராட்டினம் | காலணா அரையணா கணக்கு |
| தொட்டில் ராட்டினம் | |
| யானை மீது குழந்தைகளை ஏற்றி வைத்தல் | ஷை |
| கோயில் அர்ச்சனை | கடைக் கணக்கு |
| திருநாள் கடைகள் | |

| | |
|---|---|
| அலுமினியம் | |
| பொம்மை | |
| மரச்சாமான்கள் | கடைக் கணக்கு |
| எது எடுத்தாலும் $1\frac{1}{2}$, $2\frac{1}{2}$ அணா சாமான்கள் | |
| சுவாமி தூக்கும் ஆட்கள் கூலி | நாணயக் கணக்கு |
| தேர் இழுக்கும் ஆட்கள் கூலி | நாணயக் கணக்கு முகத்தலளவை |
| வாண வேடிக்கை | கூட்டல் கழித்தல் நாணயக் கணக்கு |

வகுப்பு 5.

| | |
|---|---|
| கோவில் உண்டி | நாணயக் கணக்கு |
| திரு நாள் கடைவரி | விஸ்தீர்ணம் |
| பிராகாரம் வீதிப் பிரதக்ஷணம் | நீட்டலளவை |
| தெப்ப உற்சவம் | ஷை |

பிராஜெக்ட். 9. பிரயாணம், யாத்திரை

வகுப்பு 3.

| | |
|---|---|
| முழு டிக்கட்டு, அரை டிக்கட்டு | முழுமை, பாதி |
| ரிக்ஷா (2 பேர் ஏற்ற) | |

வகுப்பு 4.

| | |
|---|---|
| ஜட்கா (4 பேர் ஏற்ற) | $\frac{1}{4}$ பங்கு |
| ரயில் கிளம்புதல் வந்து சேர்தல் | நேரம் |
| ரயில்வே கால அட்டவணை | ஷை |
| டிக்கட்டு | நாணயக் கணக்கு |
| படகு யாத்திரை | நேரம், நாணயம், தூரம் |
| சைகில் ஜட்கா வாடகைக்கு விடப்படும் | நேரம், நாணயம் |
| கைகாட்டி, மைல் கல் | மைல் பர்லாங்க் |
| டிராம் | நாணயம், பின்னம் |
| குகை ரயில் | குகையின் நீளம் |
| நீர் வீழ்ச்சி<br>ஆற்றின் நீளம் | நீளம், தூரம் |

வகுப்பு 5:

| | |
|---|---|
| மலை உயரம் | நீண்ட தூரம் |
| ரயில்வே பிரயாணம் | தூரம், நேரம், வேகம் |
| மோட்டார் பஸ் | மோட்டார் எண்ணெய் காலன், நாணயம் |



| | |
|---|---|
| ஆகாய விமானம் | போட்டிப் பந்தயம்<br>விமான யாத்திரை, லண்டன், கராச்சி, |
| நீண்ட ரயில்வே பிரயாணம்<br>சமுத்திரப் பிரயாணம்<br>பட மூலமாக | தூரம் செலவு<br>பவுன்<br>தேசப்படம் படித்தல் |

குறிப்பு:—பூகோள சம்பந்தமான பாடங்களும், புள்ளி விவரங்களும் இங்குக் கணக்குப் பாடத்தில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இவை பொது அறிவு அபிவிருத்திக்கும் கணிதப்பயிற்சிக்கும் ஏற்றதாயும் உள்ளன. இவைகளே உலக வாழ்கைக்கும் சம்பந்தப்பட்டுள்ளனவாயு மிருக்கின்றன.

பிராஜெக்ட் 10.

சமாசாரம் போக்குவரத்து

வகுப்பு 4.

| | |
|---|---|
| உள் நாட்டுத் தபால் | நாணயம் |
| தந்தி சமாச்சாரம் | நேரம் |
| கலியாணப் பத்திரிகை<br>தினசரிப் பத்திரிகை<br>கவர்<br>புஸ்தகம் | இவை நாணயம், பின்னம்<br>தபால் மூலம்<br>அனுப்புதல் |

வகுப்பு 5.

| | |
|---|---|
| உள் நாட்டுத் தபால் | வந்து சேரும் நேரம் |
| வெளி நாட்டுத் தபால் | ஷை |
| உள் நாட்டுத் தந்தியும் | தந்திக் கட்டணமும் நாணயம் |
| வெளி நாட்டுத் தந்தியும் | தந்திக் கட்டணமும் பெருக்கல் |

பிராஜெக்ட் 11. வீடு கட்டுதல்

வகுப்பு 3

| | |
|---|---|
| வீடு குடக்கூலி | அரைபங்கு |

வகுப்பு 4.

| | |
|---|---|
| பிளானைப் பார்த்து அளந்து எழுது | |
| பிளானைப் பார்த்து 2 மடங்கு அதிகப்படுத்தி எழுது | |
| ஏணி | உயரம் |
| மாடிப்படி | |
| வீட்டுச் சாமான்களை அளத்தல் | |

| | |
|---|---|
| குடக்கூலி | மாதம், வருஷம் |
| உயர்ந்த கட்டடங்கள் | அடி, (கழித்தல்) |
| வெளிச்சம் | எண்ணெய்க்கணக்கு. |

வகுப்பு 5.

| | |
|---|---|
| பிளான் வரைதல் | சதுரம், நீண்ட சதுரம் பரப்பு, விஸ்தீர்ணம் சதுர அடி |
| அறைகளில் விஸ்தீர்ணம் | சதுர அடி |
| செங்கல் தளவரிசை | சதுரம் 100 சதுர அடி |
| கடப்பைக்கல் தளவரிசை | |
| பலவகைத் தட்டிகள் | சதுர அடி |
| ஜன்னல் கதவு, ஊஞ்சல் பலகை | சதுர அடி |
| குடிசைக்குக் கூரை போடுதல் | சதுரம் = 100 சதுர அடி |
| கூரைக்கு ஓடு மூடுதல் | |
| சுவர்க்குச் சுண்ணும்பு பூசுதல் | |
| ஓடு, செங்கல் | ஆயிரக்கணக்கு வராகன் கணக்கு |
| கீத்து | 100-க் கணக்கு |
| தூண் அங்கணம் | நீட்டலளவை |
| படம் மாட்டுதல் | |
| கிணறு (ஆழம்) | |
| வீடுகட்டத் தேவையான சாமான்கள் / ஆட்களுக்குக் கூலி | நாணயக் கணக்கு |
| வெளிச்சம் | கிரஸின் எண்ணெய் வியாபாரம் லாப நஷ்டம் |

பிராஜெக்ட்-12. தோட்டம், நிலம், தெரு,

வகுப்பு

| | |
|---|---|
| செடி, பூந்தொட்டி சதுரம் நீண்ட சதுரம்-(வயல்) | விலைகள் |
| தண்ணீர் செல்லும் குழாயின் நீளம் | நீட்டலளவை |

வகுப்பு 5.

| | |
|---|---|
| சாலை போடுதல் | சதுரக் கணக்கு |
| சாலையில் மரம் வைத்தல் | நீட்டலளவை |
| சங்கிலி, டேப் வைத்து அளத்தல் | ஷை |



| | |
|---|---|
| வயலின் விஸ்தீர்ணம் | வேலி, மா, குழிக் கணக்கு ஏகராக் கணக்கு |
| நிலம் குத்தகை கண்டுமுதல் குடியானவர்களுக்குக் கூலி | படி, மூட்டை (முகத்தலளவை) |

பிராஜெக்ட் 13. ஆடுமாடு, கால் நடை

வகுப்பு 3

| | |
|---|---|
| அவைகளின் வயது | கழித்தல், பெரியது சிறியது |

வகுப்பு 5. தீனி வகை

| | |
|---|---|
| வைக்கோல் வண்டி | நாணயம் |

பிராஜெக்ட் 14. பண வரவு செலவு

வகுப்பு 3

ரூபாய் நோட்டு
ரூபாய் நாணயம்

வகுப்பு 4

| | |
|---|---|
| தகப்பனார் சம்பளம் வாங்கி வருதல் | நாணயக் கணக்குகள் |
| வரவு செலவு கடன் | |

வகுப்பு 5

| | |
|---|---|
| கைப்பெட்டி | சில்லரை நாணயம் மொத்தம் |

பிராஜெக்ட் 15. பொழுது போக்கு

வகுப்பு 3

| | |
|---|---|
| கடிகாரம் மணி | நேரம், கால அளவை |
| ஸ்டாம்பு / நெருப்புப் பெட்டி படம் (சேர்த்தல்) | கூட்டல், கழித்தல், பெருக்கல் |

வகுப்பு 4

| | |
|---|---|
| டிராமா, சினிமா, சர்க்கஸ் | டிக்கட்டு |
| ஹோட்டலில் சிற்றுண்டி அருந்துதல் | நாணயக் கணக்கு, கூட்டல், கழித்தல், பெருக்கல் |
| மிருகக் காட்சிச் சாலை / மீன் காட்சிச் சாலை | கூட்டல் கழித்தல் நாணயக் கணக்கு |
| சமுத்திரக்கரை—கிளிஞ்சல் சுண்ணாம்பு | அளவு, நாணயம் |

பந்து ஆடுமிடம் தட்டி — சதுர அடி விலை
காகித மாடல்கள் செய்தல்
தினசரிப் பத்திரிகை — நாணயக் கணக்கு

பிராஜெக்ட் 16.

சமூக அங்கத்தினன்

பெரியோர்களின் வயது
வரி வகைகள் — நாணயக் கணக்கு
ஏலம் போடுதல்
பணம் சேர்த்தல்
வீட்டுத் தினசரி கணக்கு வைத்தல்
வட்டிக் கணக்கு
தரகு
சராசரி
கொடுக்கல் வாங்கல் வட்டி வியாபாரம்
முன்பணம் கொடுத்தல்
மாத வீதா சாரமாகத் திருப்பிக் கொடுத்தல்

பெரிய எண்களின் உபயோகம்

எண்களைப் படித்தல்

இது ஒரு முக்கிய விஷயம். எந்தெந்தச் சமயத்தில் பெரிய எண்களைப் படிக்க நேரிடுகின்றது என்பதை ஆராய்வது அவசியம். தினசரிப் பத்திரிகையைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| 1. ஜனத்தொகை | 7. தேச வரவு செலவு |
| 2. எலெக்ஷன் முடிவு | 8. மாகாண வரவு செலவு |
| 3. வெள்ளி ஜூப்ளி வசூல் | 9. ஸ்தல ஸ்தாபன போர்டுகள் வரவு செலவு |
| 4. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஞாபகார்த்த நிதி | 10. ரெயில்வே வருமானம் |
| 5. எலெக்ஷன் வோட்டர்கள் ஜாப்தா | 11. பூகம்ப நிதி |
| 6. அரசர் வரவு செலவு | 12. ஜனங்கள் நிரம்பிய கூட்டங்கள், உற்சவம், லக்ஷதீபம் |
| | 13. தங்க ஏற்றுமதி முதலியன |



இவைகளில் முக்கியமாக எண்களைப் படிக்கும் திறமையே நிரம்ப வேண்டியிருக்கின்றனவேயன்றி அவைகளை எழுத்தால் எழுத அவசியம் ஏற்படுகிறதில்லை. மேலும் ஏதாவது அவசியம் ஏற்படினும் 15 லக்ஷம் என்று குறிப்பிடுகிறதையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே உபயோகமாயுள்ள சந்தர்ப்பங்களை அனுசரித்தே இந்தக் கணித ஞானம் உபயோகப்படுகிறது.

மேலும் வயது, அனுபவம் இவற்றிற்குத் தகுந்தாற்போலும் இவ் விஷயத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் அவசியமாகும்.

எண்களை எழுத்தால் எழுதுதல்.

அதேமாதிரி எழுத்தால் எழுதவேண்டிய சந்தர்ப்பங்களையும் கவனிப்பது அவசியமாகும்.

உதாரணமாக :
1. சம்பளம் பெற்றுக்கொள்ளுதல்
2. வட்டிக்குக் கடன் கொடுத்தல் (பிராமிசரி நோட்டு)
3. மணி ஆர்டர்
4. ரெஜிஸ்தர், இன்ஷியூர்
5. சேவிங்ஸ் பாங்க்

இவைபோன்ற முக்கியமான சந்தர்ப்பங்களில் எண்களை எழுத்தால் எழுத நேரிடுகிறது. நமது கணிதப் பயிற்சியும் மேலே சொன்ன சந்தர்ப்பங்களை ஒட்டியிருத்தல் அவசியம். அத்துடன் எவ்வளவு தூரம் அவ் விஷயத்தில் கணிதஞானம் அவசியம் என ஆராய்ச்சி செய்ய மேலே சொல்லப்பட்ட சந்தர்ப்பங்களில் எவ்வளவு தொகை அதிகப்பட்டது என்பதை அவரவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வதும் அவசியம். கடைசியாகப் பாஷா ஞானம் ஒருவாறு விருத்தியடைந்த பிறகே இம்மாதிரி எண்களை எழுத்தால் எழுதக் கற்றுக் கொடுப்பதையும் கவனிக்கவேண்டும்.

கணித ஞானத்தின் எல்லை

ஆரம்பப் பள்ளிக்கூடக் குழந்தை 5 வகுப்புப் படித்துவிட்டுப் பள்ளியை விட்டுச் செல்லுமுன் மேலே கூறப்பட்ட 16 பிராஜெக்டுகளிலும் அடங்கிய நானுவிதக் கணக்குகளைச் செய்யத் தேர்ச்சியுள்ளவனுக விருத்தல் அவயயம். மற்றும் முக்கியமாகப் பார்க்குமிடத்து,

1. சதுரங்கங்கள்
2. நாணயக் கணக்கு
3. இடவேலை

இவைகளிலே அதிக ஞானம் வேண்டியிருக்கிறது. இதிலும்கூட மனக்கணக்குப் பயிற்சி பெரும்பாலும் தேவையாயிருக்கிறது. பள்ளி விவரங்களைச் சேகரிப்பது முக்கியம்.

மேலே சொல்லப்பட்ட 16-வித அனுஷ்டானங்களுக்கு ஏற்ற புள்ளி விவரங்களைச் சேகரிப்பதுதான் கஷ்டம். அவைகளைச் சேர்ப்பதற்கு வருஷக்கணக்காக நேரம் ஆகும். நான் அவைகளைச் சேகரம் செய்வதினுல் எனக்கு அதன் அருமையும் சிரமமும் நன்ருய்த் தெரியவருகிறது. அடியிற் கண்டவைகளிலிருந்து புள்ளி விவரங்களைச் சேர்க்க முடியும்.

1. தினசரிப் பத்திரிகை
   - தங்கம் வெள்ளி விலை
   - சீதோஷ்ணம்
   - மழை அளவு
   - சூரிய உதய அஸ்தமனம்
2. ரயில்வே கால அட்டவணைக் குறிப்புகள்
   - ரயில்வே நேரம்
   - ரயில் சார்ஜ்
   - மூட்டை அளவு
   - ஜனத்தொகை
   - ஊர்கள சம்பந்தப்பட்ட குறிப்புகள்

   } தூரம் போகவர டிக்கட்டு, மாதாந்தர டிக்கட்டு
3. நீராவிக் கப்பல் கம்பெனியார் வெளியீடு
   - கப்பல் புறப்படும் நாட்கள்
   - கப்பல் சார்ஜ்
   - தூரம்
4. தபாலாபீஸ் வெளியீடு
   - சாமான் அனுப்ப சார்ஜ்
   - ஆகாய விமான யாத்திரை
5. பள்ளிக்கூட ஆபீஸ்
6. ஊரிலுள்ள முனிசிபல் சபைபோன்ற ஆபீஸ்கள்
7. கோயில் தேவஸ்தான ஆபீஸ்
8. கண்டிராக்டர்கள், கடைக்காரர்கள்
9. வருமான வரி, நிலவரி, தபால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்
10. இவற்ருேடு நாமும் பிள்ளைகளும் கலந்து சேகரிக்கவேண்டியவைகள் பலவிருக்கின்றன (கடை சாமான் விலை முதலியன)

பிள்ளைகளிடம் சில காரியங்களைச் சொல்லிவிட்டால் பலர் அதில் கண்ணும் கருத்துமாய் இருந்து வெகு ஆவனுடன் சிரத்தையுடன் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட காரியங்களைச் செய்கிருர்கள். இதற்காகவே பள்ளிக்கூடம் ஒரு பரிசோதனை ஸ்தலமும் ஆகும். பிள்ளைகள் சோதனு பாத்திரங்கள். நாம் பரீக்ஷை அதிகாரி. பரீக்ஷைக்கு வருகிறவர்களின் ஆத்மசக்தியை வளர்விக்கவும் அவர்களது மனப்போக்கு, ஊக்கம் இவற்றை அறியவும். இங்குச் சொல்லிய சந்தர்ப்பங்கள் மிகப் பொருத்தமாய் இருக்கும். சரியான அவகாசம் கொடுக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டாலொழிய உள்ளே ஒளிந்திருக்கும் சக்தியை வெளிக்கிளப்ப முடியாதல்லவா?

# கதாமூலம்

உண்மையாக நிகழ்ந்தவற்றைத் தெரிவிப்பது சரித்திரமாகும். கதை அல்லது காதை என்பது காதுக்கு இன்பம் தரக்கூடிய முழுப் பொய் என்று அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டும். முதலில் கதைகளைக் கண்டுபிடித்தது யார் என்ற ஒரே விஷயந்தான் கடவுளுக்கும் தெரியாது. பரமசிவன் பார்வதிக்கும், பிரம்மா விஷ்ணுவுக்கும், நாரதர் லக்ஷ்மிக்கும் சொன்ன உபமானங்கள்கூடப் பொய்யா என்று ஆலோசித்தால், நமக்குத் துன்பமுண்டாகும். வால்மீகி, வியாசர், ஹோமர், ஈசாப், சோமசன்மா, முதலியவர்களோடு நிற்பதே நமக்கு மரியாதை. எப்படியும் நதிமூலம், ரிஷிமூலம் அறியப்படாதென்பார்கள். கதாமூலமும் அறியப்படாதென்பார்கள். தத்துவம், ஞானம், நீதி நவரசம், அபிமானம் இவைகளுக்காகக் கதைகளை உபமானமாக ஏற்படுத்திக் கொண்டார்கள். கதையே பிரதானமல்ல. காலத்தை யனுசரித்து இப்பொழுது கதைகள் எழுதப்படுகின்றன.

பழைய காலக்கதைகள் மிகப் பெரியவை. கற்பனை செய்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் அதிகப்பொறுமை இருந்திருக்க வேண்டும். தற்காலத்தில் அவசரத்திற்காகப் நாலைந்துவரிக் கதைகள் ஏற்பட்டன. (இரண்டு ரூபாய்ப் பரிசில் ஓரெழுத்துக் கதைகளும் ஏற்படலாம்). அம்பு பாயும் சந்தர்ப்பத்தில், கண்ணன் எப்படி பதினெட்டு அத்தியாயங்களையும் சொன்னுரோ, தெரியாது. அவதாரம்; சில கதைகள் முக்கியமாய், மறைமுகமாய்ப் புத்தி புகட்டுவதற்கு ஏற்பட்டன. ‘நீ செய்வது தவறு’ என்று ஓர் அரசனைப் பார்த்து எப்படிச் சொல்லமுடியும்? ஒரு சிங்கம் அவ்வாறு செய்து கஷ்டப்பட்டது என்று நியாயம் எடுத்துரைக்க வேண்டும். மேனுட்டுக் கதைகளில் நியாயங்களும் இன்பரசமும் மட்டுமே பொருந்தியிருக்கும். நமது ஆதிகாலக் கதைகளில் தத்துவம், யோகம், மோக்ஷம் முதலிய உத்தம குணங்களும் நிறைந்திருக்கும்.

வயதிற்கும் தேசத்திற்குப் தக்கபடி கதைகளை அமைத்திருக்கிருர்கள். சிறுவர்களுக்கு மிருகசம்பந்தமான கதைகள், ஸ்திரீகளுக்குக் கடமை செலுத்த வேண்டிய கதைகள், ஆசாரமுள்ளவர்களுக்குப் புராணக் கதைகள், இல்லாதவர்க்குப் பேய் பிசாசுக்கதைகள், பென்ஷன்காரர்களுக்கு ஓரெழுத்துக் கதைகள், உல்லாச ஸ்திரீ புருஷர்களுக்கு நாடகங்கள், குளிர் உஷ்ண தேசக்கதைகள் என்று எத்தனையோ விதமுண்டு. பழைய கதைகளில் அநேகம் அழிந்துவிட்டன. கதைகள் எல்லாம் நாடகங்களாகவும், நாடகங்கள் சினிமாவாகவும் மாறிவிட்டன. அவற்றில் பழைய உத்தம குணங்கள் மறைந்து விட்டன. பழைய கதைகளை

இஷ்டப்படி அமைத்து வருகிறார்கள். தற்காலக் கதைகள் படித்தவர்களுக்கு ரஸிக்கா. வரவர எப்படி மாறுமோ தெரியாது.

இதர நாட்டுக் கதைகளும படிப்பதற்கு இன்பமாயிருக்கும். ஸ்பென்சரது குட்டித் தேவதைக் கதைகளும், ஷேக்ஸ்பியர் நாடகங்களும், கிரேக்கரது வீரக்கதைகளும், எகிப்தியரது கனவுக்கதைகளும், அரபியரது சோரக்கதைகளும், சீனரது சித்திரவதைக் கதைகளும் பெயர்போனவை ராக்ஷஸனும் எல்லாத் தேசத்திலும் உண்டு. (பீரங்கியும் ஏரோபிளேனும் கண்டு பிடித்த பின்னரே ஓடி விட்டனர்). நமது நாட்டுக் கதைகளைப் பற்றி நம்மால் சொல்ல முடியாது. அவற்றைப் படிப்பது குறைந்துவிட்டதே யொழிய, எழுதப்படாத புதிய கதை யொன்றுமில்லை. நாம் கதைகளில் அதிக நம்பிக்கையுள்ளவர்கள் இதிகாச புராணக் கதைகளைப் புராதனமாகப் பின்பற்றி வருகின்றோம். கேட்பது போய்ப் பார்ப்பது வந்தபின், கதைகளின் சாராம்சம் ஒழிந்து விட்டது என்னலாம். காளிதாசர் நாடகம் எழுதும்போதே கதையின் நோக்கம் போய் விட்டது என்று எச்சரித்திருக்கிறார்கள். இப்பொழுதுள்ள மாறுதல்களைக் கேட்போர் யார்! பாழாய்ப்போன 'நெல்மரவீதி 862 நெம்பர் கதவிலக்கக் கொலை' என்ற நாவால்கள் ஏற்பட்டபின்பு, நீதிக் கதைகள் எங்கே, தத்துவோபதேசம் எங்கே? புகைப்படங்கள் வளர்ந்த பின்னர், நாவல், நாடகம் மாண்டன. கதையை உள்ளபடி எடுக்கப் புகைபடத்திற்குச் சக்தியில்லை யாதலால், புகைப்படத்திற்குத் தக்கபடி கதையை அமைக்கிறார்கள்.

அதே நெல்மர வீதி 347-ல் இராமர் பிறந்தார். அவர் மனைவி சீதையை இராவணன் எலோப் செய்ததை, சி. ஐ. டி. அனுமாரைக் கொண்டு தெரிந்த பிறகு, இராமர் இராவணனைக் கொலை செய்து, பிறகு ஏரோபிளேனில் திரும்பிவந்தார். முடிவு, சுபம்! சுபம்!! சுபம்!!! யாருக்குச் சுபம்? இராமருக்கா; விற்பவனுக்கா? வாங்குபவனுக்கா? தெரியவில்லை.

பெண்ட்லி என்ற தத்துவசாஸ்திரி இராமர் பிறந்தது கி. பி. 327 என்றார். சினிமாக்காரர் அதையும் அங்கீகரிக்கவில்லை. நெல் மர வீதிக்குப் பின்பே என்கிறார்கள். நமது நாடு கடைசியில் இப்படியாயிற்று. நாவல்காரரது சாமர்த்தியம் வேறு. நரேந்திரபுரம்-வீரேந்திர அரசர். குணேந்திரம் என்ற பெண்., உத்தியானவனம்-மாலை-தேவேந்திரன் வருகை கடைசியில் இந்திரசபை! சற்று நவீன நாவல்காரரானால், 323 கொலை துப்பு-மோடார்-கோர்டு! இனி இவற்றைத் தடுக்க முடியாது. ஆயிரம் பக்கமுள்ள நாவல்களை எழுதிவிடலாம். லக்ஷம் மைல் நீளமுள்ள சினிமா நாடாவை உண்டாக்கி விடலாம். ஆனால் நரி காகம் கதை யொன்றை அவ்வளவு நீதிகளோடு ஒருவரும் தற்காலத்தில் எழுதமாட்டார்கள் ஏற்ற சமயத்தில் சொல்லவும், பழமொழிக்காப் பிரயோகப்படுத்தவும், அரசர்களுக்கு எடுத்துரைக்கவும் நாவல் கதைகள் உதவுமா?



இனிக் கதைகளின் நற்குணங்களை மாத்திரம் சிந்திப்போம். எல்லோருக்கும் சில நல்லகதைகள் தெரிந்திருக்க வேண்டும். தங்கள் சொந்த நாட்டுக்கதைகள், பதிவிருதாக்கதைகள், குடும்ப சம்பந்தமான கதைகள், பாலர் கதைகள், நாம் சன்மார்க்கம் அடையவேண்டிய நீதிக் கதைகள், முதலியன நமக்கு அவசியம் தெரியவேண்டும். நாம் படிப்பதோடு, பிறருக்கும் சொல்லிக், கதைகளின் காலத்தை நீடிக்கச் செய்ய வேண்டும். சொல்லாது விட்ட கதைகள் அநேகம் வீணாய்ப்போயின. மற்றவர்களைவிட உபாத்தியாயர்களுக்கு அதிக கதைகள் தெரிந்திருக்க வேண்டும். கதைகளே சிறுவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன.

சிலகதைகள் எந்தத் தேசத்துக்குரியவை என்பது விளங்கவில்லை. இவ்விஷயத்தில் ஈசாப்பும் சோமசன்மாவும் சகோதரராயிருத்தல் வேண்டும். இருவருடைய கதைகளும் ஒரேமாதிரியாக இருக்கின்றன. மற்றும், காவியநடை, செய்யுள்-குடும்பவிஷயம், சூக்ஷ்மார்த்த தத்துவங்கள் முதலிய கதாகுணங்களும் ஒன்றுபடக் காண்கின்றன. இவற்றின் காலம் ரெயில், கப்பல் அச்சு கண்டுபிடிப்பதற்கு முன்னரே, வியாபார யாத்திரிகர்களால் பலதேசக் கதைகள் ஒன்றுபட்டிருக்கலாம் என்று யூகிக்கலாம். கதையென்பது கற்பனை யானாலும் பழையகதைகளின் அழகுவேறு. அவற்றிலுள்ள நீதிகளும் நியாயங்களும்வேறு. எல்லாத்தேசங்களிலும் கதைகள் மாறிக்கொண்டே வருகின்றன. மிருக சம்பந்தமான கதைகள்போய் மனிதனுடைய சரித்திரங்களும், குடும்பகஷ்டங்களுமே கதைகளாக எழுதப்படுகின்றன.

ஹரிகதைகள் இந்தியாவுக்கு மட்டும் ஏற்பட்டவை எனலாம். இதர நாடுகளின் அனுபவம் நமக்கு இல்லையாகையால், அங்கே வேறுவிதமாகச் சொல்லப்படலாம். பஜனையும் அப்படியே. நம் நாட்டில் செய்யப்படும் ஹரிகதைகள் தெய்வீகமானவை. பாகவதரது சொல்வன்மையும், அபிநயமுமே கேட்பவரை மயக்குகின்றன. சிறியகதைகளை வளர்த்து, அவற்றிற்குச் சம்பாரவர்க்கம் சேர்ப்பதுபோல், பல உபகதைகளைச்சொல்லிச், சந்தோஷிப்பிக்கின்றனர். அந்தக்கதைகளும் வர வர மாறிவருகின்றன. இனிப், பாடசாலைச் சிறுவர்கள் கதைகளை எவ்வாறு அங்கீகரிக்கிறார்கள் என்பதை ஆராய்வோம்.

அ. ஸ்ரீநிவாஸ வரதன்

# கதைப் பாட்டு

## 'தீயோர் புகழ்ச்சியை நம்பலாகாது'

(கும்மி மெட்டு)

R. வெங்கடாச்சாரி.

1. சின்னஞ் சிறியதாம் ஓர் சிலந்தி—அது
சீரான தோர்வலை பின்னிற்றும்
பின்னிய வலைப்பினு லச்சிலந்தி—அந்தோ
பெரிதும் பசிய டைந்ததினுல்

2. அந்தரத்திற் பறந்து வரும்—ஓர்
அற்ப ஈதனைக் காணலுமே
தந்திரத்தா லதைப் பிடித்து—உடனே
தனக்குண வாக்க நினைத்ததுவே.

3. " என்னரு மைச்சி நேகிதரே—நீர்
ஏனோ தூரவே நிற்கின்றீர் ?
சின்னஞ் சிறிய என் வீட்டினில்—சற்று
சிரம பரிகாரம் செய்வீரே."

4. என்று சிலந்தி கூறிடவே—அதில்
ஈயேதும றியாதது கண்டு
நன்ருக ஈதனை ஏமாற்றிச்—சிலந்தி
நயமாய்ப் பிடிக்கக் கூறிடுமே :

5. " ஆகா உமத ழகென்னே !—அற்புதச்
சிறகின் நிறம் பொன்னே !
ஆகாது ஈடு எதுவுமேஉமது—அழகிய
இரத்தினக் கண்களுக்கு.

6. இவ்வாற ழகான எந்தனது—அந்தோ !
எளிய நண்பரே உம்மையேதான்
எவ்வாறு விட்டுப்பி ரிந்திடுவேன்—ஐயா !
எங்கும் நீர் போகிடலாகாது.

7. என்று கூறிய சிலந்தியினை—ஈயும்
யதார்த்த மாகவே நம்பிக் கொண்டு
சிலந்தியின் கூட்டில் உட்காரலுமே—நன்ருய்
சிக்கிக் கொண்டன அதன் கால்களுமே !

8. பாய்ந்தது சிலந்தி ஈயின் மேலே—உடனே
பற்றித்தின் றதுசந் தோஷத்தோடே.
தீயோர் புகழ்ச்சியை நாமே—எப்போதும்
தீ தென்றே ஒழித்திடல் வேண்டும்.

# ஜீவகாருண்யம்

## பறவைகளைக் கூண்டில் அடைப்பது கொடுமை

வித்துவான். K. P. வெங்கட கிருஷ்ணமாசார்யார்,

*தமிழாசிரியர், ராவ்பகதூர், கலவல கண்ணன் செட்டியார் தருமநிதி உயர்தரக்கலாசாலை, பிரம்பூர், சென்னை, மதராஸ் எஸ். பி. வி. எ. கல்விச் சங்கத்தின் அங்கத்தினர்.*

குழந்தைகளே ! உங்களுக்கு இஷ்டப்படி ஓடி ஆடித் திரிவதில் இஷ்டமா ? ஓர் உள்ளே அடைபட்டுக் கிடைப்பதில் இஷ்டமா ? ஓடியாடித் திரிவதைத் தானே நீங்கள் இஷ்டப்படுவீர்கள் ! அப்படிப்பட்ட உங்களை உங்கள் பெற்ருேர்கள் ஒரே இடத்தில் இருக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தினுல், நீங்கள் எவ்வளவு கோபமும் வெறுப்பும் அடைவீர்கள் ! வெளியில் செல்லவேண்டுமென்று எவ்வளவு பிடிவாதம் பிடிப்பீர்கள் ! சினேகிதர்களை விட்டுவரச் சம்மதிப்பீர்களா ! அழகான பொருள்களை அவர்கள் கொடுத்தாலும், நீங்கள் வாங்கிக் கொள்வீர்களா ? அவர்கள் முகத்திலேயே அல்லவா வீசி யெறிவீர்கள் ! ருசியுள்ள பழங்கள் தின்பண்டங்கள் முதலியவைகளையும் நீங்கள் வெறுத்துவிடுவீர்கள் அல்லவா !

உங்களைப்போலவே பறவைகளும் வெட்ட வெளியில் இஷ்டப்படி பறந்து திரிய விரும்புகின்றன ; தங்கள் இனத்தாரோடு இருக்க இச்சிக்கின்றன ; மரங்களின்மேல் கூடுகட்டிக் குஞ்சு பொரித்து வாழ்வதை வேண்டுகின்றன; இனத்தாரோடும் குஞ்சுகளோடும் இருந்து இரை உண்ண இச்சை கொள்கின்றன ; இயற்கையான காட்சிகளைக் காண்பதில் கருத்துக் கொள்கின்றன ; மேலும் அவைகள், சுத்தமான காற்றைச் சுவாசிக்கின்றன; பனி நீரைப் பருகுகின்றன; பசும்புல் தரையில் விளையாடுகின்றன; சூரிய கிரணங்களில் சஞ்சரிக்கின்றன ; நிலாவில் நிம்மதியாகத் தூங்குகின்றன.

இவ்வாறு ஓடி ஆடித்திரியும் பறவைகளைப் பலர் அநியாயமாக வருத்துகிருர்கள். எப்படித் தெரியுமா ? சொல்கிறேன் கேளுங்கள் ! பலர் அவைகளைப் பிடிக்கிருர்கள் ; கூடுகளில் அடைக்கிருர்கள் ; அவைகளுக்கு விருப்பமில்லாத இரைகளைக் கொடுக்கிருர்கள் ; குடிக்க அழுக்குத் தண்ணீரை வைக்கிருர்கள் ; அவைகளின் குஞ்சுகளையும் இனத்தையும் விட்டுப் பிரிக்கிருர்கள் ; எப்போதும் ஒரே இடத்தில் இருக்கும்படி செய்கிருர்கள். சூரிய வெளிச்சமும் சந்திரக்கிரணமும் சுத்தமான காற்றும் அவைகளுக்கு அகப்படவிடுவதில்லை. அதனுல் அவைகள் நாளடைவில் உடல்மெலிந்து நோயினுல் இறந்து விடுகின்றன.

இவைமட்டுமா! இவர்கள் கையில் அகப்பட்டு வருந்தும் தம் விதியை நினைத்து அவைகள் அழுகின்றன; வாய்விட்டு அரற்றுகின்றன; துக்கத்தால் துடிக்கின்றன; இச்சமயத்தில் இரக்கமில்லாத இவர்கள் "அவைகள் பேசுகின்றன" என்று அவைகட்கு எதிரில் ஆனந்தமாகச் சிரிக்கிறார்கள்; ஆரவாரஞ் செய்கிறார்கள். இவர்கள் செயல்களைப் பார்த்து அவைகள் வயுறு எரிகின்றன; 'இவர்களும் நம்மைப்போல் சிறையில் அடைபடட்டும்' என்று சபிக்கின்றன. பாவம்! நம்மோடு பேசமுடியாத அவைகள், கொடியவர்கள் கையில் அகப்பட்டு ஆயுள் உள்ளவரையில் அவஸ்தைப் படுகின்றன.

நமக்குப் பறப்பதற்கேற்ற இறகுகள் இல்லை. அப்படி இருந்தும் நாம் ஆகாய விமானங்களில் எறி ஆகாயத்தில் பறந்து செல்ல ஆசைப் படுகிறோம். பறவைகள் பறந்து செல்வதற்கென்று இறகுகள் படைத்துள்ளன. அவைகளைப் பறக்கவிடாமல் கூண்டுகளில் வைப்பது நியாயமாகுமோ?

இன்னமொரு பரிதாபமான விஷயம் சொல்கிறேன் கேளுங்கள்:— பல கோயில்களில் கிளிகளைக் கூண்டுகளில் அடைத்துவைக்கிறார்கள்; பரிசுத்தமான தெய்வ சந்நிதானத்தில் இப்படிச் செய்யலாமா? கோயில்கள் பறவைகளுக்கென்று ஏற்பட்ட சிறைச்சாலைகளா? நம்மைப் படைத்த கடவுள்தானே அவைகளையும் படைத்தார்! நம்மைக் காப்பாற்றும் அவர்தானே அவைகளையும் காப்பாற்றுகிறார்! அப்படி இருக்க, அவர் குழந்தைகளாகிய பறவைகளை, அவர் கோயிலிலேயே சிறை வைத்திருப்பது அவர்க்குச் சம்மதமாகுமோ? அவைகள் யாருக்கு என்ன தீங்கு செய்தன, அவ்விதத் தண்டனையை அடைவதற்கு?

ஆகையால், குழந்தைகளே! நீங்கள் இது சம்பந்தமாகச் செய்ய வேண்டுவது என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? பறவைகளுக்குத் தீமை செய்யும் கொடியவர்களிடம் இனிமையாகப் பேசுங்கள்; அவைகட்குத் தீங்கு செய்யவேண்டாம் என்று சொல்லுங்கள்; உங்களால் முடிந்தவரையில் அவைகட்கு உதவிசெய்ய முயலுங்கள்; உங்களால் அன்றோ நம் தேசம் முன்னேற்றம் அடையவேண்டும்!

# ஆரம்ப வாசக புஸ்தகங்களும், ஆசிரியர்களும்.

T. V. வெங்கட்ராமன் B.A.L.T.
கல்வி இலாகா டெபுடி இன்ஸ்பெக்டர், திண்டிவனம்.

ஒருவன் பலரைத் திருப்தி செய்ய முடியாதென்பது எப்படி அநுபவ சித்தமோ, அம்மாதிரியேதான் பலருடைய ஆதிக்கத்துக்குட்பட்டு, அவர்களுடைய நோக்கங்களை அநுசரித்து நடத்தப்படும் ஒரு காரியம் செவ்வனே நடைபெறுவதென்பதும். நம் நாட்டு ஆரம்பக்கல்வி, (i) ஆசிரியர் மானேஜர் (ii) மானேஜர் (iii) ஸ்தலஸ்தாபனங்கள் (iv) சர்க்கார் கல்வி இலாகா, ஆகிய நான்குவித ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கிறது. இந்நால்வரோடு, சமீப காலமாய்ப் புஸ்தக வியாபாரிகளும், புஸ்தகப் பிரசுரகர்த்தர்களும் சேர்ந்து ஐவராயினர். ஆகவே, ஆரம்பக்கல்வியின் நிலைமையும், அத்துறையில் உழைத்து வரும் ஆசிரியர்களின் நிலைமையும் திரௌபதியின் நிலைமை போன்றதென்று சொல்வது மிகையாகாது. ஏற்கனவே அதிருப்திகரமாயிருந்த நிலைமை, புஸ்தக வியாபாரிகள், பிரசுரகர்த்தர்கள் ஆகிய இவர்களுடைய ஆதிக்கத்தினால் கேவலப் பட்டு வருகிறது. இந்நிலைமையைப் பூராவும், ஆசிரியர்கள் சீர்திருத்த முடியாதென்றால், இவர்களின் ஆதிக்கத்தின் கொடுமையை, தாங்கள் கையாளும் போதனாமுறையால் வெகுவாய்க் குறைக்கலாம் என்பதை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கத்திலொன்றாகும். சிறந்த தொழிலாளியும், தன் தொழிலுக்கேற்ற சிறந்த உபகரணங்களையும் சாதனங்களையும் வேண்டுகிறான். சத்திர சிகித்சை செய்யும் வைத்தியர் சிறந்த ஆயுதங்களையே கொள்வார்; இஞ்சினியர்கள் தங்கள் வேலைக் கேற்ற சிறந்த ஆயுதங்களையே ஏற்பர்; சிற்பியும், ஓவியம் தீட்டுவோரும் தங்கள் கலைக்கேற்ற சிறந்த சாதனங்களையும், ஆயுதங்களையும் கொண்டுதான் தங்கள் கலைத்திறமையைக் காட்டுகிறார்கள். நாம் கைக் கொண்டிருக்கும் "போதிக்கும் 'கலை'" மற்றெல்லாக் கலைகளைக் காட்டிலும் மிகவும் நுட்பமானதும் கடினமானதும் ஆயினும், எந்தப் புஸ்தகமாயினும், எந்தச் சாதனமாயினும், போதும் என்ற நிலைமைக்கு நாம் வந்திருக்கிறோம். எவ்வளவு கேவலம்!

இப்பேர்து வெளியாகி இருக்கும் வாசக புஸ்தகங்களில் அநேகம், திருப்திகரமான போதனாமுறையைத் தழுவி எழுதப்பட்டவைகள் என்று சொல்வதிற்கில்லை. அவைகளை எழுதியவர்கள், தமிழ்மொழியிலும், இதர வகையிலும் தேர்ச்சிபெற்றவர்களாயிருப்பினும், ஆரம்ப வகுப்புக்களில் கற்கும் பிள்ளைகளைப் பற்றிய அநுபவம் இல்லாதவர்களாவர். 7 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் "சொன்மாலை சொற்கோர்வை" (Vocabulary) சுமார் எவ்வளவு இருக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது. அவ்வயது பிள்ளைகளோடு பழகி ஆராய்ச்சி செய்தவர்களுக்கே அது தெரிய நியாயமுண்டு. அப்படிச்செய்த வெகு சிலரே, அவ்வயதிற்கேற்ற வாசகபுஸ்தகங்களை எழுதியுள்ளனர்.

எல்லா ஆரம்பவாசக புஸ்தகங்களும், "எழுத்து" முதல் என்ற கொள்கையைக் கொண்ட முறையில் எழுதியவை என்றே சொல்லலாம்.

இந்த முறையைக் கொண்டு எழுதும் போதும், பிள்ளைகள் அனுபவத்திற் கெட்டிய சொற்களைக்கொண்டு எழுதினால், ஒருவாறு பிரயோஜன மளிக்கும். ‘ஞ், ச் என்ற எழுத்துகள் போதிக்க, **மஞ்சள், ஊஞ்சல்** போதாதா? குஞ்சரம் தஞ்சம், சஞ்சலம், பஞ்சரம் முதலிய **அகராதிச்** சொற்கள் வேண்டுமா? எழுத்து கற்பிக்கும் முறையிலும், பிள்ளைகள் அறிவிற்குட்பட்ட சொற்களிலிருந்து கற்பித்தல் சுலபமல்லவா? ஏற்றதல்லவா?

இப்படிப்பட்ட வாசக புஸ்தகங்களை மானேஜர்கள் வைக்கிறார்கள். இப்போதுள்ள திட்டப்படி, 5-வருஷத்திற்குள் அவைகளை மாற்றவும் கூடாது. ஆயினும் நமக்குண்டான பகுத்தறிவைக் கொண்டு, பிள்ளைகள் அனுபவத்திற்குட்பட்ட சொற்களையும், அவர்கள் அறிவைக்கொண்டு விளக்கக்கூடிய சொற்களையும் மட்டும் போதித்து மற்றவைகளை விட்டு விடுவது மேலாகும்.

“சொல் முதல்” என்ற முறையில் எழுதப்பட்ட புஸ்தகங்கள் அநேகமாய் இல்லை என்று சொல்லலாம். இம்முறைக்கு முதன்மை கொடுத்து, அதைத்தழுவி புஸ்தகங்கள் எழுதவேண்டுமாயின் ஆரம்ப ஆசிரியர்கள் வெகுவாய் ஆராய்ச்சி செய்யவேண்டும். வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்றவாறு” சொற்கோர்வை எப்படி அதிகமாகிறது? ஒரு புதிய சொல்லை எத்தனை தடவை உபயோகித்தால் பிள்ளைகளின் சொற்கோர்வையுடன் அது சேரும் என்ற விஷயங்களில் ஊக்கம் செலுத்த வேண்டும். வாசக புஸ்தக விஷயத்தில், ஆசிரியர்கள் கவனிக்கவேண்டியது முறைக்கேற்ற புஸ்தகம் வேண்டும் என்பதும், புஸ்தகத்திற் கேற்றபடி முறையல்ல என்பதும் அச்சிட்ட தெல்லாம் வேதவாக்கு என்ற மூடநம்பிக்கையும், பயமும் விடவேண்டும். பிரசுர கர்த்தர்களுக்குத் தெரியாமல் அநேகம் பிழைகள் அச்சிடப்பட்டு வேதவாக்காகக் கருதப்பட்டுகின்றன. “நூதன முறையில்” எழுதப்பட்டுப் பிரபல பிரசுரகர்த்தர் ஒருவரால் வெளியிடப்பட்டு, சர்க்கார் அங்கீகாரமும் பெற்ற, ஒருவாசக புஸ்தகத்தில், 1-முதல் 10-வரையில் எண்களை விளக்கிக்காட்ட, குரங்கையும் நாயையும் எடுத்துக்கொண்டு, **ஒரு குரங்கும், ஒரு நாயும் இரண்டு** என்றும் **இரண்டு** நாயும், **ஒரு** குரங்கும் மூன்று என்றும் இம்மாதிரி பத்துவரையில், படங்கள் மூலம் காட்டி இருந்தது. இதைப் பிரசுரித்தவர்களுக்கு நான் எடுத்துக்காட்டியபோது அப்பிழை படம் தயார் செய்தவன் பிழை என்றும், அதைத் தாங்கள் கவனியாமல் வெளியிட்டதற்கு வருந்துவதாயும், மறுபதிப்பில் அதைத் திருத்தி விடுவதாயும், உறுதி கூறினார்கள். முதல் பதிப்புப் பிரதிகள் விற்றபின்தானே, மறுபதிப்பு; பிழையுள்ள பிரதிகள் விற்பனையாகுமாறு நம்முடைய ஆதரவு வேண்டுமென்று அவர்கள் கோறாமலாயிருப்பார்கள்?

முறையில் யேற்றவைகளை எடுத்துக்காட்டும் தைரியம் வேண்டும். இதை நாம் செய்தால்தான் பொருத்தமாயிருக்கும்.

# திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கம்
## ஆரம்பக்கல்வி

சென்ற 27-ம் மாகாணக்கல்வி மகாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது :—

வாக்குரிமை விரிவடைந்திருக்கும் நிலைமையைக் கருதி ஆரம்ப கல்வியைக் கட்டாயமாகவும் இலவசமாகவும் செய்வதின் அவசியத்தை இம்மாகாணக் கல்வி மகாநாடு கல்விமந்திரி சபைக்கு அறிவித்துக்கொள் துடன், திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கத்தை இதுபற்றி ஆராய்ச்சி செய்து ஓர் யாதாஸ்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

இவ்வாராய்ச்சி சம்பந்தமாகக் கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஆசிரிய களும், ஆசிரிய சங்கங்களும் விடையளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் ப கிறது.

1. ஆரம்பக்கல்விக்கு யார் ஜவாப்தார்? அரசாங்கமா? ஜனங்களா?
2. ஆரம்பக்கல்வியின் இலக்ஷியம் என்ன? எழுதப்படிக்கத்தெரிய செய்வதா? பிரஜா உரிமையைக் கையாளுவதற்குப் படிப்பா?
3. ஆரம்பக்கல்வியின் பணப்பொறுப்பு யாருடையது?
4. ஆரம்பக்கல்வி அத்துடன் முடியும் படிப்பாக இருக்கவேண்டுமா மேல்படிப்புடன் இணைத்தல் வேண்டுமா?
5. ஆரம்பக்கல்வி எழுதவும், படிக்கவும், கணிக்கவும் மட்டும் போதி தல் போதுமா?
6. அந்தந்த ஊர் தொழில்கள் போதிக்கப்படவேண்டுமா?
7. வேறு என்ன பாடங்கள் கற்பித்தல் வேண்டும்?
8. ஆரம்பப்பள்ளிகளில் வாசிக்கும் குழந்தைகளின் ஜாஸ்தி வய என்ன இருக்கலாம்? எவ்வளவு வருடங்கள் படிப்பு வேண்டும்?
9. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்குக் குறைந்த படிப்பு என் வேண்டும்?
10. ஆரம்பப்பள்ளிகளில் பள்ளிக்கூடநேரம் எப்படி இருக்கவேண்டும் ஒரு வேளையா, இரண்டு வேளையா, எவ்வளவு நேரம், எவ்வெ பொழுது?
11. குழந்தைகள் பள்ளிகளுக்கு ஆஜராகும்படி என்ன உபாயங்களை கையாளலாம்? சட்டமா? கட்டாயமா? வசதிகளா?
12. ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கும் புஸ்தகங்கள் அவசியமா?

13. ஆரம்பப் பள்ளிகளில் பாடங்கள் கற்பிக்க என்ன முறைகளைக் கையாளவேண்டும்?

14. வகுப்புவாரிப் பள்ளிகள் வேண்டுமா? கலப்புப் பள்ளிகள் தேவையா?

15. நிர்வாகம், போதிப்பது இரண்டும் தனிப்படவேண்டுமா? ஒன்றாக இருக்கவேண்டுமா?

16. கட்டாயப் படிப்பை அமுலுக்குக் கொண்டுவர என்ன உபாயங்கள் வேண்டும்?

17. ஆரம்பக்கல்விப் பள்ளிகளுக்கு உதவிப் பணம் எந்த முறையில் அளிக்கப்படவேண்டும்?

18. தற்போதைய கல்விச் சபைகள் நடக்கவேண்டுமா?

19. ஆரம்பக்கல்விச் சட்டத்திற்குத் திருத்தங்கள் என்ன வேண்டும்?

20. ஆரம்பக்கல்விப் பள்ளிகளுக்கு எவ்வித மேல்பார்வை—இன்ஸ்பெக்ஷன்—வேண்டும்?

21. ஆரம்பப் படிப்பின் முடிவில் பரீக்ஷை வேண்டுமா?

22. ஆரம்ப ஆசிரியர்களுக்கு இன்றியமையாத ஊதியம் என்ன?

23. உங்கள் ஆரம்பப் பாடசாலையில் உள்ள மொத்தக் குழந்தைகள் எவ்வளவு?

24. ஒவ்வொரு வகுப்பிலும் எவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்கள்?

25. எவ்வளவு ஆசிரியர் உங்கள் ஆரம்ப வகுப்பில் இருக்கிறார்கள்?

26. போதனாமுறைப் பயிற்சி இல்லாத ஆசிரியர் எவ்வளவு?

27. உங்கள் பள்ளிக்கூடத்திற்கு சொந்தக் கட்டிடம் உண்டா? வாடகைக் கட்டிடமா? இடம் வசதி உள்ளதா? இல்லையா?

28. உங்கள் பள்ளி வரவு சிலவு என்ன?

29. ஒவ்வொரு வகுப்பில் சராசரி ஆஜர் எவ்வளவு?

30. ஆசிரியர்கள் அபிவிருத்திக்கு உங்கள் பள்ளிகளில் என்ன வசதிகள் உண்டு?

31. ஆண், பெண் குழந்தைகள் சேர்ந்து படிப்பதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

32. வகுப்பில் பாடம் சொல்லிக்கொடுக்கும் விஷயத்தில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன?

33. பள்ளிக்கூடங்கள் போதிக்கும் விஷயத்தில் முன்னேற்ற மடைய உபாயங்கள் என்ன?



34. பள்ளிக்கூடங்கள் நடத்த மற்ற தொழில்களைப்போல் லைசென்ஸ் அவசியமா? இல்லையா?

35. இலவச ஆரம்பக் கல்வியின் செலவை உத்தேசித்து அதிக வரி விதிக்கலாமா?

36. ஆரம்பப்பள்ளிகளில் தேக்கமும் வியர்த்தமும் இருக்கின்றது வாஸ்தவமா? இல்லையா? ஏன்?

37. ஆரம்பக்கல்வி பொது உடமையாகப் பரவுதற்கு முன் இருக்கும் பள்ளிகளை ஒழுங்குபடச் செய்வது நலமா? இல்லையா?

38. குழந்தைகள் படிப்பைக் கவனிக்காத விஷயத்திலும், குழந்தைகளைக் கீரல் பேர்வழிகளாய் வைத்திருக்கும் விஷயத்திலும் பெற்றோர்களைத் தண்டிப்பது அவசியமா?

39. ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு தனிப்பாட திட்டம் அவசியமா?

40. ஆரம்பக்கல்வி வளர்ச்சியின் இடையூறுகளை நிவர்த்தித்து, வளர என்ன உபாயங்களைக் கையாளலாம்?

இவ்விஷயங்கள் அநுபவமுள்ள, ஆசிரியர்களும் சங்கங்களும் யோஜித்துக் கீழ்க்கண்ட அவர்களைப்பற்றிய விவரங்களுடன் அவர்களின் விடைகளை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

**எஸ். டி. ராமானுஜ அய்யங்கார்,**
**காரியதரிசி.**

1. பெயர் ஆசிரியர் / சங்கம்
2. பள்ளிக்கூடம்
3. விலாசம்
4. தேதியும் இடமும்
5. கையொப்பம்.

# கல்விச் செய்தியும் குறிப்பும்

## கோட்டையூர்

இவ்வூர் இராமனுதபுரம் ஜில்லா போர்டு உயர்தரக் கல்லூரியின் இவ்வாண்டு பதினொன்ருவது கூட்டம் மாலை 3-30 மணிக்கு திருப்பத்தூர் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் திருவாளர் M. கமல தியாகராஜ முதலியார் அவர்கள் B. A. L. T. தலைமையின் கீழ் கடவுள் வணக்கத்திற்குப் பின் ஆரம்பமாயிற்று. சென்ற கூட்டத்தின் நிகழ்ச்சி காரியதரிசியால் வாசிக்கப்பட்டு யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இப்பாடசாலையின் ஏழாவது வகுப்பு மாணுக்கன் மஹாதேவன் சில தேவாரத்திலிருந்து பாட்டுகள் பாடியபின், ஒழுக்கம் என்னும் பொருள் பற்றி பல மாணுக்கர்கள் பேசினர். பல பெற்ரோர்களும் அப்பொருள் பற்றி பின் பற்றிப் பேசினர். பிறகு அக்ராசனர் மாணுக்கர்களுக்குப் பல சன்மார்க்கங்கள் எடுத்துக் கூறினுர். பிறகு ஷை பாடசாலையின் தலைமை ஆசிரியர் Mr. மாணிக்கம் என்பவரால் வந்தனம் கூறப்பெற்று, இராஜ வாழ்த்துடன் கூட்டம் கலைந்தது.

---

## ஆசிரியர் - பெற்ரோர் சங்கம்

திருப்பத்தூர் ரேஞ்சு கல்வி இலாகா இன்ஸ்பெக்டர் திருவாளர் M. கமல தியாகராஜ முதலியார் அவர்கள் முயற்சியால் இந்நகர் பெற்ரோர்கள் இராமநாதபுரம் ஜில்லாபோர்டு உயர்தர ஆரம்ப பாடசாலையில் மாலை 5-மணிக்குக் கூடினுர்கள். நகரிலுள்ள பிரமுகர்கள் எல்லோரும் விஜயம் செய்திருந்தனர். கடவுள் வணக்கத்திற்குப்பின் கூட்டம் திரு. கமல தியாகராஜ முதலியார் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. அவருடைய முகவுரையில் சங்கத்தின் நோக்கங்களைப் பற்றி விரிவாகக் கூறினுர். பிறகு இவ்வூர் டாக்டர் சாம்பமூர்த்தி அய்யர் அவர்கள் தலை அங்கத்திலுள்ள சங்கத்தின் அவசியத்தையும் அத்தகைய சங்கம் சென்னை நகரில் கல்வி யபிவிருத்திக்கு தொண்டாற்றி வருவது பற்றியும், அவ்வண்ணம் ஓர்சங்கம் இந்நகரில் நிறுவவேண்டுமென்றும், இவ்வூரிலுள்ள உயர்தர இராமநாதபுரம் ஜில்லாபோர்டு ஆரம்ப பாடசாலை ஸ்தாபனம் செய்யப்பட்டு சிறிது காலத்திற்குள் எட்டு ஆசிரியர்களுக்கு மேல் வேலை செய்ய விருத்தி யடைந்த சங்கையைப் பெற்றிருப்பதற்குக் காரணம் உதவிகளுடன் தலைமை ஆசிரியர் உழைத்து வருவதே காரணம் என்று சொற்பொழிவு ஆற்றினர். பிறகு பெற்ரோர் சங்கத்தின் சார்பாக ஒரு காரியக் கமிட்டி அடியிற்காட்டிய வண்ணம் அமைக்கப்பட்டது.



1. மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் க. வீ. அள. ராம. ராமநாத செட்டியார் அவர்கள்—தலைவர்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | ,, | S. மாணிக்கம்—காரியதரிசி | | [தினர் |
| 3. | ,, | லெ. அ: மு. முத்தயா செட்டியார் அவர்கள் அங்கத் | | |
| 4. | ,, | VE. RM. Ramasami Ambalam | | ,, |
| 5. | ,, | AL. AR. அருணுசலம் செட்டியார் | ,, | ,, |
| 6. | ,, | டாக்டர் சாம்பமூர்த்தி அய்யர் | ,, | ,, |
| 7. | ,, | லட்சுமணன் செட்டியார் | ,, | ,, |
| 8. | ,, | நாராயணன் அம்பலம் | ,, | ,, |
| 9. | ,, | VL. வயிரவன் செட்டியார் | ,, | ,, |
| 10. | ,, | M. P. RM. ராமநாதன் செட்டியார் | ,, | ,, |
| 11. | ,, | V. வெங்கட்டராமய்யர் | ,, | ,, |

பிறகு தலைவர் பெற்ரோர்கள் ஆற்றவேண்டிய தொண்டைப்பபற்றி விரிவாகப் பேசினுர். பின் ஸ்ரீமான் மாணிக்கத்தால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது இரவு 8 மணிக்குக் கலைந்தது.

---

## கரூர்

கரூர் முனிசிபல் ஆரம்ப ஆசிரியர்கள் கழகத்தின் 15-வது ஆண்டு நிறைவிழா ஆகஸ்டு 22-உ யன்று சிறப்புடன் ஸ்ரீமான் V. R. ரங்கநாத முதலியாரின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. இவ்வூர் ஜில்லா முனிசீப் ஸ்ரீமான் S. K. பார்த்தசாரதி அய்யங்கார் "ஆசிரியர்களும் அன்பும் என்னும் விஷயத்தைப்பற்றி ஒருசொற்பொழிவு நிகழ்த்தினுர். மாண்டிஸோரி முறையைக் கைப்பற்றுவது நலமென்றும், பிள்ளைகளை பயப்படுத்தாமல், அன்பு காட்டியே வளர்க்கவேண்டுமென்றும் சொன்னுர். அக்கிராசனரின் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

---

## சேலம்

இவ்வூரிலுள்ள மூன்று முனிசிபல் ஆரம்பாசிரியர்ச் சங்கங்களும் சென்ற 22-8-36-ல் ஒன்ருக இணைக்கப்பட்டது. அப்படி இணைக்கப்பட்ட சங்கத்திற்கு முனிசிபல் சூபர்வைசியர் ஸ்ரீமான் P. மாணிக்கம் பிள்ளையை தலைவராகவும் ஸ்ரீமான் சுந்திரவாதாச்சாரியரானை காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

# பத்திராதிபர் குறிப்புகள்

## கட்டாயக் கல்வித் தொல்லை

'கட்டாயக் கல்விக் கோட்பாடு எவ்வளவு நல்லதாயிருந்தாலும் அனுபவத்தில் கட்டாயக் கல்வி 'தொல்லையே' என்று நமது கல்வி மந்திரி கனம் திவான் பஹதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் விசாகப்பட்டணம் முனிசிபல் கௌன்ஸிலர்களிடம் சொன்னதாகச் சென்னைப் பத்திரிகைகளில் வெளியிடப் பட்டிருக்கிறது. கட்டாயக் கல்வித் திட்டத்தைப்பற்றி சென்னைச் சட்டசபையில் வாதித்த பொழுது, ஆரம்பக் கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் இருக்கவேண்டுமென்றும் தேச முன்னேற்றத்திற்குக் கட்டாய இலவசகல்வியே முதற்காரணமாகுமென்றும் அரும் பெரும் சொற் பொழிவுகள் நிகழ்த்தப் பட்டுள்ளன. ஆனால், இலவசமாக இருக்க முடியாமல் ஒரு திருத்த மசோதா கொண்டு வந்து, ஆரம்ப பள்ளிக் கூடங்களில் சம்பளம் வாங்கலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டது. பிறகு படிப்பு அவசியம் என்று எண்ணி, தன் பிள்ளைகளைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பும் பெற்றோர்கள், ஏதாவது காரணம் பற்றி ஐந்தாவது வகுப்பு தேர்ச்சி யடையும்வரை அனுப்பத் தவறினால் அவர்களைத் தண்டனைக்குட்படுத்த மற்றோர் சீர்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது. பிறகு சில மாதங்களுக்கு முன்பு 5000 ஜனங்களடங்கிய கிராமங்களில் கட்டாயக் கல்வி ஏற்படுத்தும் வழிகளைக் கண்டு பிடிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தினார்கள். அந்தக் கமிட்டியார் சர்க்கார் அதிகப்பணம் செலவழித்தாலொழிய கட்டாய இலவசபடிப்பு சாத்தியமில்லையென்றும், இப்போது கட்டாயப் படிப்பு கை கூடாத விஷயமென்றும் முடிவுக்கு வந்ததாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இப்பொழுது எட்டு வருஷகாலம் கல்வி மந்திரியாயிருந்து அனுபவம் பெற்ற கனம் குமாரசாமி ரெட்டியார் கட்டாய இலவசக் கல்வி யெல்லாம் வெறும் பேச்சு; அனுபவத்தில் பெரும் தொல்லை யென்னும் முடிவுக்கு வர முடியுமா? ஆனால், பொது ஜனங்களிடத்திலும் கல்வி விஷயத்தில் ஊக்கமேற்பட்டால் ஸ்தல ஸ்தாபனங்கள் நன்றாக ஆராய்ச்சி செய்து, கவர்ன்மெண்டார் அவர்களுக்கு உதவி செய்வார்களென்றும், ஸ்தல ஸ்தாபனங்கள் ஆரம்பக் கல்வியில் அதிக ஊக்கம் காண்பிப்பதே கவர்ன்மெண்டின் கொள்கையென்றும் அவர் கூறியதாகத் தெரியவருகிறது.

பணமில்லாமல் கட்டாயப் படிப்பு என்றால் அது தொல்லையே. நமது ராஜதானியில் இனி வரி வசூலிக்க முடியாமல் அவ்வளவு அதிகமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் ஜனங்களின் அறியாமையைப் போக்கி அறிவை யூட்டினால், அவர்களின் சம்பாத்தியம் பெருகும், நாட்டின் வளர்ச்சிக்காக அதிகப்பணமும் கிடைக்கும். ஆகவே தேச முன்னேற்றத்தைக் கருதும் கவர்ன்மெண்டார் எப்படியாவது கட்டாயக் கல்விக்குப் போதுமானபணம் கண்டுபிடிக்கவேண்டும். அவ்வளவு அகப்படாவிட்டால் கவர்ன் மெண்டார் தர்மப் பிரமுகர்களுக்கு உதவி யளித்து உதவி பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வருஷத்துச் சென்னைக் கல்விச் சங்கத்தாரின் (Dt. Edl. Council) ரிபோர்ட்டுப்படி, 134 பள்ளிக்கூடத்திற்குக் கார்போரேஷன் 7 லக்ஷ ரூபாய் செலவிட்டதாகவும் 172 உதவிபெறும் பள்ளிக்கூடங்களுக்காகக் கவர்ன்மெண்டார் அளித்த உதவி 1,13,000 ரூபாய் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. உதவி பள்ளிக் கூடங்கள் நிரம்ப வைத்தால் குறைந்த செலவில் அநேகருக்குக் கல்வி ஊட்டப்படும். ஆனால் இம்மாதிரித் தொண்டு செய்பவர்களுக்கு, பொருள் உதவியில் 100-க்கு 19½ வீதம் குறைத்தும் அப்படிக் குறைத்த உதவியைச் சரியான காலத்தில் கொடுக்காமலிருப்பதால், உதவி பள்ளிக்கூடம் நடத்துவது ஒரு தொல்லையென்று எண்ணி, அநேகர் தங்கள் பள்ளிக்கூடங்களை மூடிவிடுகின்றனர். தங்களால் கட்டாயக் கல்வித்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது கை கூடாத காரியம் என்று தெரிந்துகொண்ட கவர்ன்மெண்டார் உதவிப் பாடசாலைகளுக்கு உண்டான உதவியை சரியான காலத்தில் கொடுத்து வந்தால், சொற்ப செலவில் அநேகருக்குக்கல்வி அளிக்கலாம்.

மற்றும் கல்வி மந்திரி பொதுஜனங்கள் கட்டாயக் கல்விக் கொள்கையை அங்கீகரிக்கவேண்டும், அதிகாரிகளுடன் ஒத்துழைக்கவேண்டும், அப்பொழுது தான் கட்டாயக்கல்வி சாத்தியம் என்று சொல்கிறார். கல்வியின் பயன்களைப் பற்றிப் பொதுஜனங்களுக்கு பெரியோர்கள் எடுத்துரைத்தனரா? பொது ஜனங்கள் கட்டாயக் கல்விக் கொள்கையை அங்கீகரிக்கமாட்டோம் என்று எங்கு எப்பொழுது சொன்னார்கள்?

## கல்வி வாரம்

நம் நாடு முன்னேற்றம் அடையவேண்டுமானால் கல்வியினாலேயே தான் முன்னேற்ற மடையவேண்டும். கல்வி வளர்ச்சியே பெரும் தர்மம். இத்தர்மத்தைப் பொது மக்களுக்கு எடுத்துரைப்பது ஒரு பெரிய தேசத் தொண்டு. பள்ளிக்கூடங்கள் எவ்வாறு தங்கள் வேலையைச் செய்து வருகின்றன! அவைகளின் குறைகளும் தேவைகளும் யாவை! கல்வியினால் மக்களும் தேசமும் எவ்வாறு முன்னேற்றம் அடையலாம்! என்பதை எடுத்துக் காட்டவுமே தென் இந்திய ஆசிரியர்ச் சங்கத்தார் சென்ற ஐந்து வருஷகாலமாகக் கல்வி சம்பந்தப்பட்ட சங்கங்களுடைய உதவியுடன் கல்வி வாரக் கொண்டாட்டம் நடத்தி வருகிறார்கள். இவ்

வருஷமும் அவ்வாரம் நடைபெறும். அக்டோபர் 5-தேதி முதல் 11-ம் தேதி வரையில் கல்வி வாரக் கொண்டாட்டம் நடை பெறும். அவ்வாரத்தில் என்ன செய்யலாமென்பதை, மத்தியக் கல்வி வாரக் கமிட்டியார், ஒரு சிறு புஸ்தகத்தில் காட்டியுள்ளார். இக்கல்விவாரப் புஸ்தகத்தை தென் இந்திய ஆசிரிய சங்கத்தினிடம் பெறலாம். (இதன் விலை அணு 0-2-0) ஆசிரியர்கள் கல்விவாரத்தைச் சிறப்புடன் நடத்தினுல், பொதுஜனங்களுக்குக் கல்வியின் பயனும் பிரயோஜனமும் அவசியம் ஏற்படும். அது ஏற்பட்டால் சீக்கிரத்தில் நம் நாட்டிலுள்ள பாலர்கள் எல்லோருக்கும் கல்வியின் பயன் ஏற்படும்.

## 6-வது தென் இந்தியக் கல்வி வாரம்

### 5—10—36 முதல் 11—10—36 வரை

முக்கிய நோக்கம்.

பள்ளிக்கூடங்களில் கல்வி போதிக்கும் முறைகளையும், பள்ளிக்கூடங்களின் தேவைகளையும்; குறைகளையும் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுவது.

இவ் வருஷத்திய கொள்கை

இவ்வருஷக் கல்வி வாரத்தில், பொதுவாக பள்ளிக்கூடங்களில் பாலர்களின் முன்னேற்றத்துக்கு என்ன செய்யப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டுவதுமல்லாமல் பிள்ளைகளின் நற்குண வளர்ச்சிக்கு என்ன செய்கின்றன ; என்ன செய்யவேண்டு மென்பதை யோசிக்கப்படும். உங்கள் ஊரில் கல்வி வாரக் கமிட்டிகள் நியமனம் செய்து கல்வி வாரத்தைச் செவ்வனே நடத்துமாறு மத்திய கல்வி வாரக் கமிட்டியார் கேட்டுக் கொள்ளுகிறுர்கள்.


இது விஷயமாக மத்திய கமிட்டியார் தயாரிக்கும்

1. கல்வி வாரப் புஸ்தகம்—கல்வி வாரம் நடத்தும் முறை.
2. பெற்றோர்களுக்கு ஓர் விண்ணப்பம்.
3. சுவர்களில் ஒட்டக்கூடிய கல்வி வார நோடீசுகள்.

ரூ. 2-8-0க்கு கிடைக்கும். தேவையுள்ளோர் 15-9-36-க்குள் கல்வி வாரக் காரியதரிசிக்கு முன்பணத்துடன் எழுதவும்.

41, செங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ். } கல்வி வாரக் காரியதரிசி.

# இரக்ஷணைப் படம்—5




ரஸ்தாக்களிலும் வீதிகளிலும் பட்டம் அல்லது காத்தாடி விடுவது ஓர் அபாயமான பழக்கம். படத்தில் ஓடும் சிறுவர்கள், ரஸ்தாக்களில் செல்லும் வண்டிகளைக் கவனிக்காமல் ஓடுவதால் தங்களுக்கு அபாயம் நேரிடுவதுமல்லாமல், பிறருக்கும் அபாயம் உண்டாகும்படி செய்கிறார்கள். பட்டம் விட ஒரு மைதானத்திற்குச் செல்ல வேண்டும்.

## எலிமெண்டரிப் பாடசாலை முதல் 5 வகுப்புகளுக்கான புத்தகங்களின் விவரம்

### 1-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—1 | 0 | 2½ |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |

### 2-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—2 | 0 | 3 |
| இயற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 | 3 |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |
| கிண்டர் கார்டன் தினசரிக் கணக்கு 2-ம் புத்தகம் | 0 | 3½ |

### 3-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—3 | 0 | 4 |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 | 1 |
| இயற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 | 3 |
| சிறுமணிக் கதைகள்—S. S. அருணகிரி நாதர் | 0 | 5 |
| தினசரிக் கணக்கு (முதற் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 4 |

### 4-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—4 | 0 | 4½ |
| லிவிக்ஸ் (முதற் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 | 5 |
| இயற்கை அற்புதங்கள் (2-ம் புத்தகம்) | 0 | 4 |
| தினசரிக் கணக்கு (2-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 5 |
| இந்து தேசச் சரித்திரக் கதைகள் முதல் பாகம் | 0 | 4½ |
| New Era English Readers First Primer—Edited by H. Champion | 0 | 5 |

### 5-ஆம் வகுப்பு

| | | |
|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—5 | 0 | 6 |
| இயற்கை அற்புதங்கள் (3-ஆம் புத்தகம்) | 0 | 5 |
| கம்பர் அல்லது கவியரசர்—A. N. கன்னையா | 0 | 5 |
| லிவிக்ஸ் (2-ஆம் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 | 6 |
| இந்து தேச சரித்திரம் V. ஜெயராம அய்யர், B.A., L.T. | 0 | 5 |
| தினசரிக் கணக்கு (3-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 | 5 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை | 0 | 4 |
| New Era English Readers Second Primer—Edited by H. Champion | 0 | 6 |
| New Era Story Books, Book I By C. Gordon | 0 | 3 |

பி. ஜி. பால் அண்டு கம்பெனி, புத்தக வியாபாரிகள்,
12, பிரான்லின் ஜோஸப்புத் தெரு, சென்னை.

---

A GUIDE TO

# ELEMENTARY SCHOOL TEACHERS

By Mrs. R. S. SWARNAMBAL, M.A., L.T.
with a foreword by D. S. REDDI, M.A, (*Oxon.*)

English Edn.] 178 pp. with 45 Illustrations [Price Re. 1

This guide gives exhaustive practical suggestions and hints which will help teachers to draw up time-tables and syllabuses, and impart instruction on satisfactory useful lines and thus improve the general efficiency of all Elementary Schools of the Presidency. *(Descriptive illustrated Booklet free)*

**G. SRINIVASACHARI & SONS,**
EDUCATIONAL PUBLISHERS,
**Narasingapuram Street — Mount Road, Madras.**

*N.B.*—Tamil Edition—in the Press

# தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதி

## ஆசிரியர்களுடையதே

பின் காலத்திற்கு ஒரு மூலதனம்

ஆசிரியர்களுக்குள் —

— ஐக்கியமும் பெருகும்

எட்டு வருஷங்களுக்கு முன் தென் இந்திய ஆசிரியர் சங்க ஐக்கிய காப்பு நிதி ஸ்தாபிக்கப்பட்டு செழித் தோங்கி வளர்ந்து வருகிறது.

உடனே சேருங்கள்

— மற்ற விவரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதலாம். —

41, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

M. K. Ramamurti,
கௌரவ காரியதரிசி.



Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.


# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)


தாது ஆ புரட்டாசிமீ
SEPTEMBER, 1936

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதருஸ்.

நஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

# பொருளடக்கம்


1. குழந்தைகளின் சங்கங்கள் .... .... 18
—எஸ். ஜெகன்னாதன்
2. காரண காரியம் ... ... 19
3. பெற்றோர் ஆசிரியரோடு ஒத்துழைத்தல் ... 20
4. பாப்பா மலர்ச்சி ... .... 20
—S. T. இராமானுஜ அய்யங்கார்
5. நூதன கல்வியும், குணாதிசயப் பயிற்சியும் .... 21
—மிஸ். சாந்திமதி
6. பாடசாலையும் குணசீலமும் ... ... 21
7. நல்லொழுக்கப் பயிற்சியும் ஆரம்ப பாடசாலைகளும் ... 22
—T. V. வெங்கட்ராமன்
8. சாரணீயமுஞ் சீலப்பெருக்கமும் ... ... 22
—R. சம்பந்தம் பிள்ளை, B.A., L.T.
9. குழந்தைகளுக்கு அடக்கமும், நற்குணங்களும் அமைவது எப்படி? ... ... .... 22
—வித்வான் B. A. பாஷ்யம் அய்யங்கார், M.A., L.T.
10. ஆனந்த வழி .... ... ... 23
—வித்வான் சி. கே. நடேச கவுண்டர்
11. கதா மூலம்--2 .... ... .... 23
—அ. ஸ்ரீநிவாஸ வரதாசாரி.
12. பத்திராதிபர் குறிப்பு .... .... .... 23
13. ரக்ஷணைப் படம் .... ... ...


## கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷூல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திராசிரியர்

# The Sixth South Indian Education Week-Messages.

## MESSAGE FROM HIS EXCELLENCY THE GOVERNOR OF MADRAS.

Government House,
Ootacamund,
29th September, 1936.

It gives me much pleasure to send my best wishes for the success of the Sixth Education Week. I am glad to see that the main theme of this year's programme is that most vital of all the aspects of education, the formation of character. For I feel that this is an aspect which has hitherto received all too little attention from parents, teachers and the general public. A theory of education that places ability to pass examinations in the forefront of its aims can never hope to attract public interest or to serve the needs of a great and growing democracy such as ours. The Central Education Week Committee can perform no more valuable service to the nation than by insisting on the formation of character as the ultimate goal of education, a goal which, in my personal opinion, can only be attained by founding education on a religious basis; nor could the committee find a surer way of attracting that interest and co-operation of parents and public which is essential to the growth of a healthy system of education. I sincerely hope that the coming Week will do much to stimulate a closer association between the community at large and the schools in which our children are receiving instruction.

K. V. REDDI,
*Acting Governor of Madras.*

## MESSAGE FROM R. M. STATHAM, Esq., DIRECTOR OF PUBLIC INSTRUCTION, MADRAS.

On the occasion of the Sixth South Indian Education Week I have been asked to send a Message and I gladly do so. I am happy to find that so many different associations have united to endeavour to make the programme for the Week a success. I am also glad that during the Week the Central Association Week Committee are going to concentrate particularly on "Schools and character training." It is a matter for satisfaction in this connection that all

162274



aspects of school life including cooperation with parents, the quality of the teacher, physical education, extra collegiate activities and health education will come up for consideration. All aspects of education and all stages of education are of course important but I would especially ask those who are cooperating in this Education Week to turn their attention in particular to the condition of Mass Education. There is a crying need for a great improvement in the work which is now being done in our elementary schools and there is a great necessity for relating far more closely than hitherto the progress of work in our elementary schools to the increase in the number of literate men and women in the Presidency. There is the equally great need of reducing the waste of energy, time and money now unfortunately occurring in so many of our schools. In this connection the quality of our teachers and the enthusiasm of our teachers are of great importance. I wish the Education Week every success and I sincerely hope that its programme of work will be fruitful of useful results.

R. M. STATHAM,

*Director of Public Instruction, Madras.*

---

## MESSAGE FROM HIS GRACE THE MOST REV. DR. L. MATHIAS, S.C., D.D.,

*President, Central Education Week Committee, Madras.*

"Constant dripping wears away the stone," so insistence on one point must ultimately win popular attention. The regular annual Education Week, focussing public attention for a few days every year on a special point will achieve its aim.

The formation of character in youth is the most serious problem that confronts those who have the welfare of youth at heart, and the Education Week Committee could not have chosen a better theme for their conferences and studies.

"As the twig is inclined, so grows the tree," And the child is like the twig—if bent to one side in the beginning, it will always bend awry, whereas if inclined to the good, it will never go astray, not even in its old age.

Character training of youth redounds to the interest of the family, of society, and of the nation, and those who have the responsibility of imparting this training have a duty and a responsibility before God, before men, and before society.

L. MATHIAS.


# பாலர் கல்வி

தொகுதி 1]    1936ஞ செப்டம்பர்மீ    [பகுதி 7


## குழந்தைகளின் சங்கங்கள்

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை

### இதன் அவசியம்

சின்னஞ் சிறு குழந்தைக்குத் தூக்கம் அவசியம். வளருகிற குழந்தைக்கு விளையாட்டு இன்றியமையாதது. விளையாட்டே அதன் ஜீவாதாரம். அந்த விளையாட்டின் மூலமாக உலக நாடகங்களையே அவர்கள் ஐந்து வயதிற்குள் நடித்துக் காட்டிவிடுகிறார்கள். அவர்கள் இராஜ்யத்தில் கலியாணம் நடக்கும், கோயில் உற்சவம் உண்டு, மோடார் ஓடும், குடும்ப வியவகாரங்கள், சமைக்கிறது, சாதம் போடுகிறது, குழந்தைக்குக் குளிப்பாட்டுகிறது, சாதம் ஊட்டுகிறது போன்றவைகள், கடைவைத்து வியாபாரம் செய்தல் இவைகள் வெகு உற்சாகமாக நடைபெற்று வருகின்றன. சுயேச்சையில் தமது ஆத்மசக்தியை வெளிப்படுத்துகிறார்கள். நமக்குக் கூட நமது வேலைத் தொல்லையிலிருந்து ஒருநாளாவது விலகியிருந்து நமது இஷ்டப்படி நடக்கவேண்டுமென்று ஆசையிருந்து வருகிறது அல்லவா ?

இது நிற்க, நமது பள்ளிக்கூட அனுஷ்டானத்தை எடுத்துக்கொள்வோம். முக்கியமாக எண், எழுத்து இவைகளைக் கற்றுக் கொடுப்பதிலேயே நாம் பொதுவாக நமது முழு கவனத்தைச் செலுத்தி வருகிறோம். ஆயினும் சமூகவாழ்க்கை, தேகப்பயிற்சி, நல்லொழுக்கம் இவைகளிலும் நமது கவனம் செலுத்தப்படவேண்டும். முப்பது நாற்பதுபேர் இருக்கிற ஒரு வகுப்பு அறையில் கால அட்டவணை, பாட அட்டவணைகளில் குறித்த ஒரு நிர்ப்பந்தத்தில் வேலை செய்யும்பொழுது பூராவாகச் சுயேச்சையாகவிட்டுக் காரியங்களைச் செய்யச் சொல்லி விஷயங்களைக் கிரகிக்கச் செய்யப் போதுமான அவகாசம், சாதனம், இடம் கிடையா. ஏதோ ஒருவிதமான கண்டிப்பும், மேற்பார்வையும், ஒழுங்கு முறையும் அடிக்கடி தேவையாயிருக்கிறது.

நம் ஒவ்வொருவரிடத்திலும் ஆத்மசக்தி அழுந்திக் கிடக்கிறது. அதை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கிறதில்லை. தக்க சந்தர்ப்பம் கிடைக்கும் பக்ஷத்தில் நமது ஆத்மசக்தியை வெளிப்படுத்த முயலுவோம். ஆகவே அதை உணருகிற நாம் குழந்தைகளினுடைய ஆத்ம சக்தியை வெளிப்படுத்த ஒரு தக்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். பிள்ளைகள் ஒன்று கூடி, ஓடி, ஆடி, விளையாடி மகிழ்வுற்று, ஒருவர்க்கொருவர் கலந்து பேசித தமது உள்ளத்தில் ஒளிய வைத்திருக்கும் எண்ணங்களை வெளிப்படுத்தி அழகுபெறக் காரியங்களைச் செய்து தமது இளம்பிராயத்தைக் கழிக்க ஒரு சாதனம் வேண்டுவது அவசியம்தான். குழந்தைகளின் சங்கம் ஒன்று ஸ்தாபிப்பது மேற்சொன்ன நற்குணங்களை வளர விடுவதற்கு ஒரு தகுந்த சாதனம் ஆகும்.

## எப்பொழுது இவ்வெண்ணம் உதயமாயிற்று?

சுமார் எட்டு வருஷங்களுக்கு முன்பு என் வகுப்பிற்குப் பாடம் சொல்லிக் கொடுத்துவரும் சகபாடி ஒருவர் லீவு எடுத்துக்கொள்ள நேரிட்டது. ஆகவே அவரது பாடங்களையும் நானே போதிக்கவேண்டியதாயிற்று. பிள்ளைகள் சதாகாலமும் ஒரே பாடத்தைப் படிப்பது மிகவும் துர்லபம். சற்றே விளையாட்டு, சற்றே சிரிப்பு, சற்றே தேக நடமாட்டம், சற்றே உற்சாகம் இவை கலந்திருக்கவேண்டியிருக்கின்றன. ஆகவே புராதனமாயுள்ள விடுகவிகள் சொல்லுவதிலும், அவர்களையே விடுகவிகள் சேகரம் செய்துவரச் சொல்லுவதிலும், வேடிக்கையான கணக்குகள் கொடுப்பதிலும் காலங் கழித்துவந்தேன். கொஞ்சம் ஆரம்பித்தவுடன் குழந்தைகள் அதில் அதிக ஊக்கமும் சிரத்தையும் காட்ட ஆரம்பித்தனர். வேடிக்கைக் கணக்குகளைத் தாங்களே பெரிய அட்டையில் எழுதிவர ஆரம்பித்தனர்.

ஒருமாதம் கழிந்தபிறகு லீவு எடுத்துக்கொண்டவர் திரும்பிவந்துவிட்டார். எடுத்துக்கொண்ட வேலையைக் கைவிடப் பிள்ளைகளுக்குத் துளிகூட மனம் வரவில்லை. பள்ளிக்கூட நேரத்திற்குப் பிறகு இவர்கள் எங்கேயாவது ஒருமிக்க சேர்ந்து மேற்சொன்ன பிரகாரம் காலங்கழிக்கலாமென்று நிச்சயிக்கப்பட்டது. அச்சமயம் சூபரிண்டெண்டெண்டாயிருந்த மிஸஸ் பிரான் அம்மாள் குழந்தைகள் கல்விமுறைக்கு இச்சங்கம் மிகப் பொருத்தமானதென்று குழந்தைகள் கூடி விளையாடுவதற்குப் பிரத்தியேகமான இடம் ஒன்று தயார் செய்து கொடுத்தனள்.

## ஆரம்பகால நடவடிக்கைகள்

அன்று சாயந்திரமே குழந்தைகள் ஆளுக்கு ஒரு பை வரிபோட்டுக்கொண்டு ஒரு தண்ணீர்ப்பானை வாங்கி வந்தனர். அறையைப் பெருக்கிச் சுத்தம் செய்து அங்கே உட்காருவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொண்டனர். தினசரி ஆஜர் ரிஜிஸ்தர் ஒன்று தயார் செய்துகொண்டனர். அறையின் சுவர்களை அழகுபெறச் செய்ய நல்ல வர்ணப் படங்களை



ஒட்டினர். ஓய்வுநேரத்தில் படங்களைப் பார்த்துக் களிக்கச் சில படப் புத்தகங்களைத் தயார் செய்து வந்தனர். இதற்கு ஒருவருஷத்திற்கு முன் ஹிந்து பத்திரிகையின் தங்க ஜூப்ளி கொண்டாட்டம்நடந்தது. அதைக் கண்ணுற்ற யான் குழந்தைகளுக்கென்று ஒரு சித்திரப் பத்திரிகை இல்லையே என்று வருந்தினது உண்டு. அக்குறையைப்போக்க யானே படங்கள் சேர்த்து கையெழுத்துப் பத்திரிகை ஒன்று தயார்செய்து வெள்ளிக்கிழமை தோறும் வெளியிட ஆரம்பித்தேன். ஆகவே அப்பத்திரிகை குழந்தைகள் சங்கத்திற்கு ஏற்றதாயிருந்தது. வார்த்தைகள் சேர்த்தல் விளையாட்டுக்கு ஏற்றபடி அட்டைத் துண்டுகளில் வார்த்தைகளை வெட்டிவைத்துக்கொண்டு சிலர் விளையாடினார்கள். மற்றும் சிலர் கிட்டிப்பந்து, கால்பந்து முதலியவைகளிலும் காலங்கழித்து வந்தனர்.

## சங்கத்தை ஒழுங்குபடுத்தி நடத்தவேண்டிய ஏற்பாடுகள்

1. பாஷை சம்பந்தமான விளையாட்டுக்கள்.

| | | | |
|---|---|---|---|
| (i) | விடுகவிகள் | (iv) | புத்தகாலயம் (கதை படித்தல்) |
| (ii) | கதை சொல்லுதல் | (v) | பத்திரிகை படித்தல் |
| (iii) | வார்த்தைகள் விளையாட்டு | (vi) | படப்புஸ்தகம் பார்த்தல் |

இவற்றுள் முதலில் சொன்ன விடுகவிகளைப்பற்றி முன்னம் (ஜூலை 1936) ஒரு சஞ்சிகையில் சில குறிப்புக்களைத் தெரிவித்தேன். குழந்தைகள் கதைகள் கேட்கப்பிரியப்படுகிறார்கள். நாம் சில கதைப்பாடல்களை வாசித்துக் காட்டுவது உசிதமாகும். இதற்கும் சில உதாரணங்களை அதே சஞ்சிகையில் கூறியுள்ளேன். மூன்றாவதாகச் சொல்லியவார்த்தை விளையாட்டு பின் வருமாறு. மேலே குறிப்பிட்டுள்ள பழைய சஞ்சிகையைக் கவனிக்க ஒரு வார்த்தையின் அர்த்தத்தைத் தரக்கூடிய வேறு பதங்களைக் கண்டுபிடித்தல் என்பதை உதாரணமாகக் கொள்ளலாம். ஒரே அர்த்தத்தைத் தரக்கூடிய பல பதங்களை ஓர் அட்டையில் வரிசைப்பட எழுதித் தொங்கவிட்டுக் கொள்ளவேண்டியது. அவ்வார்த்தைகளையெல்லாம் துண்டு அட்டைகளில் கத்தரித்து வைத்துக் கொள்ள வேண்டியது. விளையாட்டிற்கு 3, 4 அல்லது 5 பிள்ளைகள் உட்காரலாம். மேலே கூறப்பட்டுள்ள அட்டைத்துண்டுகளை விளையாட்டிற்கு உட்கார்ந்திருக்கிற பிள்ளைகள் பங்கிட்டுக் கொள்கிறார்கள். பிறகு தங்களிடமிருக்கிற வார்த்தைகளை ஒழுங்கு படுத்திக்கொண்டு, எந்தெந்த வரிசைகளைப் பூர்த்தி செய்யலாம் என்று கவனித்துப் பூர்த்தி செய்யக்கூடிய வார்த்தைகளைப் பிறரிடமிருந்து கேட்டுவாங்குகிறார்கள்.

(உ-ம்) அசுவம், பரி, (துரகம், குதிரை)
கரி, யானை, வேழம் (குஞ்சரம்)
ராஜா, மன்னன், வேந்தன் (அரசன், இறைவன்)


ஒரு வரிசை முழுவதும் சேர்த்து மற்ரொரு வரிசை சேர்க்கப் பிரயத்தனப்படவேண்டும். எவர் அதிக வரிசை சேர்க்கிருர்களோ அவரே செலித்தவர். குழந்தைகளுக்குக் கதை படிப்பதிலும் ஆசையுண்டு. பலவிதமான வாரச் சஞ்சிகைகளில் சிறுவர் பகுதி என்ற தலைப்பின் கீழ்வரும் கதைகளைச் சேகரிப்பது பொருந்தும். குழந்தைகளுக்கென்று எழுதப்படும் பத்திரிகையில் அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி உபாத்தியாயர் தலைக்கொரு பக்கமாக எழுதி வரலாம்.

1. படத்துடன் கூடிய பாட்டு
2. யாத்திரை
3. கைவேலைக் குறிப்புக்கள்
4. சிறுகதை (வேடிக்கையானது)
5. மாதாந்தரப் பண்டிகைகள்
6. பண்டங்களும் அவைகளின் தன்மையும்
7. பெரியோர் ஜீவிய சரத்திரக் கதைகள்
8. விடுகவிகள், வேடிக்கைக் கணக்குகள்
9. இயற்கைக் குறிப்புக்கள்.
10. தேச சரித்திரக் கதைகள்
11. மாதாந்தரச் சமாசாரங்கள்.
12. சில விளையாட்டுக்கள், (குருளையர் விளையாட்டுக்கள்).

குழந்தைகளின் சித்திரம், கதை இவற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

### படப் புஸ்தகம் பார்த்தல்

இது விஷயமாக உபாத்தியாயர்கள் கொஞ்சம் சிரத்தை எடுத்துக் கொண்டு இங்கிலீஷ் தமிழில் மாதமாதம் வெளியிடப்படும் பத்திரிகைகளிலுள்ள படங்களைச் சேர்த்து ஒழுங்குபடுத்திக்கொள்ளுதல் அவசியமாகும்.



1. தேச சரித்திரப் படங்கள்
2. தேசவிவரணப்படங்கள்
3. மிருகங்கள்
4. பக்ஷிகள்
5. ஊர்வன
6. விளக்குகள்
7. வண்டிகள்
8. சங்கீதக் கருவிகள்
9. கோயில்கள், கோபுரங்கள்
10. பல ஊர் ஜனங்கள், குழந்தைகள்
11. தேசப் பெரியார்களின் படம்
12. கதைகள்.



வேண்டும்போது இப்புத்தகங்களைக் குழந்தைகள் பார்த்துவரலாம். தாங்களே இவைகளைச் சேகரம் செய்து ஒட்டி, அட்டை போட்டுத் தைத்து வருகிருர்களாதலினுல், இவற்றைப் பத்திரமாகக் காப்பாற்றிவருவார்கள்.

### கணித சம்பந்தமான விளையாட்டுக்கள்

**வேடிக்கைச் சதுரங்கள்.** எப்படிக் கூட்டினுலும் விடை ஒன்றே.

| | | |
|---|---|---|
| 4 | 9 | 8 |
| 11 | 7 | 3 |
| 6 | 5 | 10 |

| | | |
|---|---|---|
| 7 | 12 | 11 |
| 14 | 10 | 6 |
| 9 | 8 | 13 |

| | | |
|---|---|---|
| 9 | 14 | 13 |
| 16 | 12 | 8 |
| 11 | 10 | 15 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 10 | 15 | 20 |
| 12 | 19 | 6 | 13 |
| 16 | 7 | 18 | 9 |
| 17 | 14 | 11 | 8 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 20 | 13 | 26 | 19 |
| 24 | 12 | 25 | 18 | 6 |
| 11 | 29 | 17 | 5 | 23 |
| 28 | 16 | 9 | 22 | 10 |
| 15 | 8 | 21 | 14 | 27 |

### மனத்தில் ஒன்று நினைத்துக்கோள்ளுதல்.

1. பத்துக்குள் ஏதாவது ஓர் எண்ணை நினைத்துக்கொள். அதை 2 ஆல் பெருக்கு. பெருக்குத் தொகையுடன் 2 ஐக் கூட்டு. கூட்டி வந்ததை 5 ஆல் பெருக்கு. கடைசியாக 5 கூட்டிக் கிடைத்த எண்ணை எழுது.

2. பத்துக்குள் ஏதாவது ஒரு எண்ணை நினைத்துக்கொள். அதை 3 ஆல் பெருக்கு. பிறகு 1 ஐக் கூட்டிக்கொள். கூட்டிவந்த எண்ணை மறுபடியும் 3 ஆல் பெருக்கு. பெருக்குத் தொகையுடன் நீ முதலில் மனத்தில் நினைத்துக்கோண்ட எண்ணைக் கூட்டு. விடை எழுது.

3. மனத்தில் ஒன்று நினைத்துக்கொள். அதை இரண்டால் பெருக்கு. நான் கொடுக்கிற 8-ஐச் சேர்த்துக்கொள். மொத்தத்தில் பாதியைப் பிள்ளையாருக்குக் கொடு. மற்றப்பாதியிலிருந்து நீ முதலில் நினைத்துக்கொண்டதைக் கழி. மீதி எனக்குத் தெரியும், சொல்லட்டுமா?

### பொழுது போக்குக்கான கைவேலைகள்.

1. நெருப்புப்பெட்டி, அலமாரி செய்தல்.
2. ரங்க ராட்டினம் செய்தல்.

3. கியாலண்டர் தயார் செய்தல்.
4. முகூர்த்தப் பத்திரிகை எழுதுதல்.
5. பக்ஷி கூண்டு செய்தல்.
6. பாடசம்பந்தமான விஷயங்களை அட்டையில் தயார் செய்தல்.
7. ஸ்டாம்புப் படம் நெருப்புப் பெட்டி போன்றவைகளைச் சேகரம் செய்து அழகாக ஒட்டுதல்.
8. துணிப் பொம்மை.
9. மெழுகுவர்த்திப் பொம்மை.

இம்மாதிரி விஷயங்களில் பிள்ளைகளுக்கு உற்சாகமுண்டு. ஒரு வருஷம் ஒரு வகுப்புக் குழந்தைகள் இவற்றைச் செய்ததில் சிலர் தமது சொந்த சாமர்த்தியத்தைக் காட்டினது வெகு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

(a) சோப்புப் பெட்டியிலேயே அலமாரி செய்து அடியில் இழுக்கக் கூடிய அறை தயார் செய்தாள் ஒரு பெண் குழந்தை.

(b) அறைகளை இழுப்பதற்கு ஏற்றவாறு ஒரு நூலில் ஒரு ஈர்க்குச்சித் துண்டை அல்லது ஒரு களிமண் உருண்டையைக் கட்டி வைத்தல்.

(c) கடிகாரம் மாதிரிக் கியாலண்டர் செய்து மாதம், நாள், தேதி காட்ட முள் அமைத்தல்.

(d) முகூர்த்தப் பத்திரிகையில் மருமகன், மருமகளின் படம் ஒட்டினான் ஒரு பையன்.

(e) பலவிதப் பக்ஷிக் கூண்டுகள் செய்தல். ஒரு குழந்தை பல பக்ஷிகளின் படங்களைச் சேர்த்து ஒரு சபை மாதிரி செய்திருந்தான்.

(f) கோகுலம், பஞ்சவடி இவற்றைக்காட்ட ஒரு குழந்தை அட்டையில் தயார் செய்த பொம்மைகள் மிகவும் வேடிக்கையாயிருந்தது.

(g) ஒரு பையன் ஒரு குடையில் ரங்க ராட்டினம் செய்தது மிகவும் நேர்த்தியாய் இருந்தது.

இவ்வாறு சுயேச்சையாகச் சில காரியங்களைச் செய்யச் சொல்லுவதில் குழந்தைகள் தமது முழுச் சக்தியை வெளிக்காட்ட முயலுகிறார்கள். அவர்களது முழுச் சக்தியை வெளியிடச் செய்வதே கல்வியின் நோக்கம்.

## விளையாட்டுக்கள்.


பல குழந்தைகள் விளையாடுவதற்கென்றே அங்குக் கூடுகிறார்கள்.

பந்து விளையாட்டுகள். கால்பந்து
கிட்டிப்பந்து
பிள்ளையார் பந்து
பேய்ப் பந்து
சில்லுப் பந்து
} கிராமக் குழந்தைகளும் நகரக் குழந்தைகளும் இவ்விளையாட்டுகளில் சந்தோஷிக்கிறார்கள்.

தற்சமயம் நடந்துவரும் கிரிக்கெட் ஆட்டத்தின் ஆரம்பம் பழைய காலத்துக் கிட்டிப்பந்து ஆட்டத்தில் அடங்கியிருந்தது என்று ஒருவாறு



குறிப்பிடலாம். நான் சிறியவனாயிருக்கும்பொழுதே கோவில் பிரகாரத்தில் இவ்விளையாட்டை விளையாடியிருக்கிறேன். கிட்டி கொண்டு ஒரு பந்தை வெகு தூரத்தில் அடித்துவிட்டு ஒரு வட்டத்தைப் பலதரம் சுற்றி வரவேண்டும். எதிர்க் கட்சியினர் அடிக்கப்பட்ட பந்தைப் பிடித்தோ அல்லது எடுத்தோ கூடிய சீக்கிரம் வட்டத்திற்குள் விழும்படி எறிந்து விடுவார்கள்.



பாண்டி ஆட்டம் இதில் பலவிதங்கள் உண்டு.

மூன்று சக்கரபாண்டி
ஆறு கட்டப்பாண்டி
நூறு ஆயிரம் பாண்டி
ஏரோப்ளேன் பாண்டி.

வயது முதிர்ந்தவர்கள் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கக் குழந்தைகளும் புதிது புதிதாகச் சிலவற்றைக் கண்டுபிடிக்கிறார்கள். ஏரோப்ளேன் பாண்டி வெகு நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்டதே ஆகும். ஜெர்மன் குழந்தைகள் கூடப் பாண்டி ஆடுவதை ஒரு படத்தில் பார்த்தது எனக்கு ஞாபகம் வருகிறது.

கோலி ஆட்டம் முக்குழி
ஒற்றைக்குழி
பேந்தா
} முட்டிவைத்தல் என்கிற வழக்கத்தை நாம் நீக்குவது நல்லதாகும். ஒருவன் முட்டியில் அடித்து வருத்துவது

என்னும் தீய பழக்கத்தை விட்டுவிடலாமல்லவா ?

1. பச்சைக் குதிரை தாண்டுதல்.
2. பட்டம் பறக்கவிடுதல்.
3. பலிச்சப்பளாம்.

இவை வெகு நேர்த்தியான விளையாட்டுகள். தகுந்த மைதானங்களிலே, ஆறுகளில் ஜலம் இல்லாத காலத்திலே கூட இவற்றை விளையாடலாம்.

## வகுப்புகளுக்குள் பந்தயம்

முதலில் கூறப்பட்ட சில விளையாட்டுக்களில் வகுப்புகளுக்குள் சில பந்தயங்கள் ஏற்படுத்திக்கொள்ளுவது உசிதமானது. மேலும் பந்து ஆட்டங்களில் இன்னும் பலவற்றைப் புதிது புதிதாகக்கண்டறிந்துவருகிறார்கள். வகுப்புப் பிள்ளைகளையே இரண்டு கக்ஷிகளாகப் பிரித்துப் பற்பல ஆட்டங்களை ஆடி விளையாடி வருகிறார்கள். ஒய். எம். ஸி. ஏ. தேகப்

பயிற்சிக் கலாசாலையில் தேகப்பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களுக்கு இவற்றின் பிரயோஜனம் தெரியவரும். உருளைக் கிழங்கு பொறுக்குதல், எலுமிச்சம்பழம் கரண்டி போன்ற பந்தயங்களையும் வாரத்திற்கு ஒரு முறை நடத்தலாம்.

### உட்கார்ந்து விளையாடும் விளையாட்டுக்கள்

1. பரமபத சோபானபடம்
2. பல்லாங்குழி
3. கட்டம்
4. பதினைந்து புலி ஆடு
5. காரம்ஸ்
6. வளையம் எறிதல் முதலியன
7. பாண்டி
8. கொண்டி ஆட்டம்

பெரும்பாலும் பெண்களே இவ் விளையாட்டுக்களில் பிரியப்பட்டாலும் அவர்களுக்கும் சில நல்ல ஓடி ஆடும் விளையாட்டுக்கள் இருக்கின்றன.

1. கிட்டிப்பந்து
2. கொடி விளையாட்டு
3. வளையம் வீசி எறிந்து பிடித்தல்
4. நாடா வைத்துக்கொண்டு தாண்டுதல்
5. கும்மி, கோலாட்டம் முதலியன.

கோலம், பூஜை, பஜனை, பாட்டு, சிற்றுண்டி அருந்துதல் இவைகளைச் சில காலம் அனுஷ்டிக்கலாம்.

### குழந்தைகளின் இராஜ்யத்தில் குழந்தைகளே அதிகப் பங்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

இது வாஸ்தவமே அவர்களிடம் ஒரு காரியத்தை உதாரணமாக வகுப்பை அழகுபடுத்துவது என்பது போன்ற ஒன்றை ஒப்படைத்து விட்டால் அவர்கள் பூர்ண சிரத்தையுடனும் ஆசையுடனும் உற்சாகத் துடன் ஆளுக்குக் கொஞ்சம் பங்கு போட்டுக்கொண்டு ஒப்படைக்கப் பட்ட காரியத்தை செவ்வனே செய்து வருகின்றனர். ஆகவே இம்மாதிரி ஒரு சங்கத்தை நடத்திவரப் பிள்ளைகளின் கூட்டுறவு இன்றியமையாதது. சங்க நடவடிக்கைகளைப் பல பாகங்களாகப் பிரித்து அதற்கென ஒரு பிரத்தியேகமான காரியதரிசியும் உதவிக் காரியதரிசியும் அவர்கள் கூட்டத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

1. பந்தயங்கள்
2. வகுப்பு அறை
3. கை வேலை
4. பத்திரிகை
5. படப் புஸ்தகங்கள்
6. பெண்கள் விளையாட்டுக்கள்
7. தோட்ட வேலை
8. உட்கார்ந்து விளையாடும் ஆட்டங்கள்

ஒரு சமயம் குழந்தைகளால் அமைக்கப்பட்ட ஒரு நியாய சபையினர் பின் வருமாறு தீர்மானம் செய்தனர்.



1. குல்லாயைக் கிழித்ததற்கு அதைத் தைத்துக் கொடுக்க வேண்டும்.

2. புஸ்தகத்தின் அட்டைக் கிழித்ததற்குத் தன்னுடைய புஸ்தகத்தை மாற்றிக் கொடுத்துவிடவேண்டும்.

3. வேறொர் நோட்டுப் புஸ்தகத்தில் எழுதியதை அழித்துக் கொடுக்கவேண்டும்.

4. கிழிந்த சட்டையைத் தைத்துக் கொடுக்க வேண்டும்.

இம்மாதிரி செய்த தீர்ப்பு மிகவும் கொண்டாடத்தக்கது ஆகும். பல விஷயங்களில் குழந்தைகள் தமது பரிசுத்தமான களங்கமற்ற மனத்தை வெளிக் காட்டுகிறார்கள். அதே பிள்ளைகள் பள்ளிக்கூடப் பாடங்களில் சிலவற்றில் குறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். என்றால் அவர்களைக் குறைகூறப் பிரயோஜனம் இல்லை. அது பல வேறு விஷயங்களைப் பொருத்திருக்கிறது. உதார குணமும், அன்பும் ததும்பி நிற்கிறதைக் காண மனத்திற்கு ஒரு விசேஷ ஆனந்தம் உண்டாகிறது. மேலே சொன்ன சக்திகளை நாம் சில கண்டிப்பான முறைகளால் அடக்கிவைப்பது பொருந்தாது. தக்கசமயம் ஏற்படின் அவர்கள் தமது நற்செய்கைகளை வெளிக்காட்டுவார்கள். வழிகாட்டுதல் மேற்பார்வை செய்தல், சில சமயம் அவர்களது நன்மையைக் குறித்து உறுதியான வார்த்தை சொல்லுதல் புத்தி சொல்லுதல் இவை நிச்சயமாக வேண்டியதுதான். அளவு கடந்த பயமும் தண்டனையும் உதவாது. அப்படியிருப்பின் இரகசியமாக, ஒளிமறைவாக, நமக்குப் பிடிக்காத காரியங்களைச் செய்யத் துவக்குவார்கள். நாமே அதற்குக் காரணமாவோம்.

### பள்ளியைச் சேர்ந்த குழந்தைச் சங்கமும் பிரத்தியேகமான கிராமக் குழந்தைச் சங்கமும்

பள்ளிக்கூடச் சம்பந்தமான குழந்தைகளின் சங்கத்தில் பள்ளிக்கூட விஷயங்களை இரட்டித்தல் அவசியமில்லை பள்ளிக்கூட நேரங்களில் அனுஷ்டிக்க முடியாத விஷயங்களிலேயே காலம் கழிப்பது ஏற்றது. இது படிப்பைச் சேர்ந்த ஒரு பாகமெனக் கருதவேண்டும். பிரத்தியேகமானதென்றும் தனிப்பட்ட அம்சம் என்றும் கருதல் தவறு. பிரத்தியேகமான கிராமசங்கத்திற்கு அடியிற்கண்ட ஏற்பாடுகள் ஏற்றதாகும்.

1. தினச் செய்திகள்
2. இயற்கை மாறுதல்
3. கியாலண்டர்
4. விடுகவிப் பலகை
5. புது ஆட்டம்
6. கல்வி நீதி போதனை உபன்னியாசங்கள்
7. சுகாதாரக் குறிப்புகள்

8. நீதி போதனைக் குறிப்புகள்
9. புத்தகாலயம்
10. கிராமபோன்
11. சிறுவர்களுக்கெனச் சில கட்டைகளும் விளையாட்டுக் கருவிகளும்
12. பிரதம சிகிச்சை மருந்துகளும் உபகரணங்களும்.

பள்ளிக்கூடத்தில் படித்துப் படிப்பை நிறுத்திவிட்ட மாணவர்களும் இவற்றில் கலந்துகொள்வது சரியாகும். வருஷத்திற் கொருதரம் பந்தயம் வைத்துப் பந்தயத்தில் ஜெயிப்பவர்களுக்கும், ஒழுங்காகச் சங்கக் காரியங்கள் செய்வதில் உற்சாகம் காட்டுகிறவர்களுக்கும் பரிசு அளித்தல் பொருந்தும். நவராத்திரி காலத்தில் சங்கத்தின் இடத்தை அழகுபடுத்தி வைப்பது மேலானது. கிராமத்தார் இவ்வேற்பாட்டை அபிவிருத்தி செய்வது அவசியம். சங்கத்தைச் சேர்ந்த குழந்தைகளே தெருத்தெருவாகச் சென்று பெற்றோர்களுக்கும் ஊரிலுள்ள பிரமுகர்களுக்கும் அழைப்புக் கடிதங்களைக் கொடுத்து உதவுகிறார்கள். எல்லாம் அவர்களது பொறுப்பு. ஆயினும் நமது பொறுப்பு குறைந்துவிடாது. அப்பொறுப்பு உண்டாகும்படி செய்வது, காரியங்களை ஒழுங்காக அமைக்கத் தக்கவாறு முன் யோஜனையுடன் ஏற்பாடுகளை அனுஷ்டித்தல், சங்கம் மேலோங்கத் தக்க முறைகளைப்பற்றிச் சிந்தித்தல் இவை நமது பொறுப்பாகும். முக்கியமாகக் குழந்தைகள் பாடம் படிக்க மாத்திரம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறந்து, அவர்கள் உள்ளும், புறமும் விசாலமாகி, அவர்களிடம் மடங்கியிருக்கும் சக்தியை வெளிக்கொணர்ந்து, தக்க மார்க்கத்தில் அவர்களைத் திருப்புவது என்பதை நாம் நமது நோக்கமாகக் கொள்ளவேண்டும். அப்பொழுது இச்சங்கம் அந்த மேலான நோக்கங்களைப் பூர்த்தி செய்ய ஒரு தகுந்த சாதனம் ஆகும்.

## நல்லதும் பொல்லாததும் கலந்தே தோன்றுகின்றன.

பகலும் இரவும் கலந்தே இருக்கின்றன. மெய் என்பதன் பக்கத்தில் பொய் என்று ஒன்று இருக்கிறது. தேவர்கள் பக்கத்தில் அசுரர்களும் தோன்றுகின்றனர். நம்முடைய தொழிலில்கூட அம்மாதிரி சில தோற்றங்கள் உண்டு. பணத்தரித்திரம் பிடுங்கும் பள்ளிக்கூடம், சம்பளக் குறைவான சேவகம், சாப்பாடு போதாத பிள்ளைகள் இவைகள் இருக்கக்கூடியதுதான். மேலும் ஒரு நற்காரியத்தை ஆரம்பிக்கிறவருக்கும் பல இடையூறுகள் தோன்றும். அவரது வேலையை யாருமே மெச்சாமலிருக்கலாம். சிலர் பார்த்ததும் பார்க்காமலுமே செல்வார்கள். சிலர் கொஞ்சம் பிழை கண்டுபிடிப்பார்கள். இவைகள் இல்லாவிடில் உலகமேயில்லை, ஒரு சிநேகிதர் ஒரு குழந்தையைப் பார்த்து "உன் அப்பா எங்கே?" என்று கேட்க, வீட்டிலிருக்கிற ஒருவர் "குழந்தையைக் கூப்பிட்டு, "அப்பா அகத்தில் இல்லை என்று சொல்" எனச் சொல்லிவிட்டனர். நிஜமாக அப்பா அகத்தில்தான் இருந்தார். இதைக் கவனிக்கும்பொழுது



"என்ன ஆச்சரியம் 'ஒரு பொறி பறக்க ஊரெல்லாம் பொறி' என்று விடுகவி உண்டு, ஒரு பொய் சொல்லி இந்த உலகவாழ்வே பொய்மயம் என்றல்லவா குழந்தைக்குச் சொல்லிக்கொடுக்க நேர்ந்தது. "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்பது ஞாபகத்தில் வரவில்லை. பொய் மயமாக மாறிவிட்டது. இதுவும் அளவுகடந்த ஒரு ஞானம்தான். நம்முடைய விடாமுயற்சியினாலே மேலே சொன்ன குறைகளை நீக்கமுடியும். ஸத்தியத்தை நாடி வருகிறவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் காணக்கூடிய ஸத்தியத்தை அறிவார்கள்.

## நன்மையைத் தேடி வருவதே நமது தர்மம்.

குழந்தைகளுடனிருந்து குழந்தைகளுக்காக ஜீவிப்போம் என்ற மந்திரத்தில் மன உறுதியுடையவர்களுக்கு இத்தொழில் ஒரு ஈசுவர கைங்கரியம் ஆகும். சேவை என்பதே அவரது தர்மம். சேவையில் தியாகம் பொருந்தியிருக்கிறது. சேவை என்பது இடம், நேரம், உணவு, உறக்கம் ஓய்வு, காசு, பணம் என்ற எல்லைகளைக் கடந்தது. குழந்தைகளின் க்ஷேமத்தை நாடி வருவதில் பலவிதச் சாதனங்கள் தோன்றுகின்றன. அவற்றை ஆதரித்து முன்னுக்குக் கொண்டுவரவேண்டியது நம் போன்றவருடைய தர்மம். மற்றும், குழந்தைகளின் க்ஷேமத்தைக் கருதிவரும் பெற்றோர்களும் பிரபுக்களும் அதனை ஆதரிக்க கடமைப்பட்டவர்கள். ஒரு நல்ல காரியத்தினால் பல குழந்தைகள் குதூகலமாயிருப்பார்களானால் அந்தச் சந்தோஷத்தைக் கவனிக்க நமது தேகச் சிரமம் பறந்துபோம். நமது உள்ளத்திலும் ஒரு பிரகாசம் உண்டாகும். அதுவே நமக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஓய்வு உள்ள நேரத்தில், வசதிகள் இருக்கும் கிராமத்தில் இவ்வாறு ஒரு சங்கம் ஏற்படுத்தி நடத்துதல் மிகவும் பொருத்தமாய் இருக்கும். வெளித் தோற்றத்தைவிடச் சிரத்தையும் உண்மையுமே அவசியம். ஸகல ஜீவரக்ஷகரான ஸர்வேசுவரன் நல்ல நோக்கத்துடன் கூடிய நமது அடக்கமான ஏற்பாடுகளை ஆதரித்து வருகிறார். ஆகவே அவ்வேற்பாடுகள் மேன்மேலும் விருத்தியடையும்படி நாம் அவரையே பிரார்த்திப்போம்.

# காரண காரியம்*

**'காக தாளிக நியாயம்'**

'காக்கை உட்கார்ந்தது; பனம்பழம் விழுந்தது' என்னும் நியாயம் எல்லோருக்கும் தெரியும். இரண்டு சம்பவங்கள் ஒரே காலத்தில் நிகழ்ந்தன என்பதை மற்றும் வைத்துக்கொண்டு அவைகளுக்குச் சம்பந்தம் கற்பிப்பது சரியாகாது. தெருவில் நான் போகும்போது ஒருவன் மூர்ச்சித்துக் கீழே விழுந்து இறக்கலாம். அதனால் நான்தான் அவன் சாவுக்குக் காரணமென்று சொல்லுவது உண்மையாகாது. இவ்விதச் சம்பவங்கள் பலமுறை நிகழலாம். ஆனால் நான் தான் அவ்வளவு பேரும் இறந்ததற்குக் காரணம் என்று சந்தேகமில்லாமல் விளங்கினாலன்றி, எனக்கும் இச் சாவுகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாமல் இருக்கலாம். இவ்விதச் சம்பந்தம் இருக்கும் என்று சும்மா நம்பிவிடுவது சாஸ்திர நியாயமாகாது.

**ஆரம்பக் கல்வி மோசமாயிருப்பதற்குக் காரணம்: பல வகுப்புகளுக்கு ஓர் உபாத்தியாயர் கொண்ட பள்ளிக்கூடங்கள் தானா?**

அநேகமாக ஆரம்பப் பாடசாலைகள் நல்ல நிலைமையில் இல்லை. பொதுவாக நோக்குமிடத்து ஆரம்பப் பாடசாலைகளில் போதிக்கும் கல்வி மோசமா யிருக்கிறதென்று காலஞ்சென்ற சாம்பியன் துரை கூறினார். ஆரம்பப் பள்ளிகளில் ஒரு வாத்தியார் பல வகுப்புகளைப் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதிலிருந்து நாம் கொள்ளவேண்டிய முடிவு என்னவென்றால், "ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கல்வி மோசமா யிருப்பதற்குக் காரணம் ஓர் உபாத்தியாயர் பல வகுப்புகளுக்கு ஒரே சமயத்தில் பாடம் கற்பிக்கவேண்டி யிருப்பதுதான்." ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு தனி உபாத்தியாயரை நியமித்துவிட்டால் கல்வி அபிவிருத்தி யடைந்துவிடுமென்று நினைப்பதில் தவறென்ன? ஆகையினால்தான் "பல பள்ளிக்கூடங்களை ஒன்று சேருங்கள். பெரிய பள்ளிக்கூடங்களை ஸ்தாபியுங்கள். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு தனி உபாத்தியாயரை நியமியுங்கள். கல்வி மேன்மேல் அபிவிருத்தியடையும். கல்வியறிவும் பரவும். படித்ததை பள்ளிக்கூடம் விட்ட பிறகு கூடப் பிள்ளைகள் மறக்கமாட்டார்கள்" என்று எங்கும் சொல்லப்படுகிறது.

* R. M. Savur அவர்களால் The South Indian Teacher-ல் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் மொழி பெயர்ப்பு. V. பூவராஹமூர்த்திராவ், M.A., அவர்களால் பாலர் கல்விக்கு மொழிபெயர்க்கப்பட்டது.



ஆரம்பப் பாடசாலைகள் சீர்திருந்துவதற்கு இதுதான் உபாயம் என்று முடிவாக நம்பப்பட்டு வருகிறது என்பற்கு ஆதாரம் வேண்டுமானால் பின்வரும் அபிப்பிராயத்தை வாசியுங்கள். அதை 'ஹிந்து' பத்திரிகையின் கல்வி அனுபந்தத்தில் ஒரு 'கல்வியாளர்' எழுதியுள்ளார். "கல்வி அபிவிருத்தியை விரும்பும் ஜனங்களில் பெரும்பாலார் தற்காலம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் கல்வி பிரயோசனமற் றிருப்பதற்குக் காரணம் ஒரு உபாத்தியாயர் பல வகுப்புகளை ஒரே சமயத்தில் பார்த்துக் கொள்ளவேண்டியிருப்பதே என்று நம்புகின்றனர். ஆரம்பக்கல்வி மேம்பாடடைய பெரிய முட்டுக்கட்டையாயிருப்பது ஆரம்பாசிரியர்கள் கல்வியறிவில்லாதவர்களாக இருப்பதே. இத்துடன் ஓர் உபாத்தியாயர் பல வகுப்புகளுக்கு ஒரே காலத்தில் போதிக்கும் ஏற்பாடு ஒரு நாளும் ஆரம்பக் கல்விக்குத் திறனளிக்காது. ஆகையால் இனிமேல் பள்ளிக்கூடங்களில் வகுப்புக்கொரு போதகர் வீதம் ஏற்படுத்த வேண்டியது அத்தியாவசியம்." "ஆரம்பக்கல்வி சீர்திருத்தமடைய வேண்டுமானால் வகுப்புகளைச் சிறியதாக வைத்துக்கொண்டு, வகுப்புக்கொரு போதகரை நியமித்தல் வேண்டும்" என்றார் சாம்பியன் துரை.

**சரியான காரணமா?**

வகுப்புக்கொரு உபாத்தியாயர் கொண்ட பள்ளிக்கூடங்களை இம்மாகாணத்தில் இல்லாமலிருந்தால் இவ்வித முடிவுகளுக்கு ஒருவர் சாதாரணமாக வரலாம். ஆனால் அம்மாதிரி ஆரம்பப்பள்ளிக்கூடங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளும் மோசமாகத்தான் இருக்கின்றன. ஆகையினால் ஆரம்பக்கல்வி மோசமாயிருப்பதற்குக் காரணம் ஓர் உபாத்தியாயர்-பல வகுப்புப்பள்ளிகள் என்று சொல்ல முடியாது. இந்த இரண்டுவிதப் பள்ளிக்கூடங்களின் ஏற்றத்தாழ்வைப் பற்றி யாவரேனும் தகுந்த முறையில் ஆராய்ச்சி செய்திருக்கின்றார்களா? எந்த விஷயங்களை அளந்து ஆராய்ச்சி செய்தனர்? ஆராய்ச்சியின் முடிவு என்ன? புள்ளி விவரங்கள் எங்கே? இவ்வித ஆராய்ச்சி யொன்றும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. உண்மையில் இரண்டுவிதப் பள்ளிக்கூடங்களிலும் கல்வி ஒரே மோசமாகத்தான் இருக்கிறது. பல வகுப்புகளுக்கு ஓர் உபாத்தியாயர் இருக்கும் பள்ளிக்கூடமும், வகுப்புக்கொரு உபாத்தியாயர் உள்ள பள்ளிக்கூடமும் கல்வியறிவு விருத்திசெய்வதில் ஒரே திட்டம்தான். ஒரே உபாத்தியாயர் உள்ள பள்ளியில் நாலைந்து வருஷம் வாசித்து வெளிவரும் பிள்ளைக்குக் கல்வியறிவு ஏற்படுவதில்லை. வகுப்புக்கொரு உபாத்தியாயர் போதிக்கும் பள்ளிக்கூடத்தில் வாசித்த பிள்ளையும் அதே நிலைமையில்தான் இருக்கிறான். ஐந்தாம் வகுப்புவரை வாசித்த பிள்ளைக்கு வாசிக்கத்தெரிவதில்லை. வாசித்ததை மனத்தில் வாங்கிக்கொண்டு புரிந்து கொள்ளும் சக்தியிருப்பதில்லை. நல்ல ஆரம்பப் பாடசாலைகளில் வாசிக்கும் பிள்ளைகள்கூட இதே நிலைமையில்தான் இருக்கின்றனர். பாட புத்தகத்தைத் தலைகீழாக வாசிப்பார்கள்; என்ன வாசித்தோம் என்று அறியமாட்டார்கள். இப்பிள்ளைகள் புதிய புத்தகம்

வாசித்துப் புரிந்துகொள்ள முடியாது. கடைசியில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகத்தான் இருக்கின்றனர். அப்படி யிருக்கும்போது கற்ற கல்வியை பள்ளிகூடம் விட்டுச் சில காலத்திற்குள் மறந்து விடுகின்றார்கள் என்று சொன்னால் எப்படிப் பொருந்தும். கற்றதை மறந்து விடுகிறார்கள் என்பது பெரிய பொய். ஒன்றும் கற்காதபோது எதை மறப்பது! பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வரையில் படித்தும் படிக்கத்தெரியாதவர்களாக ஏன் இருக்கிறார்கள் என்பதற்குக் காரணமாக இந்தப் பெரிய பொய்யைக் கற்பித்திருக்கின்றனர்.

## எல்லாப் பள்ளிக்கூடங்களும் ஒரே மாதிரிதான்!

ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் நிலைமையை நன்றாக அறிந்தவர் எவரும் பிள்ளைகள் உண்மையில் அப்பள்ளிக்கூடங்களில் கல்விகற்கிறார்கள் என்ற முடிவுக்கு வரமாட்டார். பல வகுப்புகளுக்கு ஓர் உபாத்தியாயர் இருந்தால் கல்வி கற்பிப்பது முடியாத காரியம். ஆகையால் பிள்ளைகள் கல்வி பெறுவதில்லை. ஆனால் நல்ல பள்ளிக்கூடங்கள் என்று கருதப்படும் ஒரு-வகுப்பு-ஓர்-உபாத்தியாயர் பள்ளிக்கூடங்களிலும் பிள்ளைகள் கற்பதில்லையே. அதனால் உபாத்தியாயர் போதிப்பதில்லை என்று நான் சொல்லவில்லையே. பிள்ளைகள் கற்கும் அளவு தான் போதனாமுறையின் திறமை என்று கொள்ளவேண்டும். பிள்ளைகளின் கல்வியறிவு விருத்தியாகாமல் போனால் எம்முறையில் போதித்துத்தான் என்ன பயன்? உபாத்தியாயர் தொண்டைத் தண்ணீர் வற்றப் போதிப்பதுதான் மிச்சம். பிள்ளைகளுக்குச் சரியான கல்வி கற்கும் வழக்கம் உண்டாகாது.

## வாசிக்குந் திறமை

சரியாகக் கல்வி கற்கப் போதிய சௌகரியங்கள் எந்த ஆரம்பப் பாடசாலையிலாவது இருக்கின்றனவா என்று போதனாமுறைகளைப்பற்றிக் எழுதுமுன் ஆராய்ச்சி செய்தல் நலம். விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி விளங்கவைப்பதற்காக வாசித்தல் என்ற விஷயத்தை மாத்திரம் எடுத்துக் கொள்ளுவோம். வாசித்தில் சுலபமான வேலையன்று. அச்சடித்த எழுத்துக்களை ஒலியாகச் செய்வது மட்டில் வாசித்தல் அல்ல. வாசிக்கும் விஷயத்தின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளவும், வேண்டிய விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளவும், வேண்டியபோது அவைகளை உபயோகிக்கவும் திறமை உண்டாக்கிக் கொள்ளுவதுதான் வாசிப்பின் முக்கியமான கருத்து. கிராமவாசிகளுக்கு இவ்விதமாக வாசிக்குந்திறமைதான் அவசியம் வேண்டியிருக்கிறது. வாசிப்பதற்கு நல்ல திறமைபெற வழி என்ன? "புத்தகங்கள் இருப்பதுதான்" என்று எல்லோரும் சொல்லுவார்கள். புத்தகங்கள் இல்லாமல் பிள்ளைகள் வாசிக்கும் பயிற்சி யடைய முடியுமா? வாசிக்கவேண்டும் என்ற ஆசை நல்ல புத்தகங்களிருந்தால்தான் உண்டாகுமல்லவா? நமது ஆரம்பப் பாடசாலைகளில் புத்தகங்கள் இருக்கின்றனவா? கிடையவே கிடையாது. பாட புத்தகங்களைத் தவிர வேறு புத்தகங்கள்



உள்ள பாடசாலைகளை இதுவரை நான் பார்த்ததில்லை. அநேக பள்ளிக்கூடங்களில் பாட புத்தகங்கள்கூட இருப்பதில்லை. ஒரு புதிய பள்ளிக்கூடத்தை நடத்த அனுமதிக்குமுன் கல்வியிலாகா அதிகாரிகள் கட்டடமிருக்கிறதா? பெஞ்சு மேஜைஇருக்கின்றனவா? படங்கள் உண்டா? என்று விசாரிக்கின்றார்களே யொழிய, புத்தகங்கள் இருக்கின்றனவா என்று விசாரித்ததாக நான் இதுவரையில் கேள்விப்பட்டதில்லை. உதவி பள்ளிக்கூடமாயினும் சரி, லோகல் போர்டு பள்ளிக்கூடமாயினும் சரி, சுமார் 500 ரூபாய்க்குக் கட்டடமும், 75 ரூபாய்க்குப் பெஞ்சு நாற்காலிகளும், 50 ரூபாய்க்குப் படங்களும், சில்லரையாக 25 ரூபாயுமாக மொத்தம் 650 ரூபாய் செலவு செய்தாகவேண்டி யிருக்கிறது. புத்தகத்திற்காகக் காலணா கூடச் செலவு செய்ய வேண்டியதில்லை. பயிரிடும் ஒருவன் தன் பணத்தையெல்லாம் நிலத்தைச் சீர்திருத்துவதற்கும் கிணறு வெட்டுவதற்கும் செலவு செய்துவிட்டு, மாடு, கலப்பை, எரு, விதை முதலியவைகளில் பணம் செலவழிக்கா விட்டால் அவன் என்ன பயிர் செய்வான்!

## சில புள்ளிகள்

எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்ளுவதற்கு ஒவ்வொரு பிள்ளையும் ஒரு கற்பலகையும் பாடபுத்தகமும் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமல்லவா? பள்ளிக்கூடம் வரும் ஒவ்வொரு பிள்ளையும் இவைகளை வைத்துக் கொண்டிருக்கிறானா? எவ்வளவு மாதங்கள் கழித்துப் புத்தகம் வாங்குகிறான் என்று நிச்சயமாகச் சொல்லமுடியுமா? எவரேனும் இவ் விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கின்றனரா? அடுத்த பக்கத்தில் உள்ள புள்ளிகள் சில கிராமப் பள்ளிக்கூடங்களில் உள்ள நிலைமையை விளக்கும்.

இப் புள்ளி விவரங்கள் இங்கும் அங்குமாகப் பல பள்ளிக்கூடங்களிலிருந்து ஜனவரிமாதத்தில் தொகுக்கப்பட்டன. ஆகையால் ஒவ்வொரு பிள்ளையும் சராசரி ஐந்து மாதங்களாக எழுதப்படிக்கப் போதிய கருவிகளின்றி இருந்ததாகக் கொள்ளலாம். இப் பள்ளிக்கூடங்களெல்லாம் புத்தகக்கடை இருக்கக்கூடிய ஒரு பட்டணத்திற்குச் சுமார் ஐந்து மைல் வட்டாரத்தில் இருக்கின்றன. வாரமொருமுறை அப்பட்டணத்தில் கூடுகிற சந்தைக்குப் பிள்ளைகளின் பெற்றோர் போகின்றனர். இப்பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் ஸ்திதி இப்படியிருந்தால் பட்டண வாசங்களுக்கு 20, 30 மைல் தூரத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகளின் ஸ்திதி எப்படி யிருக்குமென்று சொல்ல வேண்டுமோ? ஒரு நாள் சென்னை நகரில் பெரிய ஆரம்பப் பள்ளிக்கூடமொன்றைப் பார்வையிட்டபோது முதல் வகுப்புப் பிள்ளைகளில் மூன்று பேருக்கு ஒருவர் வீதம் பாடபுத்தகம் பார்த்து அறியார் என்று கண்டேன். அப்போது பள்ளிக்கூடம் ஆரம்பித்து இரண்டு மாதம் ஆயிருந்தது. இந்தக் குறையைப்பற்றி ஒருவரும் யோசிப்பதே கிடையாது. இதிலிருந்து தெரிவதென்ன வென்றால் புத்தகமும் பலகையும் இல்லாதிருப்பது அவ்வளவு பெரிய குறையல்லவென்று பொதுவாக எண்ணப்படுகிறது என்பதுதான். ஆனால் ஆரம்பக் கல்வி

சீர்கெட்டிருப்பதற்குக் காரணம் புத்தகம் முதலியன இல்லாமலிருப்பது தான் என்பது என் அபிப்பிராயம். ஆரம்பக் கல்வி மேம்பாடடைய இக்குறையை அவசியம் நிவர்த்திக்க வேண்டும்.

| பள்ளிக்கூட நெம்பர் | புஸ்தகம் இல்லாத பாலர்கள் | | | | பலகை இல்லாத பாலர்கள் | | | | பலகையும் புஸ்தகமும் இல்லாத பாலர்கள் | | | | ஷராவும் மொத்த பிள்ளைகளும் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 4-ம் வகுப்பு | 3-ம் வகுப்பு | 2-ம் வகுப்பு | 1-ம் வகுப்பு | 4-ம் வகுப்பு | 3-ம் வகுப்பு | 2-ம் வகுப்பு | 1-ம் வகுப்பு | 4-ம் வகுப்பு | 3-ம் வகுப்பு | 2-ம் வகுப்பு | 1-ம் வகுப்பு | | |
| 1 | 3/6 | 1/4 | 3/9 | 0/32 | 3/6 | 2/4 | 4/9 | 0/32 | 0/6 | 0/4 | 2/9 | 24/32 | 51 | 1 உபாத்தியாயர் |
| 2 | 0/5 | 0/8 | 0/8 | 0/30 | 1/5 | 0/8 | 1/8 | 0/30 | 0/5 | 0/8 | 0/8 | 4/30 | 51 | 1 ,, |
| 3 | 3/3 | 7/7 | 0/10 | 7/36 | ./3 | ./7 | 2/10 | 5/36 | . | . | . | 10/36 | 56 | 2 ,, |
| 4 | . | . | . | . | . | . | . | . | . | . | . | 14/73 | 97 | 2 ,, |
| 5 | 2/7 | 6/9 | 6/13 | 0/35 | 2/7 | 7/9 | 5/13 | ./35 | 2/7 | 3/9 | 4/13 | 28/35 | 64 | 2 ,, |
| 6 | 0/4 | 2/8 | 4/8 | 24/44 | . | 1/8 | . | 25/44 | . | . | . | 25/44 | 64 | 1 ,, |
| 7 | 5/11 | 2/6 | 4/20 | 20/41 | 3/11 | 3/6 | 4/20 | 10/41 | . | . | . | 20/41 | 78 | 2 ,, |

### ஓர் உபாத்தியாயர் ஒரு வகுப்பு, ஓர் உபத்தியாயர் பல வகுப்பு : இரண்டிற்கும் வித்தியாசம் உண்டா ?

உண்டு. வகுப்புக்கு ஓர் உபாத்தியாயர் இருந்து, வகுப்பில் சமதிறன் உள்ள பிள்ளைகளும் இருந்துவிட்டால் கல்விப் பயிற்சி மேம்பாடு அடையும் என்பதற்குச் சந்தேகமில்லை. சமதிறன் உள்ள வகுப்பில் பிள்ளைகள் எல்லாம் கல்வி கற்பதிலும், கிரஹிப்பதிலும் சமசக்திவாய்ந்தவரெனக் கொண்டால், சமதிறன் உள்ள வகுப்பு ஏற்படுவது கடினம். அவ்வித வகுப்பை, அதிலும் கிராமப் பள்ளிகளில், நிருவச்செய்வது சாத்தியமாயின் நன்மையே பயக்கும். ஆனால் ஒரு விஷயம். இவ்விதச் சமதிறன் கொண்ட வகுப்பு ஏற்படுத்த முடியுமா ? கல்வியில் முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளின் அனுபவத்திலிருந்து கல்வி முறை திறம்படவும், கல்வி அதிகப்படவும் இவ்விதச் சமதிறனுள்ள வகுப்புகள்தான் அவசியம் என்று கருத முடியுமா ? இக் கேள்விகளுக்கு விடை " இல்லை, முடியாது " என்றுதான் சொல்லவேண்டும். ஆகையால் சமதிறனுள்ள வகுப்பின் அவசியத்தைப் பற்றி ஆராய்வதைவிட வேறு பல முறைகளைப்பற்றி ஆராய்வது நலம் என்று தோன்றுகிறது.



### சமதிறன் கிட்டுவது அரிது.

பள்ளிக்கூடத்தில் சமதிறனுள்ள பிள்ளைகளை ஒருவகுப்பாக வைத்துக் கொள்ளலாம் என்று நினைப்பது தவறு. அப்படிப்பட்ட வகுப்பில் எல்லாப் பிள்ளைகளும் ஒரே அளவாகக் கல்வித்திறமை யடைவார்கள் என்றுநினைப்பது அதிலும் பெரிய தவறு. நாளடைவில் பிள்ளைகளின் திறமையில் வித்தியாசம் காணப்படும். நமது செகண்டரி ஸ்கூல்களில்கூடச் சமதிறமை வகுப்பு ஏற்படுத்தி நடத்த முடியாது. பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளுவதில் அதிக ஜாக்கிரதையிருக்கலாம். சரிவரப் பிள்ளைகள் வகுப்புக்குச் செல்லலாம். பிரமோஷன் கண்டிப்பாக இருக்கலாம். ஆனாலும் செகண்டரி பள்ளிகூடங்களில் சமதிறமை அரிதாகிறது. கீழ் வகுப்புப் பிள்ளைகளை மேல் வகுப்பில் உட்காரவைத்தால்கூட அதிக வித்தியாசம் ஏற்படாது. பிள்ளைகளின் திறமையில் அவ்வளவு வித்தியாசம் இருந்து வருகிறது.

இன்னொரு விஷயம். பிள்ளைகளின் அறிவுத்திறனை அடிப்படையாகக் கொண்டல்லவோ சமதிறனுள்ள வகுப்பு அமைக்கவேண்டும். அறிவுத்திறனைக் கண்டுபிடிக்க எவ்வளவோ விஷயங்களை ஆராயவேண்டுமே. ஒவ்வொரு பையனுக்கும் அறிவு எவ்வளவு? வயதுக்குத் தகுந்த அறிவு இருக்கிறதா ? அறிவு அளவின்படி பையனுக்கு என்ன வயது இருக்கலாம்? கல்வியின் அளவுபடி என்ன வயது ? உண்மையில் என்ன வயது ? இவைகளை நுணுக்கமாக ஆராய்ச்சிசெய்துதான் சமதிறனுள்ள வகுப்புக்களை அமைக்க முடியும்.

மேலும் ஒரு வகுப்பில் பிள்ளைகள் மிகவும் சொற்பமாக இருந்தால் அதை எப்படிச் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கமுடியும். ஓர் உபாத்தியாயருக்கு இவ்வளவு பிள்ளைகள் உள்ள வகுப்பு என்று கணக்குண்டோ இல்லையோ ? ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் முதல் வகுப்பில் 5 வயதுக்கு மேற்பட்ட பிள்ளை சேர்ந்துக் கொண்டேயிருப்பார். அப்பிள்ளைகளின் அறிவுத்திறன் 20 முதல் 180 வரையிருக்கலாம். நான் ஆராய்ச்சிசெய்த சுமார் 200 பிள்ளைகளில் சிலர் அறிவுத்திறன்படி மக்குகளாகத்தான் இருந்தனர். ஆகையால் சமதிறனுள்ள வகுப்பு அமைவது கடினம். பிள்ளைகளை வேண்டுமானால் புத்திசாலிகள், சாதாரணம், மக்குகள் என்று பகுத்து வெவ்வேறு உபாத்தியாயரிடம் விடலாம். இவ்வழி சிறு பள்ளிக்கூடங்ளில் பின்பற்ற இயலாது. செல்வமும் கல்வியில் ஆர்வமும் மிக்க அமெரிக்காவில்கூட இவ்விதம் பிரிப்பதில் லாபமில்லை என்று எண்ணுகின்றனர். சமதிறனுள்ள வகுப்புகள் வைத்துக்கொண்டால்கூட சீக்கிரமே திறமை

யில் அதிக வித்தியாசம் உண்டாகி விடுகின்றது. ஆதலால் இம்முறைச் பயனற்றது என்பதில் சந்தேகம் இல்லை.

அறிவின்படி வயது என்ன என்று கண்டுபிடித்துக் கல்விமுறையைச் சீர்படுத்தினால் நல்லதுதான். ஆனால் அறிவு என்பது ஒரு பெரிய விஷயம். ஒரு வழியில் திறமை குறைந்திருந்தால் மற்றும் பல வழிகளில் திறமை மிகைபட்டிருக்கலாம். 'மக்கு, மடம்' என்று நீக்கப்பட்டிருக்கும் பிள்ளைகள்கூடச் சில விஷயங்களில் திறமை காட்டுகின்றனர். கல்வி கற்பதற்கு அறிவைத்தவிர மற்ற சில குண விசேஷங்களும் வேண்டியிருக்கின்றன. ஆசை, மனோதிடம், மனப்பான்மை முதலியன கல்விகற்பதற்கு வேண்டிய ஆர்வத்தை உண்டாக்குகின்றன. கண், காது முதலிய அவயவங்களிலுள்ள குறைகளும் திறமையில் வித்தியாசம் உண்டாக்கலாம்.

மேற்சொன்னவை குறைபாடுகளே சமதிறனுள்ள வகுப்புகள் நடக்காத காரியம் என்று தெரிவிக்கின்றன. நமது ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இன்னும் பல குறைகள் உண்டு. அவையாவன :

1. பிள்ளைகள் வருஷமுழுவதும் அப்போதைக்கப்போது வந்து சேருவார்கள்.
2. சரிவரப் பள்ளிக்கூடத்திற்கு வரமாட்டார்கள்.
3. பாடம் ஆரம்பித்த பிறகுகூடப் பல மாதங்களாகப் புத்தகமும் பலகையும் இல்லாமல் இருப்பார்கள்.
4. ஆரம்பப் பாடசாலைகளின் பிள்ளைகளின் அறிவுத்திறனைப்பற்றி ஆராய்ச்சி செய்வது இயலாத காரியம்.
5. கல்வி இலாகா அதிகாரிகள் இவ்வித ஆராய்ச்சி செய்யும் ஆற்றல் உள்ளவர்களாக இருப்பதில்லை.

இப்படியிருக்கும்போது சமதிறமையுள்ள வகுப்புகளைப்பற்றி யோசிப்பது அறிவீனம்.

மேலே சொல்லப்பட்ட குறைகளை இந்நாட்டில் கல்வியாளர் கவனிப்பதாகத் தெரியவில்லை. இன்னும் பல குறைபாடுகளைப் பேனாவின் நுனியினால், சட்டத்தின் உதவியினால் நீக்கிவிட யோசிக்கின்றனர். உதாரணமாக 'டிப்பி' என்பவர் எழுதியிருப்பதைப் படியுங்கள். எப்பொழுது வேண்டுமானாலும் பிள்ளைகளை அக்ஷராப்பியாசம் செய்து பள்ளிக்கூடத்தில் சேர்க்கலாம் என்று வைத்துக் கொண்டால் ஆரம்பக் கல்வியே மேம்படாது. இவ்விஷயத்தில் கண்டிப்பாய்த்தான் இருக்கவேண்டும். ஜனங்கள் ஒரு சுபதினத்திற்குக் காத்திருந்து பிள்ளைகளுக்கு அக்ஷரப்பியாசம் செய்வார்கள். ஆனால் பிள்ளைகளை வருஷ ஆரம்பத்தில்தான் சேர்த்துக் கொள்ளப்படும் என்று சட்டம் செய்து விட்டால், சுபதினம் எப்படியாவது காலாகாலத்தில் அகப்பட்டுவிடும்".

1622/18



ஆனால் இவ்வித யோசனைகள் எல்லாம் பயனளிக்கப்போவதில்லை. ஆரம்பக் கல்வி முன்னேற்றமடைய எவ்வளவோ முக்கியமான வழிகளிருக்கின்றன.

இன்னும் வெகுகாலம் நமது நாட்டில் பல வகுப்புகளுக்கு ஓர் உபாத்தியாயருள்ள பள்ளிக்கூடங்கள் இருக்கத்தான் வேண்டியிருக்கும். சமதிறமையுள்ள வகுப்புகளை அமைத்துக் கொள்ளுவது சிரமம். அப்படியிருக்க ஆரம்பக்கல்வி எப்படித்தான் மேம்படுவது ?

செல்வம் மிகுந்த அமெரிக்காவில்கூட ஓர்-உபாத்தியாயர்-பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவ்விதப் பள்ளிக்கூடங்களுக்கும் வகுப்புக்கு ஓர் உபாத்தியார் உள்ள பள்ளிக்கூடங்களுக்கும் அதிக வித்தியாசமிருப்பதாகத் தெரியவில்லை. அந்நாட்டில் எப்படி ஆரம்பக் கல்வி செவ்வனே நடக்கிறது என்றும் ஆராய வேண்டுமல்லவா ? ஹாயி டோர்மன் என்பவர் சொல்லுகிறபடி, பலதிறனுள்ள பிள்ளைகளுக்குக் கல்விபோதிக்க இரண்டு முறைகளைக் கையாளலாம் (1) தனிமுறையில் பயிற்சி கொடுப்பது (2) சமதிறமையுள்ள வகுப்புக்களை வைத்துக்கொண்டு போதிப்பது. இந்த இரண்டு முறைகளைத்தவிர, வேறு முறைகள் கிடையாது.

சமதிறமை வகுப்புக்கள் கிடைப்பது சிரமமென்று முன்னேகூறப்பட்டது. பெரிய செகண்டரி ஸ்கூல்களில் நான் சமதிறமையை உத்தேசித்துப் பிள்ளைகளைப் பிரித்தபோது, ஒரு விஷயத்தை அறிந்தேன். பிள்ளைகளைக் கெட்டிக்காரர், சாதாரணம், மக்குகள் என்று பொதுவாகப் பிரிக்கலாமேயொழியச் சமதிறன் கிடைக்காது. அப்படிப் பிரித்த பிறகுகூடச் சில மாதங்களில், ஒவ்வொரு பிரிவையும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். கெட்டிக்காரப் பிள்ளைகள் மற்றவர்களைவிட மூன்று மாதம் கல்வியில் முன் நிற்கின்றனர். கெட்டிக்காரப் பிள்ளைகளுக்குக் கற்பது சுலபம் ; மறப்பது கஷ்டம் ; மக்குப் பிள்ளைகளுக்கோ, கற்பது கடினம் ; கற்றதை மறப்பது மிக்க சுலபமாக இருக்கிறது.

## தனி முறை

மேல் நாடுகளில் போதனைமுறை திறம்பட்டு நாளுக்கு நாள் கல்வி மேம்பாடடைவதை நோக்கும்போது பிள்ளைகளுக்குத் தனி முறையில் சொல்லிக் கொடுக்கவேண்டுமே யொழிய, மற்ற விஷயங்களை பொருட்படுத்த வேண்டியதில்லை யென்று எனக்குத் தோன்றுகிறது. டால்டன் முறை நம் நாட்டிற்குத் தெரிந்ததுதானே ? அதில் என்ன விசேஷம். தனிமுறையில் போதனை ; வகுப்பில் பிள்ளைகள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். இம்மாதிரியே ப்ரோஜக்ட் முறையும் ; குழந்தையையே முக்கியமெனக் கொண்டு நடத்தப்படும் நவீன பள்ளிக்கூடங்கள்கூட இம்மாதிரியே. மாண்டிஸோரி முறையும் அப்படியே.

மனிதன் மற்ற உயிர்களைவிடச் சிறந்து விளங்குவதற்குக் காரணம் அவன் மற்றவர்களுடைய அனுபவத்திலிருந்து விஷயங்களைக் கற்று அறிவுடையவனாயிருப்பதென்பதே. கல்வி விஷயத்தில் சிறப்புற்றிருக்கும் மேல் நாட்டார் சமதிறமையைக் கையாண்டு அதன் குறைகளைக்கண்டு விட்டு விட்டனர். அவர்களுடைய அனுபவத்திலிருந்து நம் நாட்டார் லாபமடைதல்தான் சரியானவழியாகும். வகுப்பில் பிள்ளைகள் எத்திறத்தினரேனும் தனிமுறை பயனளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. பயனளிக்காத பல முறைகளைக் கையாளுவதைவிட நிச்சயமாகப் பலன்தரும் முறைகளை அப்பியசிப்பது நன்றல்லவா? தனி முறைதான் உண்மையாகக் கல்வி விருத்திக்குக் காரணம் என்று தெரிந்திருக்கிறது. நவீன முறைகளில் பலவற்றை மேல் நாடுகளில் கையாண்டு வருகின்றனர். டால்டன் முறை; குழந்தைகளையே இலக்காகக்கொண்டு கல்வி போதிக்கும் முறை; ப்ரோஜெக்ட் முறை; லாஸ் ஆன்ஜலஸ் அட்ஜஸ்ட்மென்ட் முறை; மாண்டிஸோரி முறை; ஆங்கில நாட்டு ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பின்பற்றும் தனி முறை. இவைகளில் எல்லாம் பிள்ளைகளுக்குத் தகுந்தவிதம் தனித் தனியே கல்விகற்றுக்கொடுக்கப் போதிய ஏற்பாடுகள்தான் முக்கியமெனப் கருதப்படுகின்றன. இம்முறையைப் பின்பற்றுவதற்கு, பிள்ளைகளின் திறன் சமமாக இருக்க வேண்டியதேயில்லை. ஓர் உபாத்தியாயருக்கு இவ்வளவு பிள்ளைகள்தான் இருக்கலாம் என்ற நியதிவேண்டும். சாதாரணமாக ஓர் உபாத்தியாயருக்கு 30 பிள்ளைகள் இருந்தால் கல்வி புகட்டுவதில் சிரமமிராது. நான் நடத்திவரும் தனிமுறையில் சுமார் 35 பிள்ளைகளுக்கு ஓர் உபாத்தியாயர் பாடம் கற்பிக்கலாம். அநேகமாகக் கிராமங்களிலிருக்கும் நமது ஆரம்பப் பாடசாலைகளில்கூட இந்தக் கணக்கின் விதம்தான் உபாத்தியாயர்களும் பிள்ளைகளும் இருக்கின்றார்கள்.

ஆரம்பப் பாடசாலைகளில் அடியிற் கண்ட சௌகரியங்கள் இருக்க வேண்டும்.

1. பிள்ளைகள் எப்போது வந்தாலும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பள்ளிக்கூடம் நடக்காது.

2. ஆகையினால் பிரமோஷன் அப்போதைக்கப்போது செய்ய வேண்டும். இல்லாவிட்டால் பிள்ளைகள் அநாவசியமாக ஒரே வகுப்பில் நீண்ட காலம் இருக்க நேரிடும்.

2, முதல் வகுப்பில் உள்ள பிள்ளைகளுக்குள் திறமையிலும், வயதிலும், கற்கும் சக்தியிலும் வித்தியாசம் காணப்படும்.

3. பிள்ளைகள் தினந்தோறும் பள்ளிக்கூடங்களுக்கு வருவதில்லையாகையால், சிலர் சில பாடங்களை கற்றுக்கொள்ளாமலே பின் தங்கிவிடுவர். அவர்களுக்குக் கற்குந்திறமையும் குறைந்து விடும். அதனால் அவ்வகுப்பிலேயே மற்றொரு வருஷம் இருக்கநேரிடலாம். சமதிறனுள்ள



வகுப்புடன் பாடம் ஆரம்பித்தால் சிறிது நாட்களில் திறமையில் வித்தியாசம் காணப்படும்.

5. (a) பாடம் ஆரம்பித்துப் பல மாதங்களான போதிலும் பாடப் புத்தகங்கள் இல்லாமல் பல பிள்ளைகள் இருப்பார்கள்.

(b) தமிழ்ப்பாட புஸ்தகம் மிகவும் சிறியது. வருஷம் முழுவதும் படிக்கப் போதிய விஷயங்கள் இருப்பதில்லை. புத்தகத்தை படிக்கச் சொல்லிக் கொடுக்க வசதியும் இருப்பதில்லை. நான் பின் பற்றிவரும் தனி முறையில் இதற்கெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

6. ஆரம்பப் பாடசாலைகளில் இருக்கும் உபாத்தியாயர்கள், அறிவிலும் திறனிலும் ஆற்றலிலும் மட்டமானவர். சொல்லுவதைச் செய்யும் திறமை கூட இல்லாதவர். செகண்டரிஸ்கூல்களில் அறிவுத்திறன் 85க்கு குறைந்த பிள்ளைகளே மேல் வகுப்புக்கு போவதில்லை. சோழவந்தான், பசுமலை முதலிய இடங்களில் நான் பெற்ற அனுபவத்திலிருந்து அறிவுத் திறன் 90க்கு குறைந்த பிள்ளைகள் 4ம் பாரத்தில் படிக்கவேண்டிய விஷயங்களைத் திருப்தியாகக் கற்க முடியாதென்று சொல்லலாம். அநேகமாக ஆரம்பப்பாடசாலைக்கு உபாத்தியாயர்களாக வருபவர் இம்மாதிரிப் பிள்ளைகள்தான். மாதிரி அட்டவணை வைத்துக்கொண்டு சாதாரணமாகத் தினசரிப் பாட முறைகளை எழுதக்கூட அவர்களால் முடிவதில்லை என்பது என் அனுபவம். ஆகையினால் நாங்களே எல்லாப் பாட முறைகளையும் தயார் செய்து அனுப்பிவருகிறோம். அப்படித் தயார்செய்து கையில் கொடுத்துவிட்டால் தான் சொன்னபடி பாடத்தை நடத்துகின்றனர்.

ஆரம்பப் பாடசாலையில் கற்பிக்க வேண்டிய விஷயங்களைப்பற்றி முன் எழுதிய கட்டுரையில் "தாழ்ந்த லக்ஷ்யம் கொள். அதிக சித்தி பெறலாம்" என்று உபாத்தியாயர்களுக்குச் சொன்னேன். இப்போது "போதனா முறையைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். ஆரம்பக்கல்விச் சீர் கேட்டிருப்பதற்குக் காரணம் ஒரு வாத்தியார் பல வகுப்புக்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் நிலைமையல்ல. தனிமுறையில் ஒரு வாத்தியாரே பல வகுப்புக்களுக்குத் திறமையுடன் கல்வி போதித்து வரலாம்" என்பதே.

# பெற்றோர் ஆசிரியரோடு ஒத்துழைத்தல்

வெகு நீண்ட காலமாகப் பள்ளியில் ஏதேனும் தவறு உண்டாயின் அதன் காரணத்தை யறிய உபாத்தியாயர் தம்மையே ஆராய்ந்து பார்த்துக் கொள்ளுவதுதான் முறை என்று சொல்லுவது வழக்கம். அவ்வாறு எண்ணுவது நியாயமாகுமென்பது பல அறிஞரின் கொள்கையாம். ஆனால், இப்பொழுதோவெனில் உலகில் எவ்வகையான தவறுக்கும் உபாத்தியாயர்களே காரணமாவார்கள் என்னும் அபிப்பிராயம் பரவி வந்துள்ளது போலும்.

பிள்ளைகள் பெரியோருக்கும், சட்டதிட்டங்களுக்கும் அடங்கி நடப்பதில்லை; அவர்களிடத்துப் போதுமான ஊக்கம், உற்சாகம், விடாமுயற்சி முதலி சிறந்த குணங்கள் கிடையா; அவர்கள் விஷயங்களை ஆய்ந்தோய்ந்து பார்த்து அவற்றின் நியாய நுட்பங்களைத் தாமாகவே தெரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெறாது பிறருடைய கருத்துக்களையே தங்களுடையனவாகக் கொண்டு ஒழுகுகிறார்கள்—என்பன போன்ற குறைகளை அவர்களிடத்துக் காணும்போதெல்லாம், சிலர் அவை அனைத்திற்கும் உபாத்தியாயர்களே காரணமாவாகள் எனச் சாதிக்கிறார்கள். தங்கள் பொறுப்புக்களை முற்றும் அறியாமலும், அல்லது அறிந்தும் அவற்றை உணராமலும் இங்ஙனம் சிலர் கூறுவது எங்ஙனம் என்பதை ஆராய்வது நியாயமாகும் எனினும், இப்பொழுது எனது நோக்கம் அஃதல்ல.

சிறுவர் சிறுமிகள் கற்பது பள்ளியில் மட்டுமல்ல; பள்ளிக்கூடத்து ஆசிரியர்களிட மிருந்துமாத்திரமுமல்ல. அவர்கள் பள்ளிக்குப் புறம்பேயுள்ள பல விடங்களிலும், உபாத்தியாயர்களல்லாத மற்றையோர்களிட மிருந்தும் பலவற்றைக்கற்றுக் கொள்ளுகிறார்கள் என்பது யாவருக்கும் ஒப்ப முடிந்த விஷயமாகும்.

குழந்தைகளுக்கு நல்லொழுக்கமும், நற்குண நற்செய்கைகளும் முதன் முதல் உண்டாவதும்; பெருகி வளர்வதும் வீட்டிலேயாகும். தவறாக நடக்கும் குழந்தைகளை அவர்களின் தாய் தந்தையரும், உடன் பிறந்தோரும் கண்டித்து ஒழுங்குபடுத்துவதை யொத்து ஆசிரியர்களாவது பிறராவது செய்ய முடியாதென்பது திண்ணம். அன்றியும், அன்பு, பக்தி, கீழ்ப்படிதல், சுயநலம் பாராட்டாமை, பிறருக்கு உதவுதல் போன்ற குணங்கள் சிறுவர் சிறுமிகளுக்கு வீட்டில் தோன்றாதவரையில், அவற்றை உபாத்தியாயர்கள் பள்ளியில் புதிதாக உண்டாக்கவாவது, புகட்டவாவது சிறிதும் இயலாது.

சிறு குழந்தைகள் தந்தை அல்லது தாய் உதவிய தின்பண்டங்களடங்கியப் பொட்டணங்களைத் தங்களுடைய அண்ணன் தம்பிகளுடனும், அக்காள் தங்கைகளுடனும் பகிர்ந்து உண்ணுவதற்காகப் பத்திரமாக எடுத்துச் செல்லுவதைக் கண்டு யான் பல காலும் மகிழ்ச்சி கொண் ள்ளேன். இவ்வகை நற்பழக்கம் பொருந்தப் பெற்றுள்ள குழந்தைகளுக்குச் சுயநலம் கருதாமை என்னும் உயர்ந்த குணம் இலகுவில் உண்டாகும் என்பது சொல்லவும் வேண்டுமோ? வீட்டிலுள்ள சகோதரி சகோதரர்களுக்காகத் தின்பண்டத்தில் தனக்குள்ள பேரவாவை யடக்கி அதை யவர்களுடன் பகிர்ந்துண்ணும் அச்சிறுவன், வீட்டிற்குப் புறம்பே உலகின்கணுள்ள சகோதர சகோதரிகளின் நன்மையை நாடிச் சுயநலத்தை நீத்துத் தொண்டிழைப்பான் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அங்ஙனமின்றிப் பக்ஷணப் பொட்டணத்தைக் கையில் வாங்கிக்கொண்டதும் அதில் தூ தூ என எச்சிலைத் துப்பி இது எச்சில் வேறு எவருக்கும் உதவாது என்று தனது உடன் பிறந்தோரை வஞ்சித்து அதைத் தானே முழுவதும் உண்ணும் ஒரு சிறுவன் உபாத்தியாயர் எவ்வளவு முயன்று போதித்தபோதிலும் பிறர்நலம் பாராட்டுதல் என்னும் குணத்தின் சிறப்பை அறிவானோ? நிச்சயமாக அறியான். உபாத்தியாயரின் வீணா முயற்சி சிறிதும் பயன் பெறாது. செவிடன் காதில் சங்கு ஊதினது போலாகும். அவ்வாறே இன்னும் பல சிறந்த குணங்களும் வீட்டில் தோன்றாவிடின் அவற்றைப் பள்ளியில் தோற்றுவிக்க இயலாது. எனவே, பல சிறந்த நற்குணங்களும், நல்லொழுக்கங்களும் சிறுவர் சிறுமிகளுக்கு முதலில் வீட்டில் தோன்றிப் பின்னர் வளருகின்றனவாகும். அவற்றை உபாத்தியாயர்கள் பெருக்கி வளர்க்கலாமே யன்றிப் புதிதாக உண்டாக்க முடியாது.

வீட்டில் பொய்பேசவும், கெட்டவார்த்தைகளைச் சொல்லவும் பழகுகின்ற ஒரு சிறுவனை மெய்யனாகவும், இன்சொற்களைப் பேசுபவனாகவும் செய்வது என்பது முடியாத காரியம் எனவே கருதற்பாலதாகும். அம்முயற்சி கறுப்பு நாயை வெள்ளை நாயாக்க முயல்வதை யொக்குமன்றோ? "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்,' 'தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை" என்னும் ஆன்றோர் வாக்குக்கள் பலரும் அறிந்தனவேயாம்.

நற்பழக்கங்களும், நல்லொழுக்கங்களும் பெரியோர் கைக்கொண்டொழுகப் பிள்ளைகள் அவர்களைப் பின்பற்றி நடந்தொழுக அவர்களுக்கும் அவை உண்டாகின்றன. குழந்தைகளுக்கு நடத்தல் என்பது இயற்கையான குணம். அங்ஙனமின்றி உபதேச மாத்திரத்தால் அவை உண்டாகமாட்டா என்பது திண்ணம்.

கல்விச்சாலைகள் இப்பொழுது அமைந்துள்ள வகையில் பிள்ளைகள் உபாத்தியாயரைப் பின் பற்றி நடப்பது என்பது முடியாது. அது குருகுலவாசத்திலேதான் அமையும். இக்காலத்தில் குருகுலவாசம் செய்வது இயலாது. பிள்ளைகளுக்கெனச் சில இடங்களில் போஜன சாலைகளும், விடுதிகளும் பள்ளிக்கூடங்களை யடுத்து அமைக்கப்பட்டு உபாத்தியாயர்களின் மேற்பார்வையில் இருந்து வருகின்றன. இவற்றில் நற்பழக்கங்களும், நல்லொழுக்கங்களும் உண்டாவது கூடும். உற்றுநோக்க, இவ்வமைப்புக்

கள் வீடுபோன்றுள்ளனவேயன்றி வீடுகள் ஆகமாட்டா. இவைகள் வீட்டை யொத்திருக்க வேண்டுமென்னுமே நோக்கத்துடன் அமைக்கப் படுகின்றன எனில் வீட்டின் பெருமை சொல்லாமலே விளங்கும். அதனால் வீட்டில், அதனிலும் முதலாகத் தாய் தந்தையர்களிடமிருந்தும், பின்னர் உடன் பிறந்தவர்களிடமிருந்தும் கற்பனவான பழக்க ஒழுக்கங்களின் பெருமையை எடுத்து வருணித்துக் கூறமுடியாது.

ஆதலினால், பள்ளியில் கல்விகற்பிக்கும் உபாத்தியாயர்களுடன் தாய்தந்தையர் ஒத்து உழைத்தும், ஒருவர் செய்வதற்கும் சொல்வதற்கும் முரணாக மற்றவர்கள் யாதொன்றையும் செய்யாமலும், சொல்லாமலும் ஒருமனப்பட்டு நடந்தும் ஒழுகினாலன்றிச் சிறுவர் சிறுமிகளின் கல்வி பயன் பெறமாட்டாது என்னும் உண்மை வெளியாகின்றது. ஓர் ஏரில் பூட்டப்பட்டுள்ள எருதுகள் ஒற்றுமைப்பட்டு நடந்தாலன்றி உழவன் தொழில் நலமுறுதல்லவா? அவ்வாறே பள்ளியும் வீடும் கலந்து உறவாடி ஒருமனப் பட்டு நடந்தாலல்லாமல் குழந்தைகள் கல்வியினாலாகும் முழுப் பலனையும் பெற்று அனுபவித்தல் முடியாது. அவ்விருதிறத்தாரும் ஒற்றுமைப்பட்டு நடந்து குழந்தைகளின் கல்விப் பெருக்கில் ஈடுபடுமாறு எல்லாம் வல்ல கடவுள் அருள் புரிவாரென வேண்டி நிற்கும்

முப்பது ஆண்டுகள் உபாத்திமைத் தொண்டியற்றிச்
சமீபகாலத்தில் ஓய்வுபெற்ற ஓர் ஆசிரியன்.


பிரைமரி வகுப்பு மாணவர்களுக்குரிய
தமிழ்ப் புஸ்தகங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இளைஞர் தமிழ் வாசகம் | | | | இரண்டாம் பாகம் | 0 | 4 | 0 |
| முதல் வகுப்பு | | | | கிண்டர்கார்டன்பாட்டுக்கள் | 0 | 3 | 0 |
| முதற் பாகம் | 0 | 2 | 0 | | | | |
| இரண்டாம் பாகம் | 0 | 2 | 0 | இலக்கண பாடங்கள் | 0 | 5 | 0 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 3 | 0 | கும்மியும் கோலாட்டமும் | 0 | 5 | 0 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 4 | 0 | | | | |
| நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 | தமிழ் இளைஞர் கையகராதி | 0 | 8 | 0 |
| சிற்றிலக்கணம் | 0 | 3 | 0 | | | | |
| சுகாதார வாசகப் பாடம் | | | | இங்கிலீஷ் புஸ்தகங்கள் | | | |
| முதற் பாகம் | 0 | 4 | 0 | புரொகிரஸிங் பிரைமர் 1 | 0 | 3 | 0 |
| | | | | புரொகிரஸிங் பிரைமர் 2 | 0 | 4 | 0 |

இந்தியன் பப்ளிஷிங் அவுஸ், லிமிடெட்
:: 99. அரண்மனைக்கார வீதி, சென்னை. ::


# பாப்பா மலர்ச்சி

## 1. கல்வியும், பாப்பாவும்

'பாலர் கல்வி' பிறந்தபின், தமிழ் நாட்டுப் பாப்பாவுக்கு நல்ல காலம் என்பதற்கையமில்லை. இது வரையில் தமிழாசிரியர் பாட திட்டங்களைப் பாப்பாவுக்குப் போதித்து வருவதில் மிகக் கவனம் செலுத்தி வந்தனர். பாப்பாவின் மனத்தை மாத்திரமாவது அல்லது தேகத்தை மாத்திரமாவது கவனித்து வரவேண்டும் என்ற காலம் மலையேறிவிட்டது. கல்வியுலகங்களில் இனிப் பாப்பாவின் மலர்ச்சியே முக்கியமான இலட்சியம். இதைத்தேசியவாதி, பெற்றோர், மனோதத்துவ ஆசிரியர், எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அதிகாரிகளும் இதை ஒப்புக்கொள்ளுகிறார்களென்பதில் ஐயமில்லை.

## 2. பாப்பாவும், இயற்கையும்

"பாப்பா" ஒரு பிரம்ம ஸ்வரூபம். அதற்குப் பிதுரார்ஜிதம் உண்டு. பிறப்புரிமை உண்டு. இயற்கைக் குண சம்பத்து உண்டு. சுதந்திர உணர்ச்சியுண்டு. வீட்டிலோ, தெருவிலோ, பள்ளியிலோ, தன் இஷ்டம் போல் நடக்கும் சக்தியுண்டு. தன் உணர்ச்சியைக் காட்டிக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் வலிமையுண்டு. ஆனால்,நல்ல புதுவழி காட்டினால், பாப்பா அப்பாதையில் சென்று, வெற்றியையும், சந்தோஷத்தையும், திருப்தியையும் அடையக்கூடும்.

## 3. பாப்பாவும் "தன் மலர்ச்சியும்."

பாப்பாவின் தன் மலர்ச்சி அற்புதமானது. பிறந்த நேரத்திலேயே அதன் உணர்ச்சி வெளிப்படையாகிறது. அதன் புலன்கள் பக்கத்திலுள்ளவைகளுடன் போராடுகின்றன. தான் ஓர் அணு என்பதை அது பலவிதத்தில் காட்டிக் கொள்கிறது. தனக்கு என்ன தேவையோ அதை ஜாடையால் வெளிப்படுத்துகிறது. பேச ஆரம்பித்தவுடன் அதன் பிடிவாதம் ஓர் தனிச் சம்பத்தாக விளங்குகிறது. அப்பொழுதே அதற்குப் பிடித்தவை எது, பிடிக்காதவை, எது என்று அது காண்பிக்கிறது. மனிதனுக்கு உள்ள தீய, அரிய, பெரிய குணங்கள் பாப்பா இடம் மறைந்து கிடக்கின்றன. அக்குணங்கள் சேர்க்கையால் வெளிப்படுகின்றன:

## 4. பலவிதப் பாப்பாக்கள்

பாப்பாக்கள் பலவிதத்தன. சில குழந்தைகள் சாதுக்கள் சில முரடாக இருக்கின்றன. சில பிஞ்சிலே பழுத்து இருக்கின்றன. வேறு சில துஷ்ட சுபாவமுடையன. இப்படிப் பாப்பாக்களின் வித்தியாசங்களுக்கு, இயற்கை, சேர்க்கை, அனுபவங்கள், ஜனசமூகப் பழக்கங்கள், பரம்பரை, எல்லாம் காரணமாய்இருக்கின்றன. மேலும், நல்ல தேக நிலையை உள்ள பாப்பா நன்றாகச் சுறு சுறுப்பாயிருக்கின்றது. நோயுற்ற பாப்பாவோ முணு முணுக்கும் சுபாவத்தைக் காட்டும்.

## 5. பாப்பாவின் படிப்பு

பாப்பாவின் படிப்பில் முதல் முதல் உணர்ச்சிகள் வளர்கின்றன. பிரியம், அப்பிரியம், சந்தோஷம், துக்கம் என்பதை முதல் முதல் பாப்பாவின் செய்கைகளால் வெளியாகின்றன. அதே காலத்தில் பாப்பா பலவற்றைப் பார்த்தும் கேட்டும், ருசி கண்டும், தொட்டும், உணர்ந்தும் வருகிறது. பண்டங்கள் இருப்பதையும், வித்தியாசப்படுவதையும் நன்கு தெரிந்து கொள்கிறது. புதிய புதிய கனவுகள் பாப்பாவின் மனத்தில் உதிக்கின்றன. பாப்பா இப்போது ஓர் மாய உலகில் மாயமாக வசிக்கின்றது. இந்நிலையில் பாப்பாவால் உண்மை அறிய முடியாது. எனவே, அது சிருஷ்டி செய்யும் நிலையில் இல்லை. இப்போது அது தனக்கு வேண்டியதைச் சேகரித்தும், கண்டதை உடைத்தும் வருகின்றது. பாப்பாவிற்கு லாபம் நஷ்டம் என்றால் என்ன என்று இப்போது தெரியாது. பாப்பா எந்தக் காரியத்தையும் விட்டு விட்டுத் தான் செய்யும். அதன் காலம், வேலை, அறிவு, ஆர்வம், ஆசை எல்லாம் விளையாட்டு மூலம் தான் காணப்படும். இந்நிலையில் பாப்பாவின் லீலைகள் தான் அதன் வேலை. பாப்பா எப்போதும் ஓடி விளையாடும். அது ஓய்ந்திருக்காது. அது பலருடன் கூடி விளையாடும். அப்போது அது மன மகிழும். இரக்கப்படும், தோழமை கொள்ளும், சண்டை போடும். பின்னர் மறந்துவிடும். விளையாட்டாகவே சொன்னால் எல்லாக் காரியங்களையும் யார் சொன்னாலும் செய்யும்.

## 6. பாப்பாவும் உலகமும்

வயது ஆக ஆகப் பாப்பா தனி வழியே செல்ல முயலுகிறது. பார்த்ததெல்லாவற்றைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய விரும்புகிறது. இக்காலம், ஓடும் பூச்சி பாம்புகளைப் பிடிக்கும் காலம்; தைரியம் வளரும் காலம். உணர்ச்சியும், செயலும் வலுக்கும் காலம். விருப்பம் வெறுப்பும் வளரும் காலம். இது மாய உலகிலிருந்து முரட்டு உலகிற்கு வரும் காலம். இப்போதுதான் பாப்பாவிற்கு விளையாட்டு எதுவென்றும், வேலை எதுவென்றும் தெரியக்கூடும். பாப்பா இப்போது சில உணர்ச்சிகளையும்,



எண்ணங்களையும், செயல்களையும் பகிரங்கமாக வெளிப்படுத்துவதில்லை. இப்போது பாப்பா உலக மாயம் என்ன என்று கண்டு, தனக்கும் உலகிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்து போராடும் காலம் வந்துவிட்டது. புதிய குழந்தைகள், உறவினர், ஆசிரியர், ஜனங்கள் இவர்களுடன் பழகிப் புதிய குணசம்பத்தை அடைந்து பாப்பா பாப்பாவின் நிலையை விட்டு மாறுகிறது.

## 7. பாப்பா ஒரு சம்பத்து

இப்படி நம் நாட்டிலிருக்கும் பாப்பாக்கள் எல்லோரையும் நாம் சந்தான சம்பத்து என்று சொல்லுகிறோம். முதலில் பாப்பா பெற்றோர் சம்பத்து. பின்னர்ப் பாப்பா ஆசிரியர் சம்பத்தாவன; கடைசியில் அது தேச சொத்தாக ஏற்படுகிறது. எனவே பாப்பாவைப் பெற்றோர், ஆசிரியர், தேசத்துரைத்தனம் மூவரும் பாப்பாவின் சுபாவத்தையறிந்து அதைக் கண்ணும் கருத்துமாக வளர்க்க வேண்டும். பெற்றோர் பரம்பரைப் படிப்பைப் புகட்டவேண்டும். ஆசிரியர் பாப்பாவின் தேக, மன, ஆன்ம வளர்ச்சியை மலரச் செய்யவேண்டும். சர்க்கார் பாப்பாவிற்கு வேறு எல்லா வசதிகளையும் தாராளமாகக் கொடுத்து நாட்டின் சிறப்பையும் வளர்ச்சியையும் தாங்கக்கூடிய ஸ்திரீ புமான்களாக வளரச்செய்யவேண்டும். பாப்பா நல்ல நிலையில் வளர்வதற்கு பெற்றோர், ஆசிரியர், சர்க்கார் மூவரும் நல்ல வழியைப் போற்றவேண்டும். நீதி, அநீதி அறிவுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். உள்ளொன்று, புறமொன்று பேசாதிருத்தல் வேண்டும். சாமனிய தர்மங்களை அவர்கள் சொல்லிலும், செயலிலும் நடத்திக்காட்டல் வேண்டும். பாப்பா தேசத்தின் பொது உடமை; பரம்பிரம்ம அணுக்கள். அவைகளைக் கெடுப்பது பாவம். போற்றி வளர்ப்பது புண்ணியம்.

## 8. பாப்பா வளர்ச்சி—பாரதி கனவு

பாப்பாவைப் போற்றி வளர்ப்பது எப்படி? தமிழ் நாட்டுக் கவி பாரதி பேசட்டும்.

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு—
மாலை முழுதும் நல்ல விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா

தெய்வம் நமக்குத்துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா

பாதகம் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா.

துன்பம் நெருங்கி வந்த போதும்—
நாம் சோர்ந்து விடலகாது பாப்பா.
அன்பு மிகுந்த தெய்வமுண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.

சோம்பல் மிகக் கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா—
தேம்பி யழுங் குழந்தை நொண்டி—நீ
திடங் கொண்டு போராடு பாப்பா.

தமிழ்த் திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—
அமிழ்தில் இனியதடி பாப்ப—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

S. T. ராமானுஜ அய்யங்கார்.

# நூதன கல்வியும், குணாதிசயப் பயிற்சியும்

---

Miss. காந்திமதி, *Sub-asst. Inspectress of Schools, Dindigul.*

தற்காலத்திய உலகம் ஒரு நூற்றாண்டுக்கு முன்னிருந்ததல்ல. எக்காரியமும் மாறுதலடைந்திருக்கின்றது. அத்துடன், கல்விப்போக்கும் மாறுதலடைந்திருந்த போதிலும், மற்றும் காரியாதிகளைப்போன்றும் அதே வழிவகைகளிலும், அதே தீவிரத்துடனும், மாறுதலடையவில்லை. கல்வி நிபுணர் பிள்ளைகளின் மனோதத்துவத்தை, அவர்களின் தேகத்தினின்று பற்பல சமாசாரங்களைப் புகுத்து அப்பியசிப்பது, அசாத்தியமென்று கண்டுணர்கின்றனர். நாம் மனோதத்துவங்களையல்ல, பிள்ளைகளைக் கற்பிக்கப் பிரயத்தனிக்கிறோம். மனோதத்துவங்களை ஸ்பரிசிக்கக் கூடாத காரியமாக எண்ணுவது தவறேயாகும். கல்வியின் நோக்கம் யாதெனில், தன் ஜீவியத்தில் சரிவரத் தன் கிரியைகளைச் செய்ய ஒரு பிள்ளையை முயற்சிப்பதே. அவனுடைய மனமும் திரேகமும் கற்பனையை யடைவதில்லை. ஆனால் அவனது மனோதத்துவம் கற்பிக்கப்படுகிறது. ஆதலால் ஏதோ வரையறுக்கப்பட்ட சமாசாரங்களை அவன் கற்றுக் கொள்வது கல்வியின் நோக்கமன்று. மனோவாக்குகாயங்களில் மாணவன் ஒன்றாகப் பயிற்சி பெறுவதே இலக்ஷியமாகும். கல்வியின் உண்மையான நோக்கம் யாதெனில், மனிதன் தன் கிரியைகளில் சரிவர நடந்தோ, அவன் தன்னையே ஆயத்தப்படுத்திக் கொள்வதேயாகும். அவை முற்றுப் பெற அந்நோக்கங்களிலும், வழிவகைளிலும், அவன் வழிகாட்டப்படவேண்டியது முக்கியமாகும். வீடும் பள்ளியும், பிள்ளைகள் வழிகாட்டப்படுவற்குரிய நற்குணங்கள் அடையவும் அவைகளைக் கொண்டு செலுத்துதற்கும் அவைகளே ஏற்ற இடமாகப் பெறவும் வேண்டும். பள்ளிக்கூடமே மனோதத்துவத்தை விர்த்தியாக்குதற்குரிய மேன்மையான நோக்கங்களுக்கு, ஏவி விடக் கூடிய பயிற்சியை அளிக்குமிடமாகும். ஆகையால், பிள்ளைக்குப் போதிய சுயேச்சையும், சுத்தியுள்ள நடத்தையயும் பள்ளிக்கூடமே யளிக்கவேண்டும்.

நூதனக் கல்வியில், படித்துக் கொடுப்பதைவிடப் படித்துக்கொள்வதே முக்கியமாகும். பிள்ளைகளின் மனத்தில் அநேக விஷயங்களை நிரப்புவதைவிட, உபாத்திமார் அவர்களை அறிந்து கொள்வதவசியம். பற்பல கலைகளைப் படித்து—ஞாபகப்படுத்திக் கொள்ளவோ அல்லது மறந்து போகவோ—கற்பிக்கப்படு மிடமாகமட்டும் பள்ளிக்கூடம் இருக்கக் கூடாது. ஆனால் பிள்ளைகளாக ஒருவருக்கொருவர் ஜீவித்துத் தங்களின் குணங்களை (நன்மைக்காகவோ தீமைக்காகவோ) பண்படுத்துமிடமாகப் பள்ளிக்கூடங்கள் விளங்கவேண்டும். பள்ளிக்கூடமோர் பிள்ளையின் உல

கம். பிள்ளைகளின் பெற்றோரிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய குணாதிசயங்களைப் பல பழையகாலத்து உபாத்திமார் தம் மாணவரிடமிருந்து எதிர்பார்ப்பது தப்பாகும். குழந்தை ஒவ்வொரு விஷயத்திலும் பெரியோரைவிட வித்தியாசமாயிருக்கிறது. ஆகையால் தன் வேலை சித்தி பெறுவதற்கு உபாத்திமார், குழந்தையை நன்கு அறியவேண்டும். குழந்தையின் ஆரோக்கிமான போக்குகளை நல்லவழிவகைகளில் செலுத்த உபாத்திமார் உற்சாகப்படுத்தவேண்டும்.

இன்னும், பழைய பள்ளிக்கூடங்களில் பழமையான போக்கின் படியே பிள்ளைகள் அமைதியாக உட்கார்ந்து படிக்கவும், உபாத்திமாரின் சொல்லுக்கு உடனே அடங்கி நடக்கவும், உத்தரவின் பேரில் மிக்க மரியாதையுடனும் தாழ்ந்த குரலுடனும் பேசவும், ஒழுங்காக வெளியில் செல்லவும் கற்பிக்கப்பட்டு வருகின்றனர். அத்தகைய பள்ளிக்கூடங்களில் ஏதோ சில உபகரணங்களும், சிற்சில புஸ்தகங்கள் மட்டும் உண்டு. ஆனால் அத்தியாவசியமான பிரம்பு இல்லாதிருப்பது அரிது. இக்காலத்தும் வசதியுள்ள குறுகிய இருக்கையினின்று எழும்பி நின்று, உபாத்திமார் முன்னிலையில் கைகட்டிக் கொண்டு, அவர் சொல்லச் சொல்ல எண்ணுமெழுத்தும் இராகத்துடன் ஒப்புவிக்கும் பிள்ளைகளுடைய பள்ளிக்கூடங்களைப் பார்ப்பது சர்வசாதாரணமே.

இருப்பினும், “பழையன கழிதலும், புதியன புகுதலும்” என்பதற்கேற்பப், பழைய கொள்கைகளை ஒழித்து அநேகர் நூதன முறைப்படி பிள்ளைகளின் ஒய்வில்லாத சரீரமனோதத்துவப்போக்குகளை அறிந்து அவற்றைக் கைக்கொள்ள முன் வந்திருக்கின்றனர். குழந்தைகள் நிருமிக்கும் பரிஷ்காரமான எண்ணங்களைத் தடையற்ற விவேகத்துடன் அறிந்து கொள்வதே நூதன கல்வியின் அடிப்படையாகும்.

முற்காலத்திய முறைப்படி கல்விகற்பது, விஷயங்களை உபாத்திமாரிடமிருந்து மாணவருக்கு மாற்றப் படுவதே அலுவலாக விருந்ததினால், மாணவரின் பிரயாசைகளையே உபாத்திமார் செய்து வந்தனர். தற்போதிய நூதன முறையின்படி, உபாத்திமாரின் மூலமாய் மாணவரே கற்றுக் கொள்ளல்வேண்டும். மாணவருக்கு உடனே எடுத்துக் கொடுக்கக் கூடிய ஏதோ ஓர் சக்தியை உபாத்திமார் பெற்றிருப்பதாகப் பெற்றோர் எண்ணுவதுசகஜம். ‘ஆனால் தூதன கல்வியின்’ முறைப்படி, மாணவருக்குப் படித்துக் கொடுப்பதைவிட, அவர்கள் படித்துக் கொள்வதே முக்கியமாகுமென்று முன்பே பார்த்தோம். எனினும் பண்டைக் காலத்தைவிடத் தற்போதிய உபாத்திமாரின் கற்பிக்கும் கடமை குறைந்திருந்த போதிலும், அவர்களின் உத்திரவாதமோ அதிகமாகும். சித்திபெற விரும்பும் உபாத்தியாயர், மிக்க ஊக்கமும் அத்தியந்த சிரத்தையும், தக்க கீர்த்தியாகவும் விளங்கவேண்டும். உபாத்தியாயர் தன் பிள்ளைகளின் மனோதத்துவங்கள் தெளிவாக்கப்படுவதை மாத்திரம் கூர்ந்து கவனிப்பது போதாது. அவர்



அம்மாணவர்கள், நன்மையானவைகளை நேசிக்கவும், தீமையானவைகளை வெறுக்கவும், அவர்கள் மனத்தில் புதிய எண்ணங்களைஉயிர்ப்பித்துச் சிறந்த விருப்பங்களை விர்த்தி செய்து, உலகத்தின் சிருஷ்டிப்பையும், கலைகளையும், நூல்களையும், மாணவருக்குத் தெளிவாக்க வேண்டும். மேலும் உபாத்திமாரின் கடமை பிள்ளைகளின் மனோதத்துவங்களை விர்த்தி செய்வதேயல்லாமல், விருத்தியை அவர்களிடம் வற்புறுத்தி நுழைப்பதன்று. மாணவருக்குரிய ஞான சன்மார்க்க திரேகவிதிகளை யளிக்கக்கூடிய வசதிகளைக்காட்டி, ஆரோக்கியமான போக்குகளுக்கேற்ற உபகரணங்களைக் கொடுத்து, இவைகள் மூலமாய்க் காரியாதிகளைச் சரிவரச் செய்யச் செய்வது உபாத்திமாரின் கடமையேயாகும்.

கல்வியின் இலக்ஷியம் யாதெனில், ஒவ்வொரு மாணவனிடத்துமுள்ள சிறந்த தத்துவங்களை வெளிப்படுத்தி, அவனது தினசரி வாழ்க்கையில் எவை சரியானவை என்று நிர்ணயித்து ஜீவிப்பற்கு உதவுவதே கல்வி நிபுணர் ஆமோதிக்கும் ஒரு சத்தியமாகும். இத்தகைய கொள்கையை அனுசரிக்கும் கல்விமான்கள், தங்கள் முன் எப்போதும் கல்வியின் இலக்ஷியமான “உண்மையான கல்விமான் நற்குணங்களைப் படைத்தவனாவான்” எனும் சத்தியமே தங்களின் கர்நாடக ஜீவியத்தின் பிரமாணமாக்கிக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகளின் பாலிய பருவத்தின் பலாபலன்களே பிற்காலத்தில் அவர்களுடைய புருஷ பிராயத்திய குணாபிவிர்த்தியைப் பாதிக்குமென்பதை அறிந்தும், நற்குணங்கள் இப்பாலிய பருவத்திலேயே திரட்டப்படுமென்றும், சித்தப் பயிற்சி யடையுமென்றும் உபாத்திமார் அறிந்து கொள்ளல் வேண்டும். உண்மையாகவே இவ்வெல்லாக் காரியங்களிலும் குணாபிவிர்த்தியே உபாத்திமைத் தொழிலில் சிறந்த அம்சமாகும்.

ஒரு விஷயத்தை வெகுநேரம் ஆராய்வதும், மனத்தை மிதமிஞ்சி உழலச்செய்வதும், ஒரே நிலையில் வெகு நேரம் இயக்கமின்றி உட்கார்ந்திருப்பதும், சுயேச்சை யின்றி வகுப்பில் அமர்ந்திருப்பதும் பிள்ளைகளின் மனோநிலைக்கு அசாத்தியமாகும் என்பதை உபாத்திமார் அறிதல் வேண்டும் சதாகாலமும் சுயேச்சையின்றிக் கண் காணிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் பயிற்சிக்கப்படுகிற குழந்தைகள் பிற்காலத்தில் தன் நம்பிக்கையின்றிப் பிறரை எதற்கும் எதிர் பார்ப்பவராவார்கள். மேலும் சுயேச்சையுடன் பயிற்சிக்கப்படும் குழந்தையைவிட மனோசக்தியில் குறைபாடுடையவராவார்கள். பிள்ளைகளின் மரியாதைக்குப் பங்கம் வாராதபடி நாம் பெரிதும் போற்றவேண்டும். மாணவரின் மனோபிவிர்த்தி ஒழுங்குறச் சீர்திருத்தப்படுவற்கு உபாத்திமார் அவர்களுடைய தன்மைகளை நல்வழிபடுத்தல் வேண்டும். இவ்வகை வழிகளில் உபாத்தியாயர் வழிகாட்டியாகவும், மாணவன் செய்பவனாகவும் நடந்து கொள்ளல் வேண்டும்.

“தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்” என்பதற்கேற்பப் பால்ய பழக்க வழக்கங்களே பிற்காலத்திய ஜீவியத்திற்கு அடிப்படையாகும்,

ஆகையால் நற்பழக்க வழக்கங்களை பால்யத்தில் உருவாக்கப்படவேண்டும். பிள்ளைகளின் இளமைப் பருவத்தில் வீட்டாரும், பள்ளிக்கூடத்தாரும் மாணவரின் அபிவிர்த்தி விஷயமாக ஒத்துழைத்தல் வேண்டும். அநேக மாணவர்கள் கல்வி வாசனையறியாக் குடும்பங்களினின்று வருகின்றபடியால் அவர்களுக்கு நல்ல பழக்கவழக்கங்களைப் பள்ளிக்கூடத்தில் கற்பிப்பது சிறிது கஷ்டமேயாம். அத்தகைய பிள்ளைகளின் பெற்றோரிடம் உபாத்திமார் சென்று, அவர்களிடம் உறவாடி. அன்னவரின் நட்பையும் அனுதாபத்தையும் பெறுவது அரிதாகும். அவ்வாறிருந்த போதிலும், உண்மையான உழைப்பாளியான உபாத்தியாயர்கள், அப்பெற்றோரின் அபிமானத்தைப் பெறவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் செய்யும் ஒவ்வொரு காரியங்களும் அவர்களின் குணாபிவிர்த்திக்கு மூலகாரணமாயிருத்தல் வேண்டும். முதன்மையாக மாணவர்களின் தேகாரோக்கிய வளர்ச்சியும், சன்மார்க்க வளர்ச்சியும். ஒன்றை ஒன்று பாதிப்பதால், முக்கியமாகச் சன்மார்க்க வளர்ச்சி விர்த்தியாவதிற்கேற்ற ஆரோக்கியகரமான இடவசதிகள் பள்ளிக்கூடத்தில் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். பள்ளிக்கூடமானது நல்ல காற்றும், போதிய வெளிச்சமும், சுத்தமுள்ள சுற்றுப்புறங்களும் அழகான தோற்றமும் இடவசதியும் பெற்றிருத்தல் வேண்டும். அங்கே கற்கும் மாணவர் கல்வி என்றவுடனே அதினின்று தப்புவதற்கேற்ற வழிவகைகளைத் தேட முயற்சிக்காமல், பள்ளிக்கூடத்தில் அவர்கள் வீட்டிலிருப்பது போலவே பாவிக்கும் படியாகப் பற்பல வசதிகள் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

ஒன்றைப் பார்த்தவுடன் அவைகளின்படி செய்தலே பிள்ளைகளின் சுபாவம் ஆதலால், அவர்களின் முன்பாக நற்பழக்கங்களையுண்டாக்குபவற்றையே உணர்த்தவேண்டுமென்பதை நாம் அறிதல் வேண்டும். பிள்ளைகள் தம் குருமுன் உட்கார்ந்து அவரின் முகாரவிந்தத்தையே பார்த்து, அன்போடு மெச்சிக்கொள்வதையும், தங்களால் சுயேச்சையாக யாதும் செய்ய இயலாத நிலைமையிலிருப்பதையும் நாம் அடிக்கடி பார்க்கிறோம். பள்ளிக்கூட ஜீவியத்தில் மாணவரைப் பெரிதும் பாதிக்கக்கூடிய முக்கிய சாதனங்கள் யாவை எனில், குருவின் முகப் பொலிவும், கம்பீரத் தோற்றமும், தொனியும் நடவடிக்கையுமே. மாணவர் தங்களை அறியாமலே குருவினுடைய நடையுடை பாவனைகளைப் பின்பற்றி நடக்கின்றனர். உன் மாணவன் திரிகரண சுத்த முடையவனாகவிருக்க நீ விரும்பினால், நீயும் அவ்வாறு இருப்பாயாக.

ஓர் உபாத்தியாயரின் மேற்கூறிய மனிதத்துவமே பிள்ளைகளைக் கவர்ச்சிக்க கூடிய தன்மையாகிறது. அநேகக் குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் ஒரு வகுப்பறையில் வந்துகூடி, ஒரே பாடத்தை ஒரே நேரத்தில் கற்கின்ற படியால் உபாத்தியாயர் இத்தகைய வேறுபட்ட மாணவர்களின் மனத்தை ஒன்று படுத்துவதற்கேற்ற ஒரு கருவியாக இருத்தல்



வேண்டும். உபாத்தியாயர் மாணவரிடத்துச் செல்லுங்கால் தான் ஒரு எஜமானன் என்னும் முறையில் செல்லாமல் கல்வி கற்பிக்க வந்த ஊழியன் எனும் சத்தியத்தை அவர்கள் அறியும்படியாக அனுதாபத்துடன் சென்று, கருணையுடன் கற்பிப்பதே சித்தி பெறச் செய்யும் உபாத்திமைத் தொழிலாகும். இதுவே தற்காலக் கல்வி முறைகளில் மிகவும் அழுத்தமாக அனுஷ்டிக்கும்படி சொல்லப்படுகிறது.

மாணவரின் நற்குணங்களை விர்த்தியாக்குவதற்கு ஏற்ற சாதுரியத்தை உபாத்திமார் பெற்றிருத்தல் அவசியம். பிள்ளைகளின் மனோவிர்த்தியை மேன்மேலும் வளரச் செய்ய வேண்டுமேயன்றி, அதைத்தடுத்தல் கூடாது. அவர்களுடைய நடவடிக்கைகளினின்று அவர்களை நல்வழியில் திருப்பவேண்டுமேயன்றி, அடியோடு அவர்களைத்தடுத்து விடக்கூடாது. அமைதியாயிருக்கவேண்டுமென்ற ஒரு காரணத்தை மாத்திரம் எண்ணி, மாணவர்களுடைய பிரயத்தனங்களையடக்கினால், அவர்கள் மதி நுட்பமின்றியும், ஊக்கமின்றியும், தம் வேலையில் சோம்பலையும், கவலையீனத்தையும் பெறுவார்கள். பிள்ளைகளிடத்துக் காணப்படும் விகடத்தை உபாத்தியாயர் ஒழிக்க வேண்டுமென எண்ணுதல் கூடாது. வகுப்பில் வேடிக்கையான வார்த்தைகளை உபயோகப்படுத்தல், வகுப்பிலுள்ளவர்களின் மனத்தை ஒருங்கு திரட்டவும், கஷ்டங்களை நீக்கவும் ஒரு கருவியாகிறது. அவ்வாறான காலப்போக்குக்கு இடம் கொடுக்காமலிருந்தால், மாணவர்கள் தம் ஆசிரியரை, இயற்கைக்கு விரோதமான கொடுஞ்சூரரெனப் பாவிப்பார்கள். அப்படியிருந்தபோதிலும் ஒரு மாணவன் மூலமாக அத்தகைய பரிகாசங்களை நடைபெறச் செய்து அவன் மனத்தைப் புண்படுத்தல் கூடாது.

உபாத்தியாயரால் கற்பிக்கப்படும் ஒவ்வொரு பாடமும் புதிதான நல்லெண்ணங்களைப் பிள்ளைகளின் மனத்தில் உண்டாக்குவதற்காகக் கற்பிக்கப்பட்டால் அவற்றின் மூலமாக மாணவர்க்கு குணாதிசயப்பயிற்சியுண்டாகும். இன்னும் படங்களின் மூலமாகவும் நல்ல அபிப்பிராயங்களையும்,உணரச் செய்யலாம். மற்றும் தெரிந்தெடுத்த கதைகள் மூலமாகவும் மாணவர் தாங்களே நல்ல நீதிகளை அறிந்து வெளிப்படுத்தச் செய்யலாம். கதைகளை மாணவர்க்குச் சொன்னபின்பு, அக்கதைகளின் நீதிகளை உபாத்திமாரே எடுத்து மாணவர்க்குக் கூறல் வழக்கமாக நடைபெறும் குற்றமாக விருக்கிறது. கதையின் நீதிகள் இவைதான் என்று எடுத்துக் கூறாமலே, அவர்கள் விளங்கிக்கொள்ளல் வேண்டும். இவ்வித நீதிகளை உபாத்தியாயர் நாம் சொல்லச் சொல்ல மாணவர்களை மறுபடியும் சொல்லச் செய்தல் அதிகத் தீமையையே யன்றிச் சிறிதும் நன்மையன்று. ஒரு கதையைக் கற்பிக்குங்கால் அதிலுள்ள முக்கிய சாராம்சத்தை முதலில் தன் மனத்திற் கொண்டு எடுத்துக்கூறுவது மாணவரின் கவனத்தை நாம் கவர்வதற்குகு ஏதுவாகும். சொல்லும் விஷயங்கள் மாணவரைத் தீய வழிகளில் புகுத்தாவண்ணம், நமது போதானா முறைகளிருத்தல் அவ

சியம். அவைகளின் மூலமாய் மாணவர்களின் ஜீவியத்தில் உன்னத மனக் கிளர்ச்சி யுண்டாக்க வேண்டும். குழந்தைகளைப் போதிக்கும் முறையில் கதைகளின் மூலமாக அவர்கள் பெறும் அறிவு அற்பமென்று நாம் கருதலாகாது. பிள்ளைகளின் மனத்தை நாம் பற்பல வழிவகைகளில் ஆராய்ச்சி செய்வதற்குக் கதாகற்பனைகளே ஏற்ற சான்றாகும். இக்கதைகளிலுள்ள பற்பல பாத்திரங்களின் குணாதிசயங்களே, பிள்ளைகளை அவர்களே அறியாவண்ணம் கவர்ச்சித்துப் பக்குவப்படுத்தி, நல்வழி பெறுமாறும், நன் நோக்கங்களையும் சிறப்புற்ற கிரியைகளை செய்யுமாறும் உயிர்ப்பிக்கின்றன.

பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளின் முக்கிய கவர்ச்சிக்குரியது தாவர ஜீவ ஜந்துக்களின் ஜீவியமேயன்று வேறல்ல இதையே நாம் 'இயற்கைப் பாடம்' எனப் பேரிட்டழைக்கின்றோம். இவ்விஷயத்தில் உபாத்தியாயர் விவேகமான வழிகாட்டியாகவிருந்து, பிள்ளைகள் தாங்சள் காணும் ஒவ்வொரு சிறியதோர் விஷயத்திலும், சிருஷ்டிப்பின் அழகைக் கண்டுகளிக்க ஏவிவிட வேண்டும். நம் பிள்ளைகளின் குணாதிசயங்களை பயிற்சிப்பதில் இயற்கைப்பாடம் உபயோகப்படுமாகில் உலகில் ஜீவிக்கும் எல்லாச் சிருஷ்டிக்களின் பேரிலும் பிள்ளைகள் அனுதாபம் காட்ட வேண்டுமெனும் எண்ணத்தை யவர்களின் மனத்தில் பதியவைக்க வேண்டும். மிருகங்களை மிக்கக்கவலையுடனும். அன்புடனும், நிதானத்துடனும், எப்போதும் நடத்தல்வேண்டும். புஷ்பங்களையும், மலர் மொட்டுகளையும், பலவர்ண இலைகளையும், பிள்ளைகள் வீணே கொய்து சிதைத்தலாகாது. பிள்ளைகளின் பாழாக்கும் தன்மையை மாற்றி அவர்கள் சிருஷ்டிப்பின் அழகைக் கண்டுகளித்து, அவைகளைக் காப்பாற்ற வேண்டுமெனும் எண்ணத்தை வற்புறுத்தல் வேண்டும். அதேசமயத்தில், பிள்ளைகளினிடத்தில் எக்காரியத்தையும் தெரிந்து கொள்ள வேண்டு மெனும் ஆசையே அவர்களை இவ்விதப் பாழாக்கும் அலுவல்களுக்கு ஏவிவிடுகிற தென்பதை உபாத்திமார் அறிந்து கொள்ள வேண்டிய தவசியம்.

மேல்வகுப்புகளில் தேசசரித்திரமும், மற்றும் பாஷையின் பாண்டித்தியமும் மாணவரின் குணாதிசயங்களைப் பயிற்சிக்க ஏதுகரமாயிருக்கின்றன. இப்பாடங்களில் கண்டுள்ள வீரசூரர்களையும், அவர்களின் வெவ்வேறு நற்குணங்களையும், பிள்ளைகள் போற்றலாம். பிள்ளைகளின் ஞானாபிவிர்த்தி இவ்விதமாய் முன்னேற்றமடையும்போது, அவர்களின் மனப்போக்குகளை எளிதில் கண்டுணரப் பேறுதவியாகும் பாடப் புத்தகங்களிலும், கவிகளிலும், முன்மாதிரிக்கேற்ப அமைக்கப் பெற்றிருக்கும் பற்பல நற்குணங்களையும் பிள்ளைகள் தங்கள் தின ஜீவியத்தின் முன்மாதிரியாகக் கொண்டுசெலுத்தப் பிரயாசைப்படவேண்டும். ஆகையால் பிள்ளைகள் எப்பாடங்களைக் கற்கவேண்டுமென நிர்ணயிக்கும்போது தக்க சிரத்தையுடன் அப்பகுதிகளைத் தெரிந்தெடுத்தல் அவசியம். ஏனென்றால், அவைகள் மூலமாகவே, நல்ல குணாதிசயங்கள் பிள்ளைகளிடம் பொருந்த



அவைகள் ஏற்ற சாதனங்களாயிருக்கின்றன. கைத்தொழில் பிள்ளைகளின் மனோதத்துவத்தைப் பெரிதும் பாதிக்கும். தன் கைகளினால் பிரயோஜனமான வேலையை பிள்ளைகள் செய்வதால் குறும்பான காரியங்களைச் செய்ய ஏவும் முகாந்தரங்களினின்று தடுக்கப்படுவார்கள். மேலும் தன் கைகளாலேயே தன் ஜீவியத்திற்கேற்ற உபகரணங்களைச் செய்வதே அவர்கள் மனத்தில் புத்துயிர் கொண்டு மேன்மையான எண்ணங்களை நாடவும் தன் தத்துவங்களை பிரயோஜனப் படுத்தவும் ஏவிவிடக்கூடும். சுருங்கச் சொல்லில், குணாதிசயப் பயிர்சிக்கேற்ற சந்தர்ப்பங்கள் பள்ளிக்கூடத்தில் நாம் கற்பிக்கும் எல்லாப் பாடங்களிலுமி ருக்கின்றன.

உபாத்திமாரில் அநேகர் பிள்ளைகளின் அறிவை விர்த்திசெய்வதிலேயே கண்ணுங் கருத்துமாய்த் தம் காலத்தைச் செலவிட்டு, அவர்களைக் கற்பிப்பதின் முக்கிய நோக்கத்தை இழந்துவிடுகிறார்கள். மேலும், அவர்களின் மனோவிகாரத்திற்கு உணர்ச்சியின் மூலமாகச் சுத்தமான நல்லெண்ணங்களைப் பூட்டப் பிரயாசைப்படும் மாணவர்களை உன்னதமான கிளர்ச்சியையடையுமாறு செய்ய முயலவேண்டும். ஏனெனில் உணர்ச்சியே அதிக முக்கியமானது. பக்தி விநயத்திற்கேற்ப உணர்ச்சியையே பிள்ளைகளிடத்துப் பெருக்கிவிட வேண்டும். "இவைகள் மேலேயுள்ள இறைவன் பேரில் நாம் சார்ந்திருக்கிறோம் என்று நாம் சிந்திக்க ஏவுகின்றதோ, எவைகள் சிருஷ்டிப்பின் அழகை மதிக்கக் காரணமாயிருக்கின்றனவோ, எவைகள் வணக்கத்திற்குரிய காரியாதிகளை நம்மனத்தில் எழுப்பித்து, அதன் மூலமாய்ச் சிறப்புறும் மகத்துவத்தை மதிக்க மூலகாரணமாயிருக்கின்றனவோ, அவை யெல்லாம் நம் பக்திவிநயத்தின் சிந்தனைகளை எழுப்பும்,"

வீட்டில் பிள்ளைகள் எது காரியத்திற்கும் தங்கள் பெற்றோரை எதிர்பார்க்கின்றனர். ஆகையால் பிள்ளைகள் பெற்றோரை அன்புடன் மதிக்கிறவர்களாகப் பயிற்சிக்கப் படவேண்டும். அவர்கள் பள்ளிக்குவரும்போது தங்களைப்போன்ற மற்றப் பிள்ளைகளை மேற்படி மரியாதையுடன்நடத்தவும், மற்றவர்களுக்கு இடுக்கண்வராது அவர்களை மதிக்கவும் பயிலவேண்டும். இவ்விதமாகப் பள்ளிக்கூடம் வீட்டின் மற்றொரு பாகம் போலாக்கி, வீட்டில் துவக்கப்பட்ட ஜனசமூகப்பயிற்சி பள்ளியிலேயே பக்குவப்படுத்தல் வேண்டும். இப்பருவத்தில் பிள்ளைகளின் நடவடிக்கைகளை அன்புடனும் அனுதாபத்துடனும் ஒழுங்குபடுத்தவேண்டும். முழுப்பள்ளிக்கூட ஜீவியத்தின் இலக்ஷியம் யாதெனில் பிள்ளைகளிடம் உன்னத நற்குணங்களைப் பெருக்குவதேயாம். பிள்ளைகளின் குணாதிசயப் பயிற்சியில் எதிர் மறையானமுறையில் அல்ல, உடன் பாடான முறைகளையே நாம் கையாள வேண்டும். நாம் பிள்ளைகளின் பேரில் விசுவாச முடையராய், அவர்களின் அனுதாபத்தையும் நற்காரியங்களில் பெற்று, வசீகரமான நடவடிக்கைகளுக்கவர்களை ஏவிவிடவேண்டும். பள்ளிக்கூட ஜீவியத்தில் மாணவர்களின் மனத்தில் எவ்விதத்திலும் தீச்சார்புக்குறிய ஏதுக்கள் குறுக்கிடக்

கூடாது. ஒவ்வொரு பிள்ளையிடத்தும்ம் காணப்படும் விஷயங்களை நாம் பெரிதும் போற்ற வேண்டும்.

பிள்ளையின் மனோ பயிற்சியால் அவனுடைய வெவ்வேறு தன்மைகளையும் சக்திகளையும் நமக்குவெளிப் படுத்தும்போது அக்குழந்தையே அவைகளைக்கண்டு சந்தோஷிக்கிறது. ஆகவே, நம்போதனாமுறை அவனை வழி காட்டுவதுடன், நோக்கமுள்ள தன் செய்கைகளுக்கு அவனை ஏவிவிடவேண்டும்.

“குண அமைப்பே கல்வியின் மேன்மையான நோக்கம் என்பதை ஒருவரும் மறுக்க இயலாது. ஆகவே, இக்குணப் பயிற்சிக்கு ஒரு விதமான வகையறுக்கப்பட்ட வகை வழியைத் திட்டப்படுத்துவதரிது. எனவே, அநேக பாடங்களைக் கற்பிக்கும் பற்பல நூதன முறைகளின் கூடவே செல்லும் விவேகமும் அன்பும் நிறைந்த ஏவுதலே, இக்குணப் பயிற்சியை அடைவிக்கும். பிள்ளைகளின் மனத்தில் நல்லுணர்ச்சிகளை ஊன்றச்செய்ய விவேகமும் அன்பும் நிறைந்த தூண்டுதலே சிறந்ததாகும்.

முற்காலப் பயிற்சியில், பிள்ளைகள் சித்திபெறுவதும் பெருமையுமே உபாத்தியாயருடைய வேலைக்குக் கீர்த்தியையோ, அபகீர்த்தியையோ உண்டு பண்ணுவதாகப் பாவிக்கப்பட்டு வந்தது. தற்கால நூதனக் கல்விப் பயிற்சியில், இதற்கு முற்றும் மாறாகக் கருதப் படுகிறது. மாணவன் உபாத்தியாயரின் வழிகாட்டுதலையும், அவரது அன்பையும் நாடும் ஆத்ம சக்தியுள்ள ஒருவன் என்பதை இப்போது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். நம்முடைய பள்ளிக் கூடங்களில் அத்தியாவசியமாக வேண்டியது யாதெனில் தன்னலமற்ற ஊழியமேயாம். பின்னும் ஒவ்வொரு ஆசிரியனும் தன் ஊழியத்தின் சிறப்பை நன்குணர்ந்து, தன்னுடைய சேவையே தனது ஜீவியத்தின் சிறந்த பயனெனக்கருதித் தன்னிடம் ஒப்புவிக்கப் பட்ட தன் மாணவரின் சுகுணங்களை அபிவிர்த்தி செய்ய வேண்டும்.

# பாடசாலையும் குணசீலமும்

Ref. H. A. பாப்லி, ஈரோடு

பாடசாலை சமுதாயவாழ்க்கையே சிறுவர்களுக்கு நற்குணம் உண்டாகும் விஷயத்தில் பெரிதும் பயன்படத்தக்கது என்று யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். நற்குணங்களோ தீயகுணங்களோ வளர்ச்சி பெறுதல் கல்விப்பயிற்சியின் முறையைச் சார்ந்ததென்பது துணிபு. நான்கு வயது முதல் பத்துவயது வரையுமுள்ள வருஷங்களில் பிள்ளைகளுடைய குண லட்சணங்கள் அனேகமாய் உண்டாயிற்று என்பதற்கு ஐயமின்றே. ஆதலால் இவ்வருஷங்களில் அதற்குப் பொருத்தமான கல்விப்பயிற்சி நடப்பதைப்பற்றிக் குணசீலம் மேம்படுத்தும் பெரியார் யாவரும் கவலை கொள்வது அவசியம். பாடசாலைகளில் இதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வது உசிதம்.

உதாரணமாக, அநேக பாடசாலைகளில் வழங்கும் ஒரு தீய வழக்கத்தை எடுத்துரைக்கலாம். பிள்ளைகள் கணக்கு அல்லது மற்ற பாடம் எழுதவேண்டிய சமயத்தில் ஆசிரியர்கள் அனேகமாய்ப் பிள்ளைகள் எழுந்திருந்து முகம் எதிராய் நின்றுகொள்ளச் சொல்லி விடுகிறதுண்டு. இவ்வழக்கத்தினால் பிள்ளைகள் எல்லாருக்கும் வஞ்சக எண்ணம் உண்டு என்பதும் அவ்வெண்ணத்திற்குத் தக்கபடி ஒருவன் மற்றொருவனது எழுத்தைப் பார்த்து எழுதுவான் என்பதும் பெரும்பான்மையாய் ஏற்றுக்கொள்ளப் பட்ட கோட்பாடு என்பது தெளிவு. ஆசிரியர் முதலாவது பிள்ளைகள் பேரில் நம்பிக்கை வைக்காமற் போனால் பிள்ளைகளும் அவ்வாறாகத் தங்களைப் பற்றியே நம்பிக்கையில்லாதவர்களாய் எண்ணிக் கொள்ளுவார்கள். ஆதலால் இத்திய வழக்கம் தீய குணமுண்டாவதற்கு ஏதுவாகலாம். ஆசிரியர் விரும்பினும் விரும்பாமலிருப்பினும் பாடசாலையில் ஒழுக்கப் பயிற்சி நடக்கின்றதென்பது திண்ணம். ஆறு வயது முதற்கொண்டு பத்துவயது வரையுமுள்ள காலத்தில் சிறுவர்கள் பெரியோர்களுடைய நடக்கையையும் வாடிக்கைகளையும் கவனித்து அனேகமாய் அவைகளை அனுசரித்து வருவார்கள். ஆதலால் நம்முடைய பாடசாலைகளின் நடவடிக்கைகளைப் பற்றி நாம் ஜாக்கிரதையாய்க் கவனிப்பது அவசியம். மனோதத்துவ சாஸ்திரி ஒருவன், ‘குணம் என்பது போதிக்கப்பட்ட பொருளல்லாது பிடிக்கப்பட்ட பொருளேயாம்” என்றான்.

குணத்தின் அம்சங்களும் அமைப்பும் இவ்விவை எனச் சற்று ஆராய்தல் நலம். மக்தூகல் பண்டிதர் குணத்தைப்பற்றிப் பின்வருமாறு விவரித்தெழுதியிருக்கிறார். “தீர்மானங்களிலும் உயர்ந்த நடைகளிலும்

கிரியை ஆளுகையிலும் தன்னை வெளிப்படுத்துகிற ஒரு மனநிலையாம் குணப்பண்பு" என்றார். இயற்கை ஆசைகளைக்கொண்டு நாம் குணங்களை உண்டாக்குகிறோம். இவைகளைக் கொண்டும் இன்னும் மனவியப்பைக் கொண்டும் நாம் கருத்துக்களை உண்டாக்கி இக்கருத்துக்களை ஒன்றுபடுத்திக் குணபண்பு என்றதை விருத்தியாக்கலாம். இப்படியே நிலைநின்ற குண அமைப்பையே குணப்பண்பு என்று சொல்லுவார். ஆசைகளும் தன்மைகளும் மன இயக்கங்களும் வளர்ந்து கொண்டபோது இவைகளும் ஒன்றோடொன்று தகுதியாய் அமைக்கப்பெற்றுச் சூட்டப்பட்டிருக்கும்.

பாடசாலையானது சிறுவர் ஜீவனம்சத்திற்கேற்ற அறிவுகளைப் பெற்றுள்ள ஸ்தலமாவது உயிர்வாழ்க்கைக்குரிய திறமைகளைப் பயிலும் ஸ்தலமாவது என்று எண்ணுவர் பலர். பாடசாலைகளில் சிறுவர் இவ்வறிவுத் திறமைகளை அடைந்து கொள்ளவேண்டுமென்பது நிச்சயம்; ஆயினும் இது பாடசாலையின் முக்கிய நோக்கமன்றே. தனிப்பட்ட உயிர் வாழ்க்கையும் சமுதாய வாழ்க்கையுமாகிய இவ்விரண்டையும் சிறப்பாக நடத்திக் கொள்ளுவதற்கேற்ற தன்மை யடைவது அதின் முக்கிய நோக்கமேயன்றி வேறல்ல.

குணநலஞ் சான்றோர் நலனே, பிறநாம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று

என்று பொய்யிற்புலவர் சொன்னது போல அடையத்தக்க எல்லா நன்மைகளிலும் குணசீலம் மிக்கச்சிறப்பான நன்மை என்பது திண்ணம். தனிப்பட்ட வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் இதுவே இன்றியமையாததென்பது தெளிவு. பத்தாம் வயதுக்குமுன்னமே குண சீலத்தின் மூலாதாரம் வைக்கப்பட்டிருக்க வேண்டியது. பிற்காலத்தில் அதின் விருத்தியைக் காண்போம்.

குணசீலத்தின் பகுதிகளைச் சிறிது ஆராய்வோம். தெளிந்த உண்மை அதாவது உள்ளும் புறம்பும் பொருத்தமாதல், மெய்ப்பொருளை நாடல், பிறர்க்குபகாரஞ்செய்தல், மனதிட்பம், கண்ணோட்டம் ஆகிய இவைகள் அவற்றில் சில. இவைகளை எவ்வண்ணம் வளர்க்கலாம்? குணம் போதனையினாலல்ல, சாதனையினாலே வளர்க்கப்படுகிறது. பிறர்க்குபகாரஞ்செய்யும் குணம் அந்தச்செய்கையில் மாத்திரம் உண்டாகக் கூடும். 'செய்து செய்து கற்றல்' என்னும் உரை இதிலே வெளிப்படுகின்றது. குணம் என்பது செய்கையில் உண்டாகிப் பழக்கத்தில் பதிந்து கொள்ளும் மனப்பான்மையில் அமைந்ததாகிய தன்மையாம். குழந்தைகள் நடைவண்டி பிடித்து நடந்து நடந்து சரியாய் நடக்கக் கற்றுக் கொள்ளுகின்றன. மனத்திலும் சரீரத்திலும் இதற்கென்றே ஒரு அமைப்பு உண்டாயிருக்கிறது. அது போலவே குணவிஷயத்திலும் வாய்மை என்னப்பட்ட குணம் உண்மைபேசுவதாலேயே ஸ்திரமாய் அமைக்கப்படும். துன்பம் வரக்கூடிய சந்தர்ப்பத்தில் உண்மை பேசுவானோ இல்லையோ



என்பதைப்பற்றிச் சும்மா துன்பமில்லாத காலத்தில் தீர்மானஞ் செய்ய முடியாது. உண்மை பேசுவது தினசரிவழக்கமாக உண்டாகுமானால் மாத்திரம் அவ்வாறு செய்யலாம். இப்படிப்பட்ட வழக்கம் பாடசாலையின் சமுதாய வாழ்க்கையில் உண்டாகுமே யொழிய வேறல்ல.

இப்படியே குணசீலம் எல்லா பையன்களிடத்தில் வளர்ச்சி பெறலாம். பாடசாலை சமுதாயவாழ்க்கை குணசீலம் விளைநிலம் என்று சொல்லலாம். சுய நோக்க முயற்சியின் முறையில் (Project method) இது மிகவும் விசேஷமாக வற்புறுத்தப்பட்டது. மற்ற முறைகளிலும் இதை முக்கியமாய்க் கருதிக்கொண்டு பற்பல செய்கைகள் மூலமாய் நற்குணங்களை வளர்ப்பிக்கக்கூடும். பிறந்தபொழுது எல்லாரிடத்திலும் ஒரு வகையான மனவியல்பு (temperament) இருக்கின்றது. இந்த மனவியல்பும் ஆசைகளுடன் சேர்ந்து பிற்காலத்தில் குணசீலத்தின் மூலப்பொருள் என்று சொல்லலாம். பாடசாலைச் சமுதாய ஜீவியத்தில் இவைகளெல்லாவற்றையும் கொண்டு புது அம்சங்களையுடைய ஒரு குணசீலத்தை உண்டு பண்ணலாம். ஒருமரம் எவ்வாறு நிலம், வானம், தண்ணீர், உரம் முதலியவைகளின் உதவியாலும் தோட்டக்காரன் புத்தியுள்ள நடத்தையினாலும் விளைகின்றதோ, அவ்வாறு குணசீலம் ஒரு சிறுவனிடம் பற்பல சந்தர்ப்பங்களிலும் நடக்கைகளிலும் வளர்ச்சி பெறுகின்றது என்பது திண்ணமே. ஆதலால்

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
சொல்லும் வாயெல்லாஞ் செயல்

என்று திருவள்ளுவர் போதித்ததுபோலச் சிறுவர்கள் அப்பியசித்து வரும்படியாக ஆசிரியர்கள் அவர்களுக்கு அநேக சமயங்களைத் தரவேண்டியது.

விசேஷமாக, இந்நோக்கம் திட்டமாய்க் கருதிக்கொண்டு கல்விப் பயிற்சியை நடத்துவது அவசியம். பிள்ளைகளுக்குச் சில அறிவுகளையும் திறமைகளையும் கொடுப்பது மேம்பாடான நோக்கமல்ல என்றறிந்து எல்லாரிடத்திலும் குணசீலம் வளர்ச்சிபெற வேண்டும் என்னும் கருத்து கொண்டு பாடசாலைச் சமுதாய வாழ்க்கையையும் கல்விப்பயிற்சி முழுமையும் நடபித்தல் உசிதம்.

# நல்லொழுக்கப் பயிற்சியும், ஆரம்ப பாடசாலைகளும்

T. V. வேங்கட்ராமன், B.A.L.T.

கல்வி இலாகா டேபுடி இன்ஸ்பெக்டர், திண்டிவனம்.

“ தொட்டிற் பழக்கம் கட்டை வரைக்கும் ” என்பதும், “ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையாது ” என்பதும் தமிழ்நாட்டு முது மொழிகள். இவைகள், பால்யத்தில் நல்ல பழக்கங்களைச் செய்வித்து வைப்பதின் அவசியத்தை வற்புறுத்துகின்றன. ஆரம்பப் பாடசாலை வயதிற்குள் பிள்ளைகளுக்கு ஏற்படாத நல்ல பழக்க வொழுக்கம், பிந்திய பருவத்தில் உண்டாவது கடினமே யாகும். ஆகையால், பெற்றோர்களுக்கும் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் இத்துறையில் மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. கல்வி அறிவில்லாத பெரும்பான்மைப் பெற்றோர்கள் நிறைந்த நம்நாட்டில் ஆசிரியர்களுடைய பகுதி இரட்டைப்படியென்றே கருதவேண்டும். பிள்ளைகளுக்கு நல்லொழுக்கத்தைப் பயிற்சி செய்விப்பதுடன், அவ்வொழுக்கத்தின் அருமையைப் பெற்றோர்கள் உணர்ந்து அதை அபிவிருத்தி செய்ய அவர்களிடமும் பிரசாரம் செய்யவேண்டியவர்க ளாவர்.

தொன்றுதொட்டு நம்நாட்டில் ஆசிரியரிடத்து வைத்துள்ள மதிப்பும் மரியாதையும் “ எழுத்தறிவித்தவன் இறைவனாகும் ” என்ற வாக்கிலிருந்து வெளிப்படை. கடவுளுக்கு அடுத்தாற் போன்ற ஸ்தானம் ஆசிரியனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு கௌரவத்தையும் பக்தியையும் இக்காலத்தில் கூட நாம் முற்றிலும் இழந்துவிடவில்லை. பிள்ளைகளுக்குப் பெற்றோர்களைவிட ஆசரியரிடத்தில் அதிக நம்பிக்கையும் பக்தியு முண்டு. ஆகையால் நாம் இளம்பிராயத்தில் அவர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி செய்விப்பது மிகவும் எளிது. படியாதவனிடம் ஒழுக்கக் குறைவு ஒரு குறையாகக்காணப்படாது; படித்தவனிடம் அக்குறைவு பெருங் குறையாகத்தோன்றும். ஆகையால், பாடசாலையில் பிள்ளைகள் படிக்கும் ஐந்து வருஷ காலத்திற்குள், மூலாதாரமான ஒழுக்கக் கோட்பாடுகளையும், நன்னெறிகளையும் நாம் அவசியம் போதிக்கவேண்டும். இல்லாவிடில் நம்முடைய முயற்சி பரிகாசத்திற்கிடமாகும். ஏனெனில் படியாத சீலமற்றவர்கள் படித்த சீலமற்றவர்களைக்காட்டிலும்மேல் அல்லவா?

நம்முடைய நோக்கம் இதன்மேல் இருக்குமாயின் சுலபமாய் நாம் அதைச் செய்யக்கூடும். சுத்தம் சுகத்திற் காதரம் என்று நாட்கணக்காய்ப் போதிப்பதைவிட அநுஷ்டானத்தில் அதைவற்புறுத்துவது எவ்வளவோ



மேலானது. பல் துலக்கினார்களா, தோய்த்துக் குளித்துத், தலைமுடியைச் சீராய் வாரி முடித்து, அவர்கள் ஆசாரத்திற் கேற்றபடி நெற்றியில் திருநீறு முதலியவை தீட்டினார்களா என்று கவனித்து வற்புறுத்த வேண்டும். பெரிய தத்துவங்களைச் சிறு வாக்கியங்களில் அழகாய் அமைத்துச் சொல்லுந் திறன் தமிழ்மொழிக்கு விசேஷமாயுள்ளது. ‘ ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, உலகநீதி முதலிய நீதிநூல்களில் இத்திறமை வெகுவாய் விளங்குகிறது. ஆரம்ப வாசகங்களில் இவைகள் செய்யுட்பகுதிகளாய் சேர்க்கப்பட்டு வருவது நம்முடைய பாக்கியமே. தோட்டி முதல் தொண்டமான் வரையில் சகலருக்கும் அவசியமான நன்னெறிகளும் ஒழுக்கமும் இந் நூல்களில் அடங்கியுள்ளன.

ஆரம்ப வகுப்புக்களில் பிள்ளைகள் அநுபவத்திற்கேற்றவாறு, இந் நீதிகளைக் கதைகள் மூலமாயும், அவர்களுடைய வாழ்க்கை அநுபவங்களிலிருந்தும் நன்றாய் ‘Concentric Method ’ல், விளக்கிக் காட்டவேண்டும். நீதிபோதனை, ‘ Moral Instruction ’ என்று தனிப்பாடமாய் இவைகளை நடத்த திட்டமிராதது நல்லதே. இந் நீதிகளை எழுத்துப் பயிற்சியோடு, பாலுடன் சீனியைக் கலந்து ஊட்டுவதுபோல், புகட்டுவது நன்றாகும்.

ஆரம்பக் கல்வி அதிகம் பரவுகிறதின் பயன் மக்களின் வாழ்க்கையில் சீலமும் நெறியும் அதிகரிக்க வேண்டும. “ கண்டொன்று சொல்லேல் ” என்ற வாக்கியத்தைப் படித்தவர்கள் அதிகரிக்கும்போது நீதிஸ்தலங்களில், பொய் சாட்சி குறையவேண்டுமே தவிர, அதிகரிக்கக் கூடாதல்லவா ? “ ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் ” “ ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கழிவு ” என்று படித்ததின் பயன் நம்முடைய கிராமங்களில் ஒற்றுமையும், சகோதர உணர்ச்சியும் அதிகப்பட்டுக் கக்ஷிகள் குறைய வேண்டாமா ? “ ஆலயந் தொழுவது சாலவும் நன்று ” என்று கற்றதின் பயன், கோயில்கள் அடைபட்டு இடிந்துபோகாமல் பாதுகாக்கப்பட்டு, மக்கள் ஆண்டவனைத் தொழுவதற்கு விளங்கவேண்டாமா ? நம் நாடு இப்போதுள்ள நிலைமைக்குக் காரணம், மக்கள் கற்றதின் பயன் ஒழுக்கத்தில் இல்லாமையே என்று சொல்லலாம். இப்போது ஆரம்பப் பாடசாலைகளில் பயிலும் பிள்ளைகள் தான் நாட்டில் பிற்காலத்து குடிகள். அவர்கள் வாழ்க்கையில் நல்லொழுக்கத்தையும் நன்னெறியையும் அடிப்படையாகக்கொண்டதாக இருக்குமாறு, இவ்விளம்பிராயத்தில் நாம் அவர்களை அத்துறைகளில் பயிற்சி செய்விக்க வேண்டும்.

# சாரணீயமுஞ் சீலப்பெருக்கமும்

ஸ்ரீமான் P. சம்பந்தம் பிள்ளை, B.A.L.T.
Dy. Inspector of Schools, Madras.

அன்பர் பணிசெய்ய ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலைதானே
வந்தெய்தும் பராபரமே!

என்பது தாயுமானாரின் திருவாக்கு. பிறப்பின் நோக்கம் இன்பநிலை யடைதல். இன்பநிலையாவது என்றும் இடையறாத இன்பத்தைத் தரும்நிலை; ஏதோ ஒரு புலன் அநுபவத்தில் தோன்றிச் சிறுபொழுது நின்று மறையும் இன்பமல்ல; அறிவுவயப்பட்டு ஆன்மாவை யண்டிநிற்கும் இன்பம்! நிலைத்த இன்பம். இந்நிலை அறிவு சேர்க்கையாலோ பொருள் சேர்க்கையாலோ பெறப்படுவதன்று. உலகப்படைப்பிலே உடன் பிறந்த வகையில் பிறமக்களுக்குப் பணிசெய்து, அவர்களும் தமது பிறப்புரிமையாகிய இத்தகைய இன்பம் பெறுவதற்கு உதவி செய்தல் வழியாகவே பெறப்படும். இப்படிப்பட்ட பணிக்கு ஒவ்வொருவரும் ஆளாக்கப்படவேண்டும்; உடலிலும் உள்ளத்திலும் ஆண்மை யுண்டாகப் பெறவேண்டும்.

கூர்ந்துநோக்கின் நமது ஆசிரிய இனத்தவரின் கடமை இந்தத் துணையைத் தக்கவாறு வழங்குதலன்றோ? உரம் எழப்பெறா இளைஞர்பால் மேற்குறித்த இருவகை உரங்களும் வளரச் செய்தலன்றோ? பலவேறு அறிவுத் திரள்களைப் பலவேறு முறைகளாற் போதிப்பதுடனில்லாமல், இன்பநிலைக்குற்ற அறநெறிகளையும் பொருள் நெறிகளையும் நூல்முகத்தால் விளக்கி அவற்றை யெடுத்தாளும் செயல் முறைகளையும் புலப்படுத்தலன்றோ? குறித்த நாட்களிற் குறித்த நேரங்களிற் சிறுவர்பால் அடைந்து சொல்வன சொல்லி வருவதுடன் அவர்களிடத்து இடையறாத் தொடர்புகொண்டு ஆசிரிய மாணவ உறவின் மெய்ந்நிலை பேணிச் செய்வன செய்தலும் வேண்டுமன்றோ?

சிறு பிராயத்தார்க்குரிய நெறிகளைச் செயல் அளவிலுங் காட்டுதற்குத் தோன்றியுள்ள முறைகளிற் சாரணீயம் மிகமிகச் சிறந்ததென்பது நம்மவர் அறிந்துளதே.

சாரணீயம் செயல் முறை சிறந்ததென்பது எவ்வண்ணம்? அது அறநெறி, பொருள் நெறிகளைப் புலன்வழிப்படுத்தக்கூடியதா? உடல் உரத்தையும் உள உரத்தையும் ஆக்கவல்லதா? மக்கள் சீலம் மாண்புறச் செய்வதா? அவர்களை ஆளாக்க வல்லதா?

சாரணீயம் மூன்று பகுதியினரைக் கொண்டது. அவர் ஒவ்வொருவரின் குறிச்சொல்லை நோக்குக! குருளைய (Cubs) ரின் குறிச்



சொல் 'இயன்றதைச் செய்' (Do your best). சாரணரின் குறிச்சொல் 'ஆயத்தமாயிரு' (Be prepared). திரிசாரணரின் குறிச்சொல் 'தொண்டு' (Service). குருளையன் பாலன். எனினும், தன்னாலியன்றதை, பயிற்சி முதிரா உடல் நிலைக்கும் மனநிலைக்கும் பொருந்திய பணிகளை அறிந்துணர்வதுடன் அவற்றைச் செய்து முடிக்க வேண்டியவன். சாரணன் வாலிபன். இயன்றதைச் செய்வதுடன் பின்வரும் பருவத்திற் கொள்ளும் வாழ்க்கையைப் பயனுடைய வாழ்க்கையாக்கும் அறநெறிகளையும் பொருள் நெறிகளையும் இயன்றவரை அறிந்துணர்ந்து அவ்வாழ்க்கைக்கு ஆயத்தமாயிருக்க வேண்டியவன். திரிசாரணர் முன் பருவங்களிற் கண்டுதெளிந்த நெறிகளை வாழ்க்கையில் இணைத்துத் தொண்டு செய்பவர்; மக்கள் தொண்டு, தன்னலம் மறந்து செய்யுந் தொண்டு, 'அன்பர் பணி' யெனும் அருந்தொண்டு செய்பவர். இவர்கள் உற்றார் உறவினரைத் துறந்து தனித்தொண்டர் குழாமாகி நிற்கவேண்டுமென்பதில்லை. உழவிலோ, வாணிபத்திலோ, வைத்தியத்திலோ, அரசியலார் சேவகத்திலோ, பிறர் சேவகத்திலோ அமர்ந்து வாழ்ந்து வருங்கால் பயன்பட வாழ்வர்; அந்தந்த நிலையிலே பொருள் பெருக்கத்தையோ, புகழ்பெருக்கத்தையோ பொருட்படுத்தார், சிறு பொய்யும், சிறு சூதும், சிறுகளவும் கருதார்; கைக்கூலி கொடுக்கவோ வாங்கவோ உடன்படார், கவறாட்டல், காதல், கள்ளுண்டல், குயின் (Human Cuckoo) மொழி கொள்ளல், கடவுள் நிலை கடிதல் ஆகிய தலைச்சாரணர் குறிக்கும் ஐம்பெருமாயை (Five Rocks) வசப்படார்; கீழோருக்கும் பிறருக்கும் நலன் செயும் நன்றொன்றினையே, அன்பர்பணியொன்றினையே இலக்காய்க் கொள்வர்.

அன்பர் பணி சிறக்க ஆளாக வேண்டுமே! சாரணீயத்தில் ஆளாக்குந் திறன்வகைகள் எவை? உற மூண்டவனே 'ஆள்' என்று அழைத்தற்குரியவனாகின்றான். இயற்கை மெலிவோ செயற்கை மெலிவோ பற்றிய உடல் உடையான் ஆண்மை யுடையான் ஆகான்; தன்வலி கொண்டு முன்னேறுந் திறமையுடையன் ஆகான்; வெயிலே காயினும் மழையே பெய்யினும் கொண்ட கருமத்தை முடிக்கும் வலிமை யுடையன் ஆகான்; அவன் பிறர்துணை விரும்பும் பெண்மையுடையவனாகவே கருதப் படுவான். இக் குறையை யகற்றச் சாரணீயம் உதவும் வகைதான் என்ன? இவ்வியக்கஞ் சார்ந்தோர் உடற் பயிற்சி செய்கின்றனர்; உடல் ஆக்கந்தரும் ஆடல் பல புரிகின்றனர்; உழைப்பின் உயர்வு கருதி விடாது உழைக்கும் பழக்கம் கொள்கின்றனர்; உடலின் உரம் அழிக்கும் செயற்கை வழிப்பட்ட ஆடம்பர வாழ்க்கையை வெறுக்கின்றனர்; உடலின் உரம் ஆக்கும் இயற்கை வழிப்பட்ட எளிய வாழ்க்கையை விரும்புகின்றனர். வீடு விட்டு வெளிவாசம் (Camping) நாடுகின்றனர்; ஆங்கு மண்ணோடும் செடியூடும் புதரூடும் ஓடியாடுகின்றனர்; வெயிலில் உலர்ந்தும் மழையில் நனைந்தும், காற்றில் திரிந்தும் ஐம்பெரும் பூதங்களுடன் ஒன்றி வாழ்கின்

றனர். இத்தகையோர் A. முதல், E. ஈறாக வுள்ள 'விட்டமின்க'ளுக்குக் கோட்டாவி விடார்; தாதுபுஷ்டி லேகியங்களையோ, வீரியவிருத்திக் குளிகைகளையோ நாடமாட்டார்.

இனி, உளப்பயிற்சியின் தன்மையைக் காண்போம். சாரணீயப் பயிற்சி கூட்டங் கூட்டிக் கொடியேற்றிச் சில விளையாட்டுகளை யாடி, வளையம் புகுதல், பந்தம் சுழற்றல், கத்தி வீசல்: கம்பிமீதோடல், கம்பநுனி நிற்றல் முதலிய கழைக் கூத்தர் இயல்பு காட்டிப், 'பாடித்தீ' (camp fire) முன்னே பாடசாலையையும் ஆசிரியரையும் பழித்து நடிப்பதில் அடங்கி விடுவதன்று, உள்ளத்தைப் பண்புபடுத்தக் கூடிய பயிற்சி வகைகளும் எடுத்தாளப்படவேண்டு மென்ற உணர்ச்சி நம்மவர்பாற் பரவிவருவது போற்றத் தக்கதே. மேற்கூறிய முப்பகுதினரில் அவரவர் பருவநிலைக் கேற்றவாறு உள்ளப் பயிற்சிக்குற்ற முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. உள்ளம் பண்புபடுவதற்குப் புலனறிவே மூலதனம். ஐம்பொறிகளும் தகுந்தபடித் திறம்பட வேண்டும். நுண்ணிய நிகழ்ச்சியையுங் கிரகிக்க வேண்டும். சாரணீயத்தில் இணைப்புள்ள ஆடல் பாடல்களும் ஏனைய கலைப் பயிற்சிகளும் இந் நோக்கத்தில்தான் ஈடுபடுகின்றன. உள்ளத்தை ஒழுங்குபடுத்துதற்கெனவே சாரணச் சட்டமும் (Scout law) வாக்குறுதியும் (Promise) வகுக்கப்பட்டிருக்கின்றன. தவிர வெளி வாழ்க்கையால் (camp life) வரும் பயனைக் கவனிக்க! ஆங்குள்ள நலக்குறைவுகள் பல; அவை சிலருக்குத் துன்பமாகவுந் தோன்றும். பனி பொழியும் பிப்ரவரி மாதத்திலே பாடித்தீ துணைகொண்டு புழுதிமேற் படுத்துறங்குவதேன்? சொர சொரப்புள்ள சாணையிற் பன்முறை தேய்க்கப்பட்ட வயிரமே ஒளி சிறந்து மதிப்பேறுகின்றது. உள்ளம் தேர்வடைய வேண்டுமானால் பலவகையான துன்பங்களையும் அநுபவித்தல் வேண்டும்: வந்தடையும் துன்பங்களை வரவேற்கவேண்டு, அவற்றிற்கு அஞ்சியோடுபவன் கடிக்க வரும் நாயிடமிருந்து ஓடுபவனை யொப்பான். நமது பண்டைக் கால மன்னர் தமது வாழ்க்கையின் அந்திக் காலத்திலே அரசு துறந்து வனவாசத்தை நாடியதேன்? அரச இன்பங்களை விட்டு ஆரணியத் துன்பங்களைத் தேடியதேன்? ஆண்டவன் அடி காணுதற்குவேண்டிய ஆண்மை பெறுதற்கன்றோ? உள்ளப் பயிற்சி வழியே 'உண்மைமையை'க் கண்டுணர்தற் கன்றோ?

மேலும் குருளையருக்குப் சாரணருக்கும் திரிசாரணருக்குந் தலைவராவோர் அவர்களுடன் கலந்து வாழ்கின்றனர். மூத்த சகோதரன் நிலைநின்று நல்வழிசொல்லிக் காட்டுவதுடன் வாழ்ந்துகாட்டுகின்றனர்; அன்புநெறியால் ஆட்கொண்டு அறிவுறுத்துகின்றனர்? உள்ளப்பயிற்சிக்கு ஒத்தசாதனங்களில் இவ்விருதிறத்தவர் உறவு நேர்மையும் ஒன்றன்றோ?

சாரணீயத்தில் மற்றொரு சிறப்புமுண்டு. பணி செய்யப்புகுந்தோர் பிறரை அன்பராய் நினைத்து ஒழுக வேண்டுமே! கீழ்ச்சாதியினரையும் மேற் சாதியினரையும், செல்வரையும் வறிவரையும், தமது



மதத்தவரையும் பிறமதத்தவரையும், தமது நாட்டாரையும் பிறநாட்டாரையும் ஒரு நிலையில் வைத்து எண்ண வேண்டும்; அன்னாரை அன்பராயுங் கொள்ள வேண்டும். ஏன்? ஏற்றத்தாழ்வு உணர்ச்சி வேற்றுமையுணர்வை யெழுப்பும்; வேற்றுமை எழ அன்பு அகலும். அத்தகைய மனநிலையில் பணி செய்கிறேன் என்று சொல்லல் சொல் அளவிற் பயன்படலால், செயலிற் பயன்படாது; அது அன்பர் பணியாகாது. இவ்வுண்மைக்கு ஒத்தே சாரணீயம் அன்பு பெருக்கும் சோதர முறையைக் கையாளுகின்றது; சாரணச் சோதரமுறை, சாதிச் சோதரமுறையை, ஊர்ச் சோதரமுறையை, மதச் சோதர முறையை, நாட்டுச் சோதர முறையை, உலகச் சோதரமுறையைக் கையாளுகின்றது. மெய்த்துறவிகள் முத்தி யடைவதாய்ச் சொல்லப்படுகிறதே! கருத்தென்ன? அவர்கள் பாசம் துறந்தவர்கள். பாசம் வேற்றுமையை யடியாய்ப் பிறப்பது. வேற்றுமையை மறக்கப்பாசம் நீங்கும்; அதாவது சுய நலப்பாசம் நீங்கும். இவர்கள் வாழ்க்கை நீத்தவர் என்று உரைப்பதன் கருத்தும் இதுவே. உலகத்தையும் உலகத்தாரையும் வெறுப்பவர் என்று சொல்வதற்கில்லை, அவ்வண்ணமாயின் அதே உலகத்தையும் உலகத்தாரையும்படைத்துக்காப்பவனுடைய அன்புக்கு உரித்தாக இயலுமா? ஆகேவ முக்தர்கள் இவ்வேற்றுமைகழித்து ஒற்றுமை கண்டவர்கள்; உலகமக்களை ஓரினமாய்க் கண்டவர்; அவ்வழியே ஆண்டவன் நிலையை யுணர்ந்தவர்கள். எனவே, சாரணீயம் கையாளும் சோதரமுறை எத்துணைச் சீரிய கருத்துகொண்டது! 'அன்பர் பணிக்கு' எத்துணை உதவி புரிவது! சாரணீயம் சமயப்பற்று அறுப்பது, நாஸ்திகம் வளர்ப்பது என்று எண்ணும் அன்பர்கள் இவ்வுண்மையைச் சிந்திக்க! சோதர முறைப்பயிற்சியில் ஒருசில ஆசாரங்கள் செலாவணியாகா. ஆனால் ஆசாரமே சமயமா? சமயம் செழிக்க ஆசாரம் வேண்டு மென்பதை மறுப்பாரில்லை! எத்தகைய ஆசாரம் என்பது தான் கேள்வி. மக்கள் மனங்கவரும் ஆசாரம் வேண்டும்; காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ற ஆசாரம் வேண்டும். ஆகவே சாரணீயம் சமய வுணர்ச்சியை அழிப்பதன்று: சோதர முறை மெய்ச்சமய வுணர்ச்சியை, ஆன்மா விளக்கங்காட்டும் சமய வுணர்ச்சியை வீறுகொண்டு எழச் செய்வதேயாகும்.

'அன்பும் அறனும் உடைத்தாயின் வாழ்க்கை
பண்பும் பயனு மது.'

[திருவள்ளுவர்]

# குழந்தைகளுக்கு அடக்கமும், நற்குணங்களும் அமைவது எப்படி?

வித்வான் B. A. பாஷ்யம் அய்யங்கார், M.A.,L.T., மாம்பலம்.

குழந்தைகள் நற்குணங்களோடு விளங்க வேண்டுமானால் அவர்களுக்கு நல்ல பழக்கங்கள் உண்டாவதற்கேற்ற முறைகளைக் கையாள வேண்டியது அவசியம். உபாத்தியாயர்கள் நீதிகளை உபதேசிப்பதாலும், தாமே நல்ல ஒழுக்கங்களைக் கைக்கொள்வதாலும் சிறுவர்கள் ஒருவகையாகத் திருந்துகிறார்கள் என்பது உண்மையே; எனினும், நீண்ட பயிற்சியால் மட்டுமே நன்னடக்கை குழந்தைகளிடத்தில் உறுதிப்படுகின்றது. ஆகவே பிள்ளைகளை நற்செய்கைகளிற் பழக்க வேண்டுவது ஆசிரியரின் சிறந்த கடமையாகும்.

பழக்கங்கள் ஏற்படுவது எப்படி? ஒரே செய்கையைப் பல்காலும் பயின்று பழகியவனுக்கு அச்செய்கை வேரூன்றி நிலைத்து விடுகின்றது. அதைத் தவிர வேறு தொழிலில் அவன் மனம் செல்லாது. நமது நடத்தைகளும், எண்ணங்களும், ஒழுக்கங்களும் பலமுறை பயிலப்படுவதால் உறுதிபெற்று நிலைத்த பழக்கங்களை உண்டாக்கி அப்பழக்கங்களில் ஒரு ருசியையும் ஆவலையும் மூட்டி வைக்கின்றன. உண்மை, நிதானம், இரக்கம், பணிவு முதலிய குணங்கள் இவ்வகைப் பயிற்சியாலேயே ஏற்படுகின்றன. இப்பழக்கங்களை மனிதனின் இரண்டாவது இயற்கை எனக் கருதுவதும் இது பற்றியேயாம். ஆவல், அச்சம், இன்பத்தில் விழைவு, துன்பத்தில் வெறுப்பு முதலிய இயற்கைத் தன்மைகளைப்போலவே பழக்கங்களும் நாளடைவில் மனிதனின் சுபாவங்களாக மாறிவிடுகின்றன.

மனிதன் பழக்கங்களைக் கைக்கொள்கின்றான். எனினும், அவற்றுக்கு அடிமைகளாய்த் தன் மதியும் அறிவும் இழந்து கேடுறலாகாது.

1. ஆகவே குழந்தைக்கு ஒருபழக்கம் ஏற்படுவதற்கு முன் அப்பழக்கம் ஏற்படுவதற்குப் போதுமான தூண்டுகோலாய் இருப்பது என்னவென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

2. அப்பழக்கம் முதிர்ந்து உறுதியடைவதற்காகப் பலமுறை பயிலப்படவேண்டும். அப்படி பயிலப்படாவிட்டால் குழந்தையின் புத்தி மாறி வேறு செய்கையில் திரும்பிவிடும். ஆகவே, குழந்தைப் பருவமே பழக்கங்கள் ஏற்பட்டு உறுதி பெறுவதற்குத் தகுந்த காலம்.

3. குழந்தைக்கு நற்பழக்கம் ஏற்படுவதற்கு ஆசிரியரின் நடக்கைகளும் காரணம் என்று சொல்லலாம். சிறுவர்கள் பிறரைப்போல் தாமும் நடக்கவேண்டும் என்னும் இயல்பினர். பார்த்துத் தான் பார்த்தபடி



ஒழுகுவது இயற்கையில் மனிதனுக்குள்ள ஒரு சிறப்பியல்பாகும். குழந் தைப் பருவம் முதற்கொண்டே பார்த்ததைத் தாமும் பயில்வதைச் சிறு பிள்ளைகளிடம் நாம் காண்கின்றோம். ஆகவே, உபாத்தியாயர்கள் தாம் செய்யும் ஒவ்வொரு செய்கையிலும் மிகவும் சாக்கிரதையாய் இருக்கவேண் டும். நாம் சிற்சில சமயங்களில் தவறி நடப்பதும், குழந்தைகளின் மனத் தில் நன்கு பதிந்து விரைவில் அவர்களைத் துர்ப்பழக்கத்தில் செலுத்தி விடும்.

4. நற்பழக்கங்களைப் போதிக்கையில் குழந்தைகள் அவற்றை உடனே கைக்கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தை உபாத்தியாயர் அமைத் துக்கொடுக்கவேண்டும். அச்சந்தர்ப்பத்தை நெகிழவிடாதபடித் தாமத மின்றிக் குழந்தைகளின் மனம் அப்பழக்கத்தில் உறுதியாகப் பற்றும்படி அடிக்கடி தூண்டி வரவேண்டும்.

5. நற்பழக்கங்கள் உண்டாதற்குத் தடையாகத் தோன்றக்கூடிய விபரீதமான செய்கைகளில் குழந்தைகளின் மனம் செல்லாதபடி காக்க வேண்டியதும் அவசியமாகும்.

6. குழந்தைகள் தாமே கொள்வன, தவிர்வன அறிவதற்குத் துணை புரியவேண்டும். நிதானித்துச் சிந்தனை செய்யவும், திருந்திய தீர் மானங்களைக் கொள்ளவும் குழந்தைகளைப் பழக்கி வரல் வேண்டும். இவ் வகையாகக் குழந்தைகளை வளர்த்து வந்தால் அவர்கள் நற்குணங்களைக் கைக்கொள்வது எளிதாகின்றது.

நற்பழக்கங்களுக்கும், நற்குணங்களுக்கும் உள்ள தொடர்பை அறிந்து உபாத்தியாயர்கள் பிள்ளைகட்கு முதலில் நல்ல பழக்கங்களை ஏற் படுத்திக் தரல் வேண்டும். பழக்கங்களிற் பயிலும் குழந்தைகளின் குணமும் திருந்திச் செம்மையுறும். பழக்கங்களின் தொகுதியையே குணம் என்கிறோம். குழந்தைக்குக் குழந்தை இக்குணம் மாறுபடும். குழந்தைகளின் சிறப்பியல்புகளை அறிதற்கு இக்குணங்களே தக்க சாதக மாகின்றன. மனோதத்துவங்களை யொட்டியே குணங்களும் அமைகின் றன. மனோதத்துவத்தை அறிவதும் அதற் கேற்ற நன்னடத்தையை தெளிந்து அதை அக்குழந்தை கைக்கொள்ளத் துணைபுரிவதும் உபாத்தி யாயருடைய முக்கிய தொழிலாகும். குழந்தைகளின் சித்தத்தையும் உணர்ச்சியைகளையும் தூய நிலைமையில் நிறுத்திப் பாதுகாப்பது மிகவும் அருமையான வேலை. மனத்தின் ஒருமைப்பாடு, உண்மையில் நோக்கம், நேர்மை, நியாயத்திற்குக் கட்டுப்படுதல்—முதலிய நற்குணங்களை நற்பழக் கங்களைப்பெற்ற குழந்தைகளிடத்தில் காணலாம். அப்படிப்பட்ட குழந்தை தன் கடமைகளைப் பிறர் தூண்டுதலின்றித் தானே சந்தோஷத்தோடு செய் யும் வன்மையைப் பெறுகின்றான். கஷ்டங்களையும், சோர்வையும் பொருட் படுத்தாமல் தான் எடுத்த வேலையைத் தானே முடிக்கவேண்டும் என்ற மனோ திடமும் அக்குழந்தையினிடத்திற் காணலாம். உயர்ந்த நோக்கங்களை மனோதிடத்துடன் பற்றி நிற்கும் அருங்குணம் அக்குழந்தையினிடத்துக்

காணப்படுகின்றது. ஆகவே, ஆசிரியன் குழந்தைகளுக்கு உயர்ந்த நோக்கங்களில் ஆவலும், அந்த நோக்கங்களைக் காரியகரமாக்குதற்கேற்ற மனோதிடமும் உண்டாக்கக் கூடிய வசதிகளைத்தேடி அமைக்கவேண்டும்.

சிறுபருவத்தில் நிர்ப்பந்தத்தாலேயே குழந்தைகளை நற்பழக்கங்களில் மனம் செலுத்தும்படி செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கியல்பாகவுள்ள சேஷ்டைகளைத் தடுத்துச் சரியாகத் திருப்பி நற்பழக்கங்களில் அவர் மனம் செல்லும்படி செய்வதே உபாத்தியாயரின் தொழிலெனக் கருதப்பட்டு வந்தது. இதைச் செய்வதில் கையாளப்படும் முறைகள் பலவகைப்படுகின்றன. நய உரைகளால் தூண்டியும், அறிவுரை கூறியும், பரிசளித்து ஊக்கத்தை எழுப்பியும், சிலசமயங்களில் ஒறுத்துக் கண்டித்தும் குழந்தைகள் நற்பழக்கங்களை கைக்கொள்ளச் செய்கிறோம். சில சமயங்களில் நீதிக்கதைகளையும், நீதிமொழிகளையும் சொல்லி அவர்களின் மனத்தைத் திருப்ப முயல்கிறோம். இதனால் உபாத்தியாயர்கள் அதிக பலனை எதிர்பார்க்க முடியாது. 'உலக நீதி' வாக்கியங்களைப் போன்ற பாடங்களைச் சொல்லி வைப்பதால் சில தீமைகள் விளைவதும் உண்டு. 'இதைச் செய்யாதே' என்று சொல்லுவதற்குப் பதிலாக 'இதைச் செய்' என்று நற்குணத்தில் ஊக்கம் எழுப்புவதே நேர் முறையாகும். இனியவை கூறி இன்னாதவற்றை அவர்கள் அறியாவகை, மறைக்கவேண்டும். விதிகளில் மனம் செல்லும்படி நயமாகக் கூறி விலக்குச்களை அவர் அறிய வொட்டாது தடுக்க வேண்டும். வயது வந்த பிள்ளைகள் வேண்டுமானால் விலக்குகளையும் இன்னாதவற்றையும் அறியலாம். எவ்வளவு தூரம் நிர்ப்பந்த முறையை ஒதுக்க முடியுமோ அவ்வளவும் ஒதுக்கலாம். உத்ஸாகமும், களிப்பும், மதிநுட்பமும், வாய்ந்த இளம் பருவமுள்ள உபாத்தியாயர் சமயோசிதமாக ஒழுகிக் குழந்தைகளின் நம்பிக்கையையும், அன்பையும் பெற்று நன்னடத்தைக்குரிய வசதிகளை வகுப்பறை, படம் போடுமிடம், விளையாடுமிடம், சாரணத்தொழிற் செய்புங்களம், தோட்டம், வாசகசாலை, வெளியே சென்று சுற்றிப்பார்க்கு மிடங்கள்—முதலிய எல்லா இடங்களிலும், ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

1. சாரண இயக்கத்தில் ஈடுபடும் சிறுவர்களிடம், அகூயை, கோபம், பொய், சோம்பேறித்தனம், தன்னலம்,—முதலிய துர்குணங்களைக் காணவே முடியாது. பரோபகாரசிந்தை, உண்மை, முகமலர்ச்சி, இனியது கூறல், சுறுசுறுப்பு முதலிய சிறந்த குணங்களைக் கொண்டு சாரணர்சிறுவர்கள் மிளிர்வதைக் காண்கின்றோம்.

2. வாசக சாலையில் ஒழுங்காய்ச் சந்தடி செய்யாமல் தன் முறை வரும்போது செல்வதும், அங்குத் தான்பெறும் புஸ்தகங்கள், படங்கள், சித்திரங்கள் முதலியவற்றைச் சாக்கிரதையாய்க் கையாளப் பழகுவதும், தோழர்களிடத்தும், உபாத்தியாயரிடமும் மரியாதையோடும் அன்போடும் நடந்து கொள்வதும், வாசகசாலை விதிகட்கு ஒட்டி ஒழுகுவதும்—முதலிய அரிய குணங்கள் அமைகின்றன.



3. வகுப்பில் பாடம் நடக்கும்போது கவனம், மௌனம், பெருந்தன்மை, சொல்வன்மை முதலிய குணங்கள் தெளிவாகின்றன. சட்டாம்பிள்ளைக் கடங்கி, வஸ்துக்களையும் வகுப்பறையையும்சுத்தமாக வைத்துக்கொண்டு பாடங்களைச் சாவதானமாகக் கவனித்து மனத்தைப் பண்படுத்திக்கொள்வது சாத்திய மாகின்றது.

4. பூந்தோட்டத்தில் குழந்தைகள் இயற்கையழகில் ஈடுபடுகின்றனர். தூய்மை, அழகு முதலியவற்றைக்கண்டு பாராட்டலும், செடி கொடிகளிடத்தும் உயிர்தன்மை கண்டு அன்பு செலுத்தலும், அலங்காரத்திலும், வனப்பிலும் மனம் பற்றுதலும்—தோட்டத்தில் சிலகாலம் தினந்தோறும் பழகுவோர்க்கு எளிதில் உண்டாகின்றன.

5. விளையாடுமிடங்களில் சில அருமையான நற்குணங்கள் காணலாம். தலைவனுக்குக் கட்டுப்பட்டு வரம்புகளை மீறாமல் எதிரிகளிடத்தும் பட்சமும், சகோதரத்துவமும் நிரம்பி வீரம், அன்பு, பணிவு, மலர்ச்சி முதலிய குணங்களால் பொலிவுபெற்றுக் குழந்தைகள் செருக்கித்திரிவது கண் கொள்ளக் காட்சி யன்றோ ?

6. சரித்திர சம்பந்தமாகவோ, தொழில், கலைவளம் பெற்றமையாலோ பிரசித்தி பெற்ற வெளியூர்களுக்குக் குழந்தைகளைக் கூட்டங் கூட்டமாய் அழைத்துச் செல்லும்போது உபாத்தியார்கள் தமது குழந்தைகளை மிக அருமையாகப் பாராட்டிச் சிறந்த குணங்களைக்கற்பியாமலே அவர் மனங்கொண்டு கைப்பற்றத் துணை புரிகின்றனர். தன் சௌகரியங்கட்குப் பிறரைத்துன்புறுத்தாமை, கிடைத்தது கொண்டு மகிழ்ச்சியடைதல், தோழர்களிடத்து அன்புடைமை, கஷ்டங்களைக்கண்டு மனஞ்சுளியாமை, உலகியல் அறிவு—முதலிய சிறந்த குணங்கள் இத்தகைய பிரயாணங்களால் உண்டாகின்றன. உலகியலறிவு விரிந்து வாழ்க்கையை அதற்குத்தக்க அமைத்துக் கொள்வதற்கு இத்தகைய அனுபவங்கள் மிகவும் துணையாகின்றன. இங்ஙனம் குழந்தைகள் தமது குணங்களைச் சிரமமின்றி விரைவிற் கோடற்குரிய இவை போன்ற சந்தர்ப்பங்கள் பின்னும் பல ஆசிரியர்க்குத் தோன்றலாம்.

7. குழந்தைகள் இயற்கையிலேயே தமக்கெனப் பொருள்களைச் சேகரிப்பதிலும், சேகரித்த பொருள்களைப் பாராட்டிக் காப்பதிலும் மனமுள்ளவர். ஆசிரியர் குழந்தைகளைப் படங்கள், ஸ்டாம்புகள், விதைகள், அபூர்வமான பழய நாணயங்கள் முதலியவற்றைச் சேகரித்தற்கும் அவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்தற்குமுரிய முறைகளைக் கற்பித்து ஊக்கமெழுப்பி வந்தால் அவர்கள் இப்பழக்கங்களை நிலையாகப் பெற்று அவ்வத் துறைகளில் சிறந்த ஆராய்ச்சியாளராய்ப் பின்னால் விளங்கக்கூடும்.

8. சில குழந்தைகள் சிற்சில பக்ஷிகளையும், மிருகங்களையும் வளர்ப்பதில் உற்சாகமுடையராய் இருக்கின்றனர். இதனை ஒரு சிறந்த பழக்கமாகவே கற்றோர் கொள்கின்றனர். பிராணிகளிடத்தும், பறவைகளிடத்தும் அன்புடையராய்ப் பரோபகார சிந்தை நிறைந்து, எல்லா

உயிர்களையும் கடவுளின் ஒரே சிருஷ்டி எனக் கண்டு அன்பு செலுத்துதற்கு இப்பழக்கம் துணைபுரியும்; ஆகையின் ஆசிரியர் தம் மாணவர்களை அவர்களுக்கும் பறவையையோ விலங்கையோ வளர்த்து வரவும் அவற்றுக்குக் காலாகாலங்களிற் செய்து கவனிக்கவேண்டிய விஷயங்களில் மனம் செலுத்தவும் எப்போதும் அவைகளிடத்து அன்பு காட்டி வரவும் பழக்க வேண்டும்.

இத்தகைய சந்தர்ப்பங்களைக் கைசோரவிடாமல் ஊக்கத்தோடு ஆசிரியர் குழந்தைகளிடத்து அன்போடும் பொறுப்போடும் பழகி வந்தால் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்களே இனிய சுவர்க்கமாகும். இங்ஙனம் பயின்ற குழந்தைகள் சிறந்த மாணவர்களாக விளங்கி வயது வந்த பின் தக்க பதவிகளைப்பெற்று நாட்டிற்குப் பேரணிகளாகத் திகழ்வர் என்பது திண்ணம்.

---

## ஆனந்தவழி

வித்துவான் சி. கே. நடேச கவுண்டர், முனிசிபல் ஐஸ்கூல், கோயம்புத்தூர்.

(ஆனந்தக் களிப்பு)

ஆனந்தம் ஆகவே பாப்பா—வாழ
அன்பாய்ச் சிலவழி கூறுவேன் கேட்பாய் (ஆனந்த)

1. காலையில் நேரத் தெழுக—முகம்
கைகால் கழுவிக் கடவுளைத் தொழுக (ஆனந்)

2. வீட்டில் கிடைத்த உணவைச்—சுவை
மிக்கதென் றெண்ணி விருப்புடன் உண்க (ஆனந்)

3. பள்ளிக்கு வேண்டிய பாடம்—எல்லாம்
உள்ளம் பதிய உவப்பாய்ப் படிக்க (ஆனந்)

4. மணி அடிப்பதற்கு முன் பள்ளிக்—கூடம்
வந்துன் இடத்தில் மகிழ்வாய் அமர்க (ஆனந்)

5. ஆசிரியர் சொல்லும் பாடம்—எல்லாம்
ஆசையாய்க் கேட்டுன் மனத்தில் அமைக்க (ஆனந்)

6. கூடப் படிக்கின்ற பேர்கள்—உடன்
கூடிச் சிநேகமாய் வாழத் தெரிக (ஆனந்)

7. கந்தை யானாலும் கசக்கிக்—கட்டிக்
காடியானாலும் குளித்தே குடிக்க (ஆனந்)

8. மாலையில் நல்விளையாட்டு—மகிழ்
வாகக் கலகம் இல்லாமற் பயில்க (ஆனந்)

9. விளக்கு வைத்தஉடன் பாடம்—எல்லாம்
விருப்பாய்ப் படித்து முடித்துண வுண்க (ஆனந்)

10. அதிக நேரம் விழிக்காமல்—மன
அமைதி யுடன் படுத் துறங்குக நன்றாய். (ஆனந்)

## கதா மூலம் 2.

---

சினிமா படங்கள் மூலமாக இதர நாடுகளில் கல்வி பயின்று வருகின்றனர். நமது நாட்டில் வயதிற்கேற்றன வல்லாதனவாகிய புகைப்படங்களைக் காண்பித்து வருகின்றனர். சிறுவர்களுக் கென்று கதைகளையும் இதர பாடங்களையும் சலனபடங்களில் காண்பித்து வந்தால் மேன்மையாயிருக்கும். கதை சொரூபத்தையே அறியாத சிறுவர் சிறுமிகளைக்கொண்டு நடிக்கவைத்து, அவர்களது பிற்கால வாழ்க்கையையே மாற்றிவிட்டனர். அவர்களுக்கு நக்ஷத்திரங்கள் என்று பெயருமிடுகின்றனர். பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் அடங்காத சிறுவர்கள், தினம் அந்த நாடகங்களுக்குச் சென்று களிப்புற்று, நடித்தவர்களுடைய நடையுடை பாவனைகளில் பழகியும் வருகின்றனர். (உலக ஜனங்களில் பாதி பேருக்குச் சாப்ளின் மீசை!) வானரங்கள் தங்கள் தொழிலை மனிதனுக்கு விற்று விட்டன.

ஆதிகாலங்களில் மதசம்பந்தமான கதைகளையும், நீதிகளையும் ரிஷிகள் உபதேசித்து வந்தனர். மதகுருக்களும் வெகுகாலம் வரை போதித்து வந்தார்கள். ரிஷியும் குருவும் சென்ற பிறகு, அத்தொழிலை நாடகமும் சினிமாவும் ஏற்றுக்கொண்டன. பஞ்சதந்திரக்கதைகளை ஆடத் தெரியா விட்டால் மத சம்பந்தமானக் கதைகளை ஏன் தொடவேண்டும்? நமக்கு ஆதாரமா யிருப்பவை யனைத்தும் குட்டிச்சுவராய்ப் போய்விட்டன.

கதைகளை மூன்று விதமாக நாம் ஆவாஹனம் பண்ணிக்கொள்ளுகிறோம். அவை, கேட்டல், பார்த்தல், சொல்லுதல் என்பனவாம். அல்லது புராணக்கதைகளைச் சிரவணம் பண்ணுதல், நாடகம், உபதேசம் எனவும் கொள்ளலாம். நாடகங்களின் சங்கதிதான் தெரிந்துவிட்டது. ஜனங்களும் பேண்மை யடைந்துவிட்டார்கள். சினிமா வந்தபின் இந்தியருக்கு ஒரு குறையுமில்லை. இனி, ஹரி கதா விஷயங்களைச் சிறிது கூறுவோம். புராணக்கதைகளை பாகவதர்கள் ஒருவாறு காப்பாற்றி வருகின்றனர் என்று சொல்லலாம். (ரிஷிகளைப்போல சங்கீத மில்லாத கதையுமல்ல. குருக்களைப்போல தத்துவார்த்த உபதேசங்களு மல்ல.) தற்கால ஜனங்களது மனோபாவத்தையொட்டி, சங்கீதம், ஹாஸ்யம், உபகதைகள் முதலிய சின்னங்களைக்கொண்டு கதைகளை மனத்தில் பதிய வைக்கிறார்கள். சொல்லுபவர் தம் சாமர்த்தியத்தினால் சபையோரைக் கொஞ்சநேரம் அழவும், சிரிக்கவும், பிரமிக்கவும் செய்வதைப் பார்க்கிறோம். பஜனைகளும் நம்க்கு உபயோகமாகிற சாதனமே. வடதேசங்களில் இவை பெருமையாகப் பாராட்டப்படுகின்றன.

ஹரி கதைகளையும் நமக்கு இன்னும் சாதகமாகும்படி மாற்றி விடலா மென்று சொன்னோமே, அது எப்படி யென்பதைக் கூறுவோம்.

நன்றாகப் படித்தவர்கள், பிறருக்கு உபதேசம் செய்பவர்கள், பழைய சிறப்புக்களைக் காப்பாற்றுபவர்களாகிய பாகவதர்கள், கேட்பவரனைவரையும் வயதுக்கேற்றபடி திருப்தி செய்யவேண்டும். சிறுவர்களுக்கு ஹாஸ்யமும், வாலிபருக்கு இன்பமும், குடும்பிகளுக்குப் பக்தி மார்க்கமும், வயோதிகருக்கு ஞானமும் புகட்டவேண்டும். சாகிறவரையிலும் நந்தன் சரித்திரமானால் கிழவிகளுக்கு அங்கு என்ன வேலை? (அன்றைய தினம் சினிமாவுக்குப் போய்விடுகிறார்கள்.)

பாகவதர்கள் நம்மை இழுப்பதுபோல் நாமும் அவர்களை இழுத்துப் பார்ப்போம். கொஞ்சநாட்களுக்கு முன்பு சங்கீதமே தெரியாமல் இருந்தவர்கள் இப்பொழுது அதிகமாகப் பாடுகின்றனரே, ஏன்? சங்கீத பாடத்தைக் கவர்ன்மெண்டாரும் கவனிக்க ஆரம்பித்ததன் பயன், தனிப் பாடமாக வைத்து விருத்தி செய்துவருகிறார்கள். கேட்பவருக்குத் தெரியாத நூதன பாட்டுக்களைச் சபையில் பாட முடிகிறதில்லை. அப்படியே பாகவதர்களைக் கொண்டும், பாடத்திற்கு அநுகூலமாய் வாரமொருமுறையாவது பாடசாலைகளில் கதைகள் செய்ய ஏற்படுத்துவதால் என்ன தவறு உண்டாகும்? இம்முயற்சி வீண் போகாது. ரேடியோ மூலமாகவும் சிறுவர்களுக்குக் கதைகள் சொல்லிவருகிறார்கள்.

கதை சொல்லும் திறமை வேறு. வர்ணிக்கும் இடங்களில் கேட்பவர்களும் இருப்பதுபோல் விவரிக்கவேண்டும். ஹாஸ்யத்தை அடிக்கடி சொல்லி, கேட்பவரை ரஸிக்கச் செய்யவேண்டும். சலன படச்சாலைகளில் சில சமயம் பார்க்கலாம். படத்தில் ஒருவன் மற்றவனை அடிக்கும்போது, படம் வேடிக்கை பார்க்க வந்தவன் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவனை (மூன்றாம் வகுப்பு டிக்கெட் வாங்கியவன்) கோபத்தோடு அடிக்கிறான்—ஏன்? அவ்வளவு கதையில் பக்தி. இராவிட்டால் குலசேகரர் தம் பட்டாளத்தை தனுஷ்கோடிவரையில் அழைத்துக்கொண்டு போவாரா? கேட்பவர் மனம், கதை நிகழும் இடங்களுக்கெல்லாம் போகவேண்டும்-கதாநாயகருடன் கூடவே செல்லவேண்டும். காணாத இடங்களையெல்லாம் பார்க்கவேண்டும். சிறுவர்கள், காணாத விஷயங்களை, ஊகித்தறியும் சக்தியினால் பார்த்து அறியவேண்டும். பெரியவர்கள் கூட கதையின் சுவாரஸ்யத்தினால் மெய்ம்மறந்து மூர்ச்சையாவதுண்டு. சிலருக்கு ஆவேசமும் உண்டாகும். இதெல்லாம் சொல்லுபவருடைய சாமர்த்தியம். ஜாதி, மதம், தேசம், காலம், முதலியவற்றிற்குத் தக்கபடி சொல்லவேண்டும். கேட்பவர்களுக்கு வெறுப்பும், விரோதமும் உண்டாகாத விஷயங்கள் அல்லது கதைகளைத் தான் சொல்லவேண்டும்.

கதைகளை மாற்றவோ, சேர்க்கவோ நமக்கு அதிகாரம் உண்டு. ஈசாப்பின் நரியே தான் சோமசன்மாவிடம் வந்தது என்று சொல்லுவதால் ஆக்ஷேபம் ஒன்றும் வராது. ‘வடைதின்ற நரியே திராக்ஷைக்கு அலைந்து, கிடைக்காமையால் கிணற்றில் இறங்கி ஆட்டை ஏமாற்றிற்று.



பிறகு ஒரு மானை வலையில் சிக்கவைத்தது தடியால் அடிபட்டது’ என்று பலகதைகளைச் சேர்த்துச் சொல்லுவதாலும் கதையின் நோக்கம்கெடாது. கதைகளை மாற்றவும் கூடும். நடுப்பாலத்தில் இரண்டு ஆடுகள் அக்கரைக்குப்போகச் சண்டையிட்டன என்றும், புத்தியுள்ள இரண்டு வேறு ஆடுகள் ஒன்றின்மேல் ஒன்று ஏறி அக்கரை அடைந்ததாகவும் படித்திருக்கிறோம். இக்கதைகளில் இரண்டு ஜதை ஆடுகள் வேண்டியதில்லை. சண்டையிட்ட ஆடுகளே களைத்துப் பாலத்தில் சற்றுநேரம் படுத்துக்கொண்டிருந்தன. அவற்றுள் ஒன்று சமயம் பார்த்து மற்றொன்றின் முதுகின்மேல் கால் வைத்தேறி அக் கரைக்கு ஓட்டம்பிடித்தது என்று மாற்றிச் சொல்லலாம். ஆனால் ஒரு சிறு ஆக்ஷேபம். புத்தியில்லாமல் சண்டையிட்டு இரண்டும் ஆற்றில் விழுந்து மாண்டன, புத்தியோடிருந்தவை தப்பின என்னும் நீதிகளைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டாமா, என்று கேட்கலாம். ஆட்டைச் சாகடிப்பானேன்? புத்தி பத்து நிமிஷம் கழித்து வந்தது என்றால் போகிறது. (ஒவ்வொரு கதையையும் இப்படி ஆபாசமாய் மாற்றிவிடவேண்டும் என்று கூறவில்லை).

ஆசிரியர்கள் கதைப்பாடம் சொல்லும்போது சித்திரங்களையும் (ஸ்தூலசித்திரம்) வரைந்து விளக்கினால், சிறுவர்களுக்கு நன்கு பதியும். ராக்ஷஸன் இப்படித்தான் இருப்பான் என்று வாயினால் எவ்வளவு நேரம் வர்ணித்தாலும் சந்தேகம் தீராது. கோணலானபடமாயினும் ஒன்று வரைந்து, இவன் தான் ராவணன் என்று சொன்னால், அது அவர்களுக்கு ஆனந்தமாயிருக்கும். ஹாஸ்யத்திற்காக, நரிநாயகர், ஆட்டார், நீள் செவியர், வாலர் என்று பிராணிகளை மனிதர்களை யழைப்பதுபோல் சொன்னால் அவர்கள் இன்பமாய்க் கேட்பார்கள். சிலவகுப்புவரையில் சொன்னகதையை (முழுக்கதையையோ, அல்லது ஒரு பாகத்தையோ) நடிக்கும்படி செய்தால் இன்னும் கதைகள் நன்றாகயிருக்கும்.

கடைசியாக ஒரு விஷயம். யாரோ இரண்டு அரசகுமாரர்களுக்கும் படிப்புவாராமலிருக்கவே, சோமசன்மா பலகதைகளின் மூலமாக அவர்களுக்குப் புத்திபுகட்டினதாகப் படித்திருக்கிறோம். ஆகவே, கல்வியும் அறிவும் கதைகளின் மூலமாக உண்டாகின்றனவென்று ஏற்படுகிறது. சிறுவயதில் கேட்ட பல கதைகள், பெரிய வயதில் உபமானமாகச் சொல்லப்படுகின்றன-புண்ணியகதைகளின் பலனும் நமக்குத் தெரியும்.

அ. ஸ்ரீநிவாஸவரதாசாரி.

# பத்திராதிபர் குறிப்பு

**கல்விவாரம் :**

தென்னிந்தியக் கல்வி வாரம் அக்டோபர் 5உ முதல் 11உ வரை நடைபெறும். பொது ஜனங்களுக்குக் கல்வியின் அவசியத்தைத் தெளிவாகக் காட்டுவதே கல்வி வாரத்தின் முக்கிய நோக்கமாகும். ஆரம்பப் பள்ளிக்கூடங்களுள்ள இடங்களில் இக்கல்வி வாரத்தை கமிட்டியார் குறிப்பிட்டபடி பொறுப்புடன் நடத்துவது உபாத்தியாயர்களின் கடமையாகும். நாடெங்கும் ஆரம்பப் படிப்பு விஷயமாய் கிளர்ச்சி எற்பட்டிருப்பதை ஆசிரியர்கள் அறிந்திருக்கிறார்கள். பொது ஜனங்களுக்குக் கல்வியிலும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும் பற்று உண்டாகும் வழியை நாம் காட்டவேண்டும். ஜனங்களின் கவனக்குறைவே ஆரம்பப்படிப்பின் முன்னேற்றத்திற்குப் பெரிய தடையா யிருப்பதாக அதிகாரிகளும் ஜனப்பிரதிநிதிகளும் சொல்லுகிறார்கள். ஏராளமாய்ப் பணத்தைச் செலவுசெய்து ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் தலையிட்டுக்கொண்டு நமது பிரமுகர்கள் பிரதிநிதிகளாகின்றனர். அநேக மகாநாடுகளும், பொதுக் கூட்டங்களும் தேர்தலையொட்டி கூடுகின்றன. இச்சமயங்களில் ஜனங்களுக்குக் கல்வியின் அவசியத்தையும், அதிகாரிகளுடன் ஒத்து உழைப்பதினால் தேசத்திற்கு ஏற்படும் லாபத்தையும் எடுத்துக்காட்டுபவர் எவருமில்லை. ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டுவதும் கட்சிச் சண்டையும் பொதுக்கூட்டங்களின் முக்கிய அம்சங்களாகக் காணப்படுகின்றன. ஆரம்பப் படிப்பின் முன்னேற்றத்தில் பிரதிநிதிகளுக்குசிரத்தை யிருப்பதாக நாம் நினைப்பதற்கில்லை; ஸ்தலஸ்தாபனங்களின் ஆட்சியில் அடங்கிய ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களின் சம்பளம் சரியாகக் கொடுபடுவதில்லையானால், பிள்ளைகளின் படிப்பு எவ்வாறு அபிவிருத்தி யடையக்கூடும்? புத்தகம் வைக்கும் வகையிலும், விதிகளை அனுசரிக்கும் வகையிலும், பல குறைகள் இருப்பதாகப் பத்திரிகைகளிலிருந்து வெளியாகிறது. அதிகாரிகளாவது தம்முடைய உத்தியோகஸ்தர்கள் மூலமாய்ப் பொதுஜனங்களுக்குத் தாம் செய்துவரும் சீர்திருத்தங்களைத் தெளிவாகத் தெரிவிக்கலாம். உபாத்தியாயர்களாவது ஆங்காங்கு கிராமங்களில் ஜனங்களுக்கு ஆரம்பக்கல்வியின் அவசியத்தையும், இது சம்பந்தமாய் சர்க்கார் செலவு செய்துவருவதையும், குழந்தைகள் படிப்பினால் அடையக்கூடிய லாபத்தையும் விளங்கச் செய்ய



வேண்டும். ஏராளமாய்ப் பணம் ஆரம்பப்படிப்பு சம்பந்தமாய் செலவழிதலையும் ஜனங்களின் கவனக் குறைவால் செலவிற்கேற்ற பலன் ஏற்படாததையும் ஜனங்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும். பள்ளிக்கூடம் சரிவர ஐந்து வருஷகாலம் போய்வரும்படி பெற்றோர்கள் பிள்ளைகளை அடுத்தடுத்துத் தூண்டாததால், லக்ஷக்கணக்காய் செலவழித்த பணம் வீண் செலவாய் முடிவதை புள்ளி விவரங்கள் மூலமாயும் படங்கள் மூலமாயும் உபாத்தியாயர்கள் ஜனங்களுக்குக்கூறி அவர்களுக்குக் கல்வியில் உணர்ச்சியை உண்டுபண்ண வேண்டும். அதிகாரிகளும் ஆரம்பப்படிப்பில் உண்மையான சிரத்தையைக் காட்டுபவர்கள் மூலமாய் கிராமங்களில் ஆரம்பப்படிப்பினைப்பற்றிப் படங்கள் முதலிய சாதனங்களைக்கொண்டு பிரசாரம் செய்ய ஏற்பாடுசெய்தல் அவசியம். ஜனங்களுக்கு உத்ஸாகமில்லையென்று சொல்லிக்கொண்டிருப்பது நியாயமில்லை. பிரதிநிதிகளும் தலைவர்களும் மேலே கூறியவார்த்தைகளை பிரசங்கமேடைகளிலும், அறிக்கைகளிலும் சொல்லுவது அவர்களுடைய கவனக்குறைவையேக் காட்டுவதாகும். ஜனங்களைத் தூண்டுவது பிரதிநிதிகளின் கடமையல்லவா? இக்கல்வி வாரத்தில் அநேகர் ஆரம்பப் பாடசாலைகள் முழுமனதுடன் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது. பிரதிநிதிகளையும், அதிகாரவர்க்க உத்தியோகஸ்தர்களையும் வரவழைத்து கல்விவாரப் பொதுக்கூட்டங்களில் ஜனங்களுடைய ஒத்துழைப்பின் அவசியத்தையும் தேசத்திற்கும் பிள்ளைகளுக்கும் ஏற்படக்கூடிய பயனையும் தெரிவிக்கும்படி ஆசிரியர்கள் முயலவேண்டும்.

162274
சென்னை-600
JL
T~211, N36
N36.1.5-7

# எலிமெண்டரி பாடசாலைக்குரிய புத்தகங்கள்


* இவை தெலுங்கிலும் வெளியிடப்பட்டுள்ளது

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| செந்தமிழ் வாசகம் முதற்புத்தகம் | .... | 0 | 2 | 6 |
| செந்தமிழ் வாகம் இரண்டாம் புத்தகம் | .... | 0 | 3 | 6 |
| செந்தமிழ் வாசகம் மூன்றும் புத்தகம் | .... | 0 | 4 | 6 |
| செந்தமிழ் வாசகம் நான்காம் புத்தகம் | .... | 0 | 5 | 6 |
| செந்தமிழ் வாசகம் ஐந்தாம் புத்தகம் | .... | 0 | 6 | 6 |
| நித்தில வாசகம் இரண்டாம் புத்தகம் | .... | 0 | 3 | 6 |
| நித்தில வாசகம் மூன்றும் புத்தகம் | .... | 0 | 4 | 6 |
| நித்தில வாசகம் நான்காம் புத்தகம் } அச்சில் | | | | |
| நித்தில வாசகம் ஐந்தாம் புத்தகம் } அச்சில் | | | | |
| சிறுவர் சிற்றிலக்கணம் | .... | 0 | 4 | 0 |
| * இந்திய சரித்திர தீபம் முதற் புத்தகம் | .... | 0 | 5 | 0 |
| * இந்திய சரித்திர தீபம் இரண்டாம் புத்தகம் | .... | 0 | 6 | 0 |
| * பூகோள சாஸ்திரம் சென்னை இராஜதானி | .... | 0 | 8 | 0 |
| நவீன சுகாதார வாசகம் இரண்டாம் புத்தகம் | .... | 0 | 4 | 0 |
| நவீன சுகாதார வாசகம் மூன்றும் புத்தகம் | .... | 0 | 5 | [illegible] |
| சமூக வாசகம் (Civics) முதற் புத்தகம் | .... | 0 | 4 | [illegible] |
| சமூக வாசகம் (Civics) இரண்டாம் புத்தகம் | .... | 0 | 5 | [illegible] |
| அறநெறி விளக்கம் - கதிர் க | .... | 0 | 5 | [illegible] |
| அறநெறி விளக்கம் - கதிர் உ | .... | 0 | 6 | [illegible] |
| அறநெறி விளக்கம் - கதிர் ௩ | .... | 0 | 7 | [illegible] |
| திருக்கண்ணப்பன் | .... | 0 | 5 | |
| குமணன் கொடைவீரன் | .... | 0 | 3 | |
| * நல்ல எறும்பு | .... | 0 | 3 | |
| * பொன் நாணயம் | .... | 0 | 4 | |
| * நல்ல குழந்தை | .... | 0 | 3 | |
| * மூன்று சிறு கதைகள் | .... | 0 | 4 | |
| பரந்தாமன் | .... | 0 | 3 | |
| * சத்திய நாராயணன் | .... | 0 | 4 | |
| * பால கோபால லீலை | .... | 0 | 4 | |
| * பொற்காலக் கணிதம் முதற் புத்தகம் | .... | 0 | 5 | |
| * பொற்காலக் கணிதம் இரண்டாம் புத்தகம் | .... | 0 | 6 | |
| * பொற்காலக் கணிதம் மூன்றும் புத்தகம் | .... | 0 | 8 | |
| * பொற்காலக் கணிதம் நான்காம் புத்தகம் | .... | 0 | 9 | |

**கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,**

16, செம்புதாஸ் தெரு, சென்னை.

# இரக்ஷணைப் படம்—6




நிற்கும் வண்டிகளின் பின்னால் நிற்பது அபாயம் தரக்கூடியது. வண்டி புறப்படும் பொழுது நிற்பவரை இடித்துத் தள்ளலாம்.

நிற்கும் வண்டிகள் பின்னாலிருந்து ரஸ்தாவின் குறுக்கே செல்ல வேண்டுமானால் இருபக்கமும் பார்த்து, அபாயம் இல்லை என்று தெரிந்த பின்னரே செல்லவேண்டும்.

## எலிமெண்டரிப் பாடசாலை முதல் 5 வகுப்புகளுக்கான புத்தகங்களின் விவரம்

### 1-ஆம் வகுப்பு

| | |
|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—1 | 0 2½ |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 1 |

### 2-ஆம் வகுப்பு

| | |
|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—2 | 0 3 |
| இயற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 3 |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 1 |
| கிண்டர் கார்டன் தினசரிக் கணக்கு 2-ம் புத்தகம் | 0 3½ |

### 3-ஆம் வகுப்பு

| | |
|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—3 | 0 4 |
| கோபால் வாய்பாடு (தமிழ், தெலுங்கு) | 0 1 |
| இயற்கை அற்புதங்கள் (முதற் புத்தகம்) | 0 3 |
| சிறுமணிக் கதைகள்—S. S. அருணகிரி நாதர் | 0 5 |
| தினசரிக் கணக்கு (முதற் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 4 |

### 4-ஆம் வகுப்பு

| | |
|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—4 | 0 4½ |
| ஸிவிக்ஸ் (முதற் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 5 |
| இயற்கை அற்புதங்கள் (2-ம் புத்தகம்) | 0 4 |
| தினசரிக் கணக்கு (2-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 5 |
| இந்து தேசச் சரித்திரக் கதைகள் முதல் பாகம் | 0 4½ |
| New Era English Readers First Primer—Edited by H. Champion | 0 5 |

### 5-ஆம் வகுப்பு

| | |
|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம்—5 | 0 6 |
| இயற்கை அற்புதங்கள் (3-ஆம் புத்தகம்) | 0 5 |
| கம்பர் அல்லது கவியரசர்—A. N. கன்னையா | 0 5 |
| ஸிவிக்ஸ் (2-ஆம் புத்தகம்) S. சுப்பிரமணிய அய்யர் | 0 6 |
| இந்து தேச சரித்திரம் V. ஜெயராம அய்யர், B.A., L.T. | 0 5 |
| தினசரிக் கணக்கு (3-ஆம் புத்தகம்) S. ஜகந்நாதன் | 0 5 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை | 0 4 |
| New Era English Readers Second Primer—Edited by H. Champion | 0 6 |
| New Era Story Books, Book I By C. Gordon | 0 3 |

பி. ஜி. பால் அண்டு கம்பெனி, புத்தக வியாபாரிகள்,
12, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை.

---

A GUIDE TO

## ELEMENTARY SCHOOL TEACHERS

By Mrs. R. S. SWARNAMBAL, M.A., L.T.
with a foreword by D. S. REDDI, M.A, (*Oxon.*)

English Edn.] 178 pp. with 45 Illustrations [Price Re. 1

This guide gives exhaustive practical suggestions and hints which will help teachers to draw up time-tables and syllabuses, and impart instruction on satisfactory useful lines and thus improve the general efficiency of all Elementary Schools of the Presidency. *(Descriptive illustrated Booklet free)*

**G. SRINIVASACHARI & SONS,**
EDUCATIONAL PUBLISHERS,
**Narasingapuram Street — Mount Road, Madras.**

*N.B.*—**Tamil Edition—in the Press**

Regd. No. M. 3473

# தென் இந்திய ஆசிரியர்
# ஐக்கிய காப்பு நிதி

## ஆசிரியர்களுடையதே

பின் காலத்திற்கு ஒரு மூலதனம்

ஆசிரியர்களுக்குள் —

— ஐக்கியமும் பெருகும்

எட்டு வருஷங்களுக்கு முன் தென் இந்திய
ஆசிரியர் சங்க ஐக்கிய காப்பு நிதி
ஸ்தாபிக்கப்பட்டு
செழித் தோங்கி வளர்ந்து வருகிறது.
உடனே சேருங்கள்

— மற்ற விவரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதலாம். —

41, சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

M. K. Ramamurti,
கௌரவ காரியதரிசி.

Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.